பாரதியின் மொழிச் சிந்தனைகள்

4206

1988/1

811
மா

யாழ்ப்பாணம்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

பாரதியின் மொழிச் சிந்தனைகள்

ஒரு மொழியியல் நோக்கு

பொது சன நூலகம்
26 FEB 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

எம். ஏ. நுஃமான்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட வெளியீடு

பாரதியின் மொழிச் சிந்தனைகள்
ஒரு மொழியியல் நோக்கு

ஆசிரியர் : எம். ஏ. நுஃமான்
மொழியியல் விரிவுரையாளர்
மொழி பண்பாட்டு ஆய்வுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

வெளியீடு : கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

முதற் பதிப்பு : மே 1984
உரிமைகள்: ஆசிரியருக்கு

அச்சு : புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
360, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

விலை ரூ. 40/00

2
494.811

A Linguistic Evaluation of Bharathi's Thoughts on Language

By
M. A. NUHMAN
Lecturer in Linguistics
Dept. of Languages and Cultural Studies
University of Jaffna, Sri Lanka.

Occasional Paper No. 1
Faculty of Arts
University of Jaffna, Sri Lanka.

First Edition: May 1984
Copyright with the author

Printed at: St. Joseph's Catholic Press
360, Main Street, Jaffna.

Price Rs. 30-00

பாரதி ஆய்வில்
புதிய பரிமாணங்களைக் காட்டிய
பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் நினைவுக்கு
இந்நூல் சமர்ப்பணம்.

உள்ளே

அணிந்துரை
முன்னுரை

பாரதியின் மொழி உணர்வு 1..9
பாரதியும் தமிழ் இலக்கணமும் 10..17
மொழி மாற்றமும் பாரதியும் 18..33
மொழி வளர்ச்சியும் பாரதியும் 34..54
இந்தியாவுக்குப் பொதுப் பாஷை 55..61

குறிப்புகள் 61..68
உசாத்துணை நூல் விபரம் 68..70
பின்னிணைப்பு 71..106

அணிந்துரை

யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப் பெற்றுப் பத்து ஆண்டுகள் நிறைவுறுகின்றன. ஒரு பல்கலைக் கழகத்தின் பிரதான பணி கற்பித்தல் என்று பலரும் எண்ணும் அளவுக்கு நாம் கற்பித்தலிலேயே அதிக கவனத்தைச் செலுத்தி வந்துள்ளோம். ஆனால் உண்மையில் ஆராய்ச்சியும் வெளியீடும் பல்கலைக் கழகத்தில் முக்கிய இடத்தைப் பெறவேண்டும்.

இதனை உணர்ந்தே பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆராய்ச்சிச் சஞ்சிகைகளை வெளியிட நமது கலைப்பீடம் வசதிகளைச் செய்திருந்தது. ஆனாலும் எதிர்பார்த்த அளவுக்கு ஆராய்ச்சி வெளியீடுகள் கலைப்பீடத்திலிருந்து வெளிவரவில்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆகவேதான் சிறப்பாகத் தமிழில் ஆராய்ச்சி வெளியீடுகளை வெளியிட விரும்புவோருக்கு ஊக்கமளிக்கும் வகையில் சென்ற ஆண்டு ஒரு வெளியீட்டுத் திட்டம் தொடக்கப்பட்டது. இதற்கமைய தரமான ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் காலத்துக்குக் காலம் தனியாக வெளியிட வசதி செய்யப்பட்டது. இவ் வசதிகளைப் பயன்படுத்தியே திரு. எம்.ஏ. நுஃமான் எழுதிய இந்த ஆய்வுக்கட்டுரை வெளிவருகின்றது.

திரு. நுஃமான் அவர்கள் எமது பீடத்தில் மொழியியல் விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகின்றார். மொழியியலிலும் தமிழ் இலக்கியத்திலும் ஈடுபாடுள்ள இவருடைய வெளியீடுகள் பல முன்னர் வெளிவந்துள்ளன. இந்த வெளியீடு எமது கலைப்பீடத்தில் உள்ள பலரை இத்தொடரில் ஆய்வுகளை வெளியிடுவதற்கு ஊக்குவிக்கும் என நம்புகின்றேன். இச்சந்தர்ப்பத்தில் திரு. நுஃமான் அவர்களுக்கு எனது பாராட்டுக்களையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

கா. இந்திரபாலா
கலைப்பீடாதிபதி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
10 மே 1984

முன்னுரை

மகாகவி சுப்ரமணிய பாரதியின் மொழிபற்றிய கருத்துக்களைத் தொகுத்து நோக்கி, அவற்றை நவீன மொழியியற் கண்ணோட்டத்தில் ஓரளவு விரிவாக மதிப்பிடுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

நவீன வங்காள உரைநடை, செய்யுள் நடை ஆகியவற்றின் உருவாக்கத்திலே ரவீந்திர நாத் தாகூர் பெரும் பங்கு வகித்ததைப் போல, இருபதாம் நூற்றுண்டின் தேவைகளுக்கு ஏற்ற வகையிலே தமிழ் மொழியை[1] நவீனப்படுத்தியதில்[2] பாரதியின் பங்கு மிக முக்கியமானது என்பதில் ஐயத்துக்கு இடமில்லை. பேச்சு மொழி, எழுத்து மொழி (சலித் பாஷா, சாது பாஷா) எனப் பிரிந்து கிடந்த வங்காள மொழியிலே, பேச்சு மொழிக்கு முதன்மை கொடுத்து ஒரு வளமான மொழி நடையை உருவாக்கியவர் என தாகூர் கருதப்படுகிறுர்.[3] தமிழிலே அவ்வாறு பேச்சு மொழியை ஒட்டிய ஒரு நவீன மொழி நடையை உருவாக்க முயன்றவன் பாரதி. கமில் சுவலபில், தெ. பொ. மீனுட்சி சுந்தரன் ஆகியோரும் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளனர்[4]. இந்த முயற்சியில் பாரதி எவ்வளவு தூரம் வெற்றியடைந்தான் என்பது அறிவியல் அடிப்படையில் விரிவாக ஆராயப்பட வேண்டியதாகும். எனினும் பொதுவாகக் கூறுமிடத்து பாரதியின் கவிதைகளும் உரைநடை ஆக்கங்களும் எளிமைக்கும் நவீனத்துவத்துக்கும் முன்னேடிகளாக அமைந்தன என்பதில் சந்தேகமில்லை. பாரதியின் இத்தகைய மொழிச் சாதனைகளுக்கு மொழி பற்றிய அவனது சிந்தனைகளே அடிப்படையாக அமைந்துள்ளன எனலாம்.

மொழி மாற்றம், மொழி வளர்ச்சி என்பன பற்றிய பாரதியின் கருத்துக்கள் அறிவியல் ரீதியானவையாகவும் புரட்சிகர மானவையாகவும் உள்ளன. அதே வேளை ஆச்சரியப்படத்தக்க வகையில் தமிழின் பிறப்பு, சிறப்பு, தொன்மை, வலிமை, இனிமை என்பனபற்றிப் பாரதி ஆங்காங்கே கூறியுள்ள சில கருத்துக்கள் அறிவியலுக்குப் புறம்பான பொதுஜன ஐதீகங்களைப் (popular myths) பிரதிபலிப்பனவாக இருப்பதையும் காண்கின்ருேம். வெவ்வேறு காலகட்டங்களில் பாரதி கூறியுள்ள மொழிபற்றிய சில கருத்துக்கள் தம்முள் முரண்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. இவ்வகையில், நவீன தமிழின் முன்னேடிகளுள் முதல்வனுன பாரதியின் மொழிச் சிந்தனைகளிலே காணப்படும் பலத்தையும் பலஹீனத்தையும் விளங்கிக் கொள்வதற்கு இத்தகைய ஆய்வுகள் அவசியமாகும். மொழி பற்றிய நமது கண்ணேட்டங்களைப் புனரமைத்துக் கொள்வதற்கும் இவை வழிவகுக்கும்.

இவ்வாய்வுக்குப் பாரதியின் உரை நடை ஆக்கங்களும் கவிதைகளுமே மூலமாகக் கொள்ளப்பட்டுள்ளன. பாரதியின் ஆக்கங்கள் பல்வேறு தொகுதிகளாகவும் பல பதிப்புக்களாகவும் வெளிவந்துள்ளன. அவற்றுட் குறிப்பிட்ட சில பதிப்புக்களையே நான் பயன்படுத்தி யுள்ளேன். உசாத்துணை நூற்பட்டி

யலில் அவற்றின் விபரங்கள் தரப்பட்டுள்ளன. பாரதியின் எழுத்துக்கள் அனைத்தும் பூரணமாக நமக்குக் கிடைத்துள்ளன எனக் கூற முடியாது. இதுவரை கிடைத்துள்ள பாரதியின் கட்டுரைகளிலே தனியே மொழி பற்றி எழுதப்பட்டவை மிகக் குறைவாகும். வேறு சில கட்டுரைகளிலே மொழி பற்றிய சில முக்கியமான குறிப்புக்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இவை வாசகருக்குப் பயன்படும் எனக் கருதி இவ் வாய்வுக் கட்டுரையின் பின் இணைப்பாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்ட இந்த மதிப்பீடு முடிந்த முடிபானது அல்ல; ஒரு முதல் முயற்சி மட்டுமே யாகும். இப்பொருள் பற்றி மேலும் பலர் சிந்திக்கவும் ஆராயவும் இது ஒரு தூண்டு கோலாக அமையும் என நம்புகின்றேன்.

1982ஆம் ஆண்டில் நாடெங்கும் பாரதி நூற்றுண்டு விழாக் கொண்டாடப்பட்ட போது அதை ஒட்டி பாரதியின் மொழிச் சிந்தனை பற்றி ஒரு கட்டுரை எழுதினேன். அதன் ஒரு பகுதி ''மொழி வளர்ச்சி–பாரதியின் கருத்துக்கள்'' என்னும் தலைப்பில் கட்டுப்பெத்தைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க வெளியீடான நுட்பம் இதழில் வெளிவந்தது. பின்னர் அதனை விரிவு படுத்தி எழுத முயன்றதன் விளைவே இவ் வாய்வுக் கட்டுரையாகும்.

இக் கட்டுரையின் கையெழுத்துப் பிரதிகளைப் பல முறை படித்துப் பார்த்து ஆக்க பூர்வமான ஆலோசனைகளும் திருத்தங்களும் கூறி, எனது ஆய்வு இப்போதைய வடிவினைப் பெற வழிகாட்டிய எனது ஆசிரியரும் மொழியியல் பேராசிரியருமான கலாநிதி. சு. சுசீந்திரராஜா அவர்களுக்கு எனது நன்றிகள் என்றும் உரியன. இதில் குறைபாடுகள் காணப்படின் அவை எனது குறைபாடுகளாகும்.

இவ்வாய்வினை வெளியிடும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்துக்கும், குறிப்பாக இது நூல் உருப்பெறக் காரணமாய் அமைந்தவரும், பல்கலைக் கழகத்தில் ஆய்வுத் துறையின் வளர்ச்சிக்காக அயராது உழைப்பவருமான கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்களுக்கும் எனது நன்றிகள் உரியன. இந்நூலை அழகிய முறையில் அச்சிட்டு உதவிய யாழ்–புனிதவளன் கத்தோலிக்க அச்சக ஊழியர்களுக்கும், அச்சுப் படிகளை திருத்துவதில் உதவிய நண்பர் ஏ.ஜே. கனகரத்தின அவர்களுக்கும் அட்டை அமைப்பை உதவிய சேரனுக்கும் எனது நன்றிகள்.

எம். ஏ. நுஃமான்

1

பாரதியின் மொழி உணர்வு

1.1 மொழி உணர்வு : பொதுப் பண்புகள்

மொழி உணர்வினை செ. வை. சண்முகம் பின்வருமாறு வரையறை செய்கின்றார்.

> ''மொழி உணர்வாவது மொழிபற்றிய உணர்வு. அதாவது என்ன மொழி, அந்த மொழி எப்படிப்பட்டது, அதனுடைய சிறப்பு என்ன? ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்கள்; தாய்மொழியில் காணப்படும் கிளைமொழிகள், அவை வேறுபடும் விதம்; பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் உள்ள தொடர்பு; அண்டை நாட்டார் மொழிபற்றிய கருத்துக்கள் (அந்த மொழியின் பண்பு; அந்த மொழிக்கும் தாய் மொழிக்கும் உள்ள வேறுபாடு) ஆகியவைபற்றிப் பொதுமக்களிடையே பரவலாகக் காணப்படும் எண்ணங்கள், அறிவு பூர்வமாக இல்லாமல் உணர்ச்சி பூர்வமாகப் படித்தோரிடையே காணப்படும் மொழி உணர்ச்சிகள், மொழியுணர்வு என்பது இவற்றையெல்லாம் குறிக்கும்.''

(12:81) இவ்வகையில் தாய்மொழி பற்றியும் பிற மொழி பற்றியும் கற்றோரும் கல்லாதோரும் கொண்டிருக்கும் அறிவு பூர்வமற்ற உணர்வுகளையும் மனப்பாங்குகளையும் மொழி உணர்வு எனலாம். மொழி உணர்வே பல மொழி இயக்கங்களுக்குக் காரணமாய் உள்ளது.

மொழி உணர்வு சமூக, அரசியல் நிலைமைகளின் வெளிப்பாடேயாகும். ஒவ்வொரு மொழி இயக்கத்துக்குப் பின்னாலும் சில சமூக, அரசியல் காரணிகள் இருப்பதை நாம் இனங்காண முடியும். இடைக்காலப் புலவர்களின் தமிழ் உணர்ச்சிக்கு அக்கால சமய,அரசியல் நிலைமைகளே அடிப்படையாய் அமைந்தன. ''நாயக்கர் கால அரசியற் பண்பாட்டு நிலைமை பரசமயத்தவரையும் பிறமொழியினரையும் வெறுக்கும் தற்காப்பு மனோபாவத்திற்கு வைதீக சமயத் தமிழறிஞர் சிலரை ஆளாக்கி இருந்தது'' என்பர் கைலாசபதி (8:102). பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் உணர்ச்சிக்குத் திராவிட,ஆரிய முரண்பாடே அடிப்படையாய் அமைந்தது. 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எழுதிய கால்டுவல் அவர்களே இதற்கு வித்திட்டவர் என்பர் (8:97–101). தனித் தமிழ் உணர்வு பிராமண எதிர்ப்பையே அடிப்படையாகக் கொண்டிருந்தமை பற்றி கா. சிவத்

தம்பி விரிவாக ஆராய்ந்துள்ளார் (14:22-47). இலங்கையில் சிங்களத் திணிப்புக்கு எதிராகவும், தமிழகத்தில் ஹிந்திக்கு எதிராகவும் அரசியல் அடிப்படையில் தமிழ் உணர்ச்சி வளர்ந்தது சமீபத்திய வரலாருகும்.

இவ் வகையிலே, பாரதியின் தமிழ் உணர்வின் சில அம்சங்கள் இவ் அத்தியாயத்தில் ஆராயப்படுகின்றன. தமிழ் மொழியின் பிறப்பு, சிறப்பு ஆகியவை பற்றியும் வடமொழி பற்றியும் பாரதி கொண்டிருந்த கருத்துக்களும் அவற்றுக்கு அடிப்படையாய் அமைந்த சமுதாய அரசியல் பின்னணியும் அடுத்துவரும் பிரிவுகளில் தனித்தனியாக நோக்கப்படுகின்றன.

1.2 தமிழ் மொழியின் பிறப்புப் பற்றிப் பாரதி

தமிழ்மொழியின் பிறப்புப் பற்றிப் பாரம்பரியமாக நிலவிவரும் கருத்து ஒன்று உண்டு. தமிழும் வடமொழியும் சிவபெருமானுல் படைக்கப்பட்டன என்பதே இக் கருத்தாகும். இதனை மொழிப்பிறப்புப் பற்றிய கடவுட் கொள்கை எனலாம். இடைக்கால இலக்கண ஆசிரியர்களும் புலவர்களுமே இக் கொள்கையின் மூலவர்களாவர். சேனவரையர், திருஞான சம்பந்தர் போன்றோரும் வேறு சிலரும் இக் கொள்கை தமிழ் மக்கள் மத்தியிலே வேருன்றக் காரணமாய் இருந்துள்ளனர்.[5] பத்தொன்பதாம் இருபதாம் நூற்றுண்டுத் தமிழறிஞர் சிலரும் இக் கருத்தைப் பரப்பி வந்துள்ளனர். ஆறுமுகநாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை ஆகியோர் இவ்வகையில் குறிப்பிடத் தக்கவர்களாவர்.[6] இவ்வாறு பன்னெடுங்காலமாக நிலவிவந்த இப் பாரம்பரியக் கருத்தையே, பல வகையிலும் தமிழில் புரட்சிகரமான, நவீன சிந்தனையின் முன்னேடியாய் அமைந்த[7] பாரதியும் கொண்டிருந்தான் என்பது கவனிக்கத்தக்கது. 'தமிழ்நாட்டு மாதருக்கு' என்ற கட்டுரையிலே பாரதி இதுபற்றிப் பின்வருமாறு கூறுகின்றுன்.

> ''ஆதியில் பரமசிவனுல் படைப்புற்ற மூல பாஷைகள் வடமொழி யென்று சொல்லப்படும் சம்ஸ்கிருதமும் தமிழுமேயாம்' என்று பண்டைத் தமிழர் சொல்லியிருக்கும் வார்த்தை வெறுமே புராணக் கற்பனையன்று. தக்க சரித்திர ஆதாரங்களுடையது'' (16:194-5).

இதே கருத்தையே,

> 'ஆதிசிவன் பெற்றுவிட்டான் – என்னை
> ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
> வேதியன் கண்டு மகிழ்ந்தே – நிறை
> மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்

என்ற பாரதியின் கவிதையிலும் காண்கின்றேம்.

மொழியின் பிறப்புப் பற்றிய இக் கடவுட் கொள்கை தமிழில் மட்டு மன்றி, பண்டைக்காலம் முதல் உலகெங்கணும் நிலவி வருகின்றது. கிறிஸ்தவ, இஸ்லாமிய நம்பிக்கையின்படி இறைவனே ஆதாமுக்குப் பேசும் ஆற்றலை வழங்கினன். எகிப்தியர்கள் தோத் (Thoth) என்னும் கடவுளே மொழியைப் படைத்தார் என நம்பினர். பபிலோனியர்களின் நம்பிக்கையின்படி நபூ (Nabu) என்னும் கடவுளே மொழியைக் கொடுத்தார். (38:17). இக் கோட்பாடு சமய நம்பிக்கையின் அடிப்படையில் பிறந்ததாகும். இப் பிரபஞ்சத்தையும் மனிதனையும் கடவுளே படைத்தார் என நம்பிய மக்கள் மொழியும் கடவுளின் படைப்பே என நம்பியதில் வியப்பில்லை.

மொழியின் பிறப்புப் பற்றி அறிஞர்கள் மத்தியிலே பல்வேறு கொள்கைகள் நிலவுகின்றன.[8] கடவுட் கொள்கை அவற்றுள் மிகப் பழமையானதாகும். மனிதனின் பண்டைய ஐதீகங்களுள் இதுவும் ஒன்றாகும். நவீன அறிவியல் இத்தகைய யூகங்களையும் ஐதீகங்களையும் ஏற்றுக் கொள்வதில்லை. இத்தகைய யூகங்கள் நிரூபிக்கப்பட முடியாதவை. ஆயினும் மொழிபற்றி அறிவியல் ரீதியான, புரட்சிகரமான சிந்தனைகள் பலவற்றைக் கொண்டிருந்த பாரதி, தமிழின் பிறப்புப் பற்றிய இந்த ஐதீகம் ''வெறும் புராணக் கற்பனையன்று, தக்க சரித்திர ஆதாரங்களுடையது'' என அடித்துக் கூறியிருப்பது மிகுந்த வியப்புக்குரியது. இங்கு 'சரித்திர ஆதாரங்கள்' என்ற தொடர் அர்த்தமற்றது என்பதற்கு அதிக விளக்கம் தேவையில்லை.

1.3 தமிழ் மொழியின் சிறப்புப் பற்றிப் பாரதி

பழங்காலம் முதலே தமிழ் மொழி தெய்வத்தன்மை வாய்ந்தது என்றும், தனிச்சிறப்புகள் பலவற்றைக் கொண்டது என்றும் கருதப்பட்டு வந்துள்ளது. ''சான்றோர் செய்யுள்களிலே தமிழ் முருகனுடன் தொடர்புடையதாய்க் கூறப்பட்டது; களவியலுரைக் காலமுதல் சங்கமிருந்து தமிழாராய்ந்தாருள் சிவன் தலையானவராய்க் கூறப்பட்டுவந்திருக்கிறார். பக்திப் பாடல்களிலே வடமொழியும் தமிழும் ஈசன் உவக்கும் இரு பெரு மொழிகளாகக் கூறப்படுவதைக் காணலாம்'' (8:103-104). ''குமரகுருபரர், சிவப்பிரகாச சுவாமிகள், தமிழ்விடுதூது ஆசிரியர் முதலிய கவிஞர்களின் ஆக்கங்களைப் படிப்போர்க்கு அவற்றிற் சுழித்தோடும் தமிழுணர்ச்சியும் தமிழபிமானமும் ஆழப் பதிந்தனவாகத் தோன்றும்'' என்கிறார் கைலாசபதி (8:102).

பழந்தமிழ்ப் புலவர்கள் தமிழின் சிறப்பியல்புகளை உணர்த்தும் பல்வேறு அடைமொழிகளைப் பயன்படுத்தித் தமிழ் மொழியைப் புகழ்ந்துள்ளனர். 'செந்தமிழ்' 'தென்தமிழ்' என்னும் தொடர்கள் திருமுறைகளிலும் திவ்விய பிரபந்தத்திலும் காணப்படுகின்றன. கன்னித்தமிழ், பைந்தமிழ், தீந்தமிழ், ஒண்டமிழ், தண்டமிழ், தெய்வத்தமிழ், மூவாத்தமிழ் போன்றன இவ்வாறு பழந்தமிழ்ப் பாவாணர் பயன்படுத்திய வேறு சில அடைமொழிகளாம். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தனது 'மனோன்மணியம்' தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல்களில் தமிழைத் தெய்வமாகப் போற்றியிருப்பது யாவரும் அறிந்ததே. கால்டுவல், போப் போன்ற ஐரோப்பிய அறிஞர்களும் தமிழின் தனிச் சிறப்புப் பற்றிப் புகழ்ந்துரைத்துள்ளனர்.[9]

தமிழின் தனிச் சிறப்புக்கள் பற்றிப் பேசுவோரின் கருத்துக்களின் சாராம்சத்தை நாம் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம் 'தமிழ் மொழி தன்னிகர் இல்லாதது; என்றும் மாறா இளமையுடையது; சொல்வளமும் பொருள்வளமும் மிக்கது; பிற மொழிக் கலப்பின்றித் தனித்து இயங்க வல்லது; இலக்கண வரம்புடையது; இலக்கியச் செழுமை மிக்கது; பழமையானது; இனிமை மிக்கது; தமிழுக்கு நிகரான மொழிகள் உலகில் மிகச் சிலவே அல்லது ஒன்றும் இல்லை.' இத்தகைய கருத்துக்கள் வெறும் மொழி உணர்ச்சியின் பாற்பட்டவை; முற்றிலும் அகநிலைச் சார்பானவை என்பதில் ஐயமில்லை. ஆயினும் இத்தகைய உணர்வுகள் மொழி வளர்ச்சி பற்றிய சில பாதகமான கொள்கைகளைத் தோற்றுவித்துள்ளன. இவைபற்றி செ. வை. சண்முகம் 'மொழி உணர்வு' என்ற தனது கட்டுரையிலே தற்கால மொழியியல் நோக்கில் மிக விரிவாக ஆராய்ந்துள்ளார் (12:81-107).

நவயுகக் கவிஞன் பாரதியிடமும் இத்தகைய மொழி உணர்வின் சில அம்சங்களை நாம் காண்கின்றோம். தமிழ் மொழியைச் சிறப்பித்துப் பாரதி பாடியுள்ள பாடல்கள் நன்கு பிரசித்தமானவை. தமிழ்த்தாய், தமிழ் மொழி வாழ்த்து ஆகிய கவிதைகளிலே பாரதி தமிழின் பெருமை பற்றிப் பாடுவதைக் காணலாம். ''வானம் அளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி'' என்று பாரதி தமிழைச் சிறப்பிக்கின்றான். ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்'' என்ற பாரதியின் வரி பலராலும் கையாளப்படுவது. பாரதியின் இக் கருத்து கவிதைக்குரிய மிகைப்படுத்தல் அல்லது உயர்வு நவிற்சியின் பாற்பட்டது என்று கருதுவதற்கில்லை. 1916ல் சுதேச மித்திரனில் 'தமிழ்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையிலும் பாரதி பின்வருமாறு கூறுகின்றான்.

> ''உலகத்திலுள்ள ஜாதியார்களிலே ஹிந்து ஜாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிக்கு தமிழராகிய நாம் சிகரம்போல் விளங்குகின்றோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு.

இவற்றிலே தமிழைப்போல வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உள்ள பாஷை வேறொன்றுமே இல்லை'' (22:103). இம் மேற்கோளிலே தமிழரின் மேன்மையும் தமிழின் சிறப்பும் அழுத்திக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். இங்கு பாரதி தனக்குப் பழக்கமுள்ளதா கக் குறிப்பிடும் நாலைந்து பாஷைகளிலே சமஸ்கிருதம், ஆங்கிலம், ஹிந்தி, பிரஞ்சு முதலியவை அடங்கும் என்பதும் கவனிக்கத்தக்கது.

ஒரு மொழி ஏனைய மொழிகளைவிட இனிமையானது, சிறந்தது என்று கூறுவதற்கு மொழியியல் ரீதியிலான எவ்வித அடிப்படையும் இல்லை என்பதை நவீன மொழியியலாளர் அழுத்திக் கூறுவர். ஒரு மொழி இனியது அல்லது இனிமையற்றது போன்ற கருத்துக்கள் முற்றிலும் அகநிலைச் சார்பானவையும் (subjective), சமூக நிலைப்பட்டவையுமாகும். ஒவ்வொருவ னுக்கும் அவனது சொந்த மொழி இனியதும் சிறந்ததுமே. இதுபற்றி தெ. பொ. மீனாட்சி சுந்தரன் (தெ. பொ. மீ) கூறுவது இங்கு கருத்தில் கொள்ளத்தக்கது.

> ''உங்கள் தாய்மொழியின் இனிமையை உங்களால் என்றும் மறக்க முடியுமா? தமிழே மிகவும் இனிய மொழியாக நான் கூறுவதாகக் கொள்வோம். மலையாளிகளுக்கு மலையாளமே மிகவும் இனிய மொழி. தெலுங்கர்களுக்கு தெலுங்கே மிக இனிய மொழி. அதுபோல் வங்கா ளிகளுக்கு வங்காளமே மிக இனிய மொழி'' (45;62).

மேலும் சொந்த மொழியிலே ஒருவனுக்கு இருக்கும் 'உள்ளத் தொடர்பும்' ஆற்றலும் வேறு மொழிகளில் இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே தமிழ் மொழியின் இனிமை, வலிமை, சிறப்பு என்பன பற்றி பாரதியும் ஏனையோரும் கூறியுள்ளவற்றை அறிவியல் ரீதியிலான கருத்துக்கள் என நாம் கருதத்தேவையில்லை.

1.4 வடமொழி உணர்வு

தனக்குப் பயிற்சியுள்ள நாலைந்து பாஷைகளிலே தமிழைப்போல வலிமையும், திறமையும் உள்ளத்தொடர்பும் உள்ள பாஷை வேறொன்றுமே இல்லை என்று அழுத்திக் கூறும் பாரதி வேறொரு சந்தர்ப்பத்திலே சமஸ்கிரு தத்தை ஒப்பற்ற பாஷை என்றும் குறிப்பிட்டுள்ளான். 1905ல் பாரதி 'வந்தே மாதரம்' தமிழ் மொழிபெயர்ப்புப் பற்றி எழுதியுள்ள ஒரு குறிப்பிலே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்.

> ''அந்தக் கீதமானது பழமையில் முன்னோர்களால் வழங்கப்பட்டு வந் ததும் ஒப்பற்றதுமான சம்ஸ்கிருத பாஷையோடு தற்காலப் பாஷை

கலப்புற்றுஅமைக்கப் பெற்றிருப்பதால் பூர்வகாலத்துடன் தற்காலத்தை இணைப்பதாக இருக்கின்றது'' (அழுத்தம் நூலாசிரிய ருடையது) (28:126).

வேறு ஒரு சந்தர்ப்பத்திலே சம்ஸ்கிருதத்தைத் 'தேவ பாஷை' யென்றும் பாரதி சிறப்பித்துக் கூறுகிறான்.

''நம் முன்னோர்களும் அவர்களைப் பின்பற்றி நாமுங்கூடப் புண்ணிய பாஷையாகக் கொண்டாடிவரும் ஸமஸ்கிருத பாஷை மிகவும் அற்புத மானது. அதைத் தெய்வபாஷை என்று சொல்வது விளையாட்டன்று. மற்ற சாதாரண பாஷைகளையெல்லாம் மனித பாஷையென்று சொல்லுவோமானால், இவை அனைத்திலும் சிறப்புடைய பாஷைக்குத் தனிப் பெயர் ஒன்று வேண்டுமல்லவா? அதன் பொருட்டே அதைத் தெய்வ பாஷை என்கிறோம்'' (16:39).

தமிழ், சமஸ்கிருதம் ஆகியவை பற்றிய பாரதியின் கூற்றுக்களிலே ஒரு முரண்பாட்டை நாம் இங்கு காணமுடிகிறது. ஒருபுறம் தமிழே இனியது, சிறந்தது என்றும், மறுபுறம் சமஸ்கிருதம் ஒப்பற்றது, தெய்வீகமானது என்றும் பாரதி கூறுகின்றான். இம் மொழிகள் பற்றிய பாரதியின் மதிப்பீட்டிலே ஒரு சமநிலையைக் காணமுடியவில்லை. இவை அறிவு நிலைப்பட்ட தன்றி உணர்ச்சி நிலைப்பட்ட கூற்றுக்களாகும். தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பாரதிக்கு இருந்த பற்றையே இவை வெளிப்படுத்துகின்றன. இப் பற்று சிலவேளை சமஸ்கிருதத்தில் அதிகமாகவும் சிலவேளை தமிழில் அதிகமாகவும் காணப்படுகின்றது. இப்பற்றின் காரணமாகவே, உலக நாகரீகங்களுக்கெல்லாம் முந்தியதும் மூலாதாரமாக அமைந்ததும் பழைய சமஸ்கிருத நூல்களில் சித்திரிக்கப்பட்ட ஆரிய நாகரீகமே என்றும் இதற்குச் சமமான பழமையுடையது தமிழருடைய நாகரீகம் என்றும் பாரதியால் கூற முடிகிறது (16:194). இங்கு தமிழ் சமஸ்கிருதத்துக்கு இரண்டாம் இடத்தில் இருப்பதைக் காணலாம். எனினும் மனித நாகரீகத்தில் முதல் முதலாக இவ்விரண்டு பாஷைகளிலேதான் உயர்ந்த கவிதையும் இலக்கியங்களும் சாஸ்திரங்களும் ஏற்பட்டதாகவும் பாரதி கூறுகிறான். மற்றப் பாஷைகளின் இலக்கிய நெறிகள் இவற்றுக்குப் பின்னே சமைந்ததாகவும், பல இடங்களில் இவற்றை முன்மாதிரியாகக் கொண்டு அமைந்ததாகவும் பாரதி கூறுகின்றான். ஆரியரும் தமிழருமே உலகத்தில் முதல் முதலாக உயர்ந்த நாகரீகம் பெற்ற ஜாதியார் என்பதும் பாரதியின் கருத்தாகும் (16:195).

பாரதியின் மேற்காட்டிய கருத்துக்களில் காணப்படும் ஆரிய, தமிழ்ப் பெருமித உணர்வும், தகவல்களும் அறிவியலுக்கும் வரலாற்றுக்கும் புறம்பானவை என்பது வெளிப்படை. ஆரிய, தமிழ் நாகரீகங்களுக்

குச் சம காலத்தைய அல்லது அவற்றுக்கு முற்பட்ட உலகப் பெரும் நாக ரீகங்கள், மொழிகள் பலவற்றை நாம் அறிவோம். கிரேக்க, சீன, சுமேரிய, எகிப்திய, அரபு, லத்தீன் மொழிகளும் நாகரீகங்களும் இவற்றுட் சில. இவற்றின் பெருமையும் முக்கியத்துவமும் அறிஞர்கள் பலரால் ஆராயப் பட்டுள்ளன என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

1.5 மொழி உணர்வின் அடிப்படை

பாரதியின் மொழிப்பற்றும், தமிழ்ப் பெருமித உணர்வும் அறிவிய லுக்குப் புறம்பானவை எனினும், அவை அவனது சுதேச உணர்வின் வெளிப்பாடுகள் என்றே நாம் கருதவேண்டியுள்ளது. 1905-ம் ஆண்டில் இருந்தே பாரதியிடம் தேச விடுதலை உணர்வு வளர்ச்சியடையத் தொடங் கிற்று. அதுமுதல் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கும் அவர்கள் புகுத்திய ஆங்கிலக் கல்விக்கும் அதன் விளைவான ஏகாதிபத்திய பண்பாட்டு ஊடுரு வல், ஆங்கில மோகம் ஆகியவற்றுக்கும் பாரதி தீவிர எதிர்ப்பாளியாக இருந்துவந்துள்ளான். ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு, சுதேசப் பண்பாடு, சுதேச மொழிகள் ஆகியவற்றில் அதீத பற்றினைத் தோற்றுவிப்பது உலக நாடுகள் பலவற்றிலும் காணப்படும் ஒரு பொது இயல்பாகும். இந்திய மறுமலர்ச்சி இயக்கத்தின் ஊற்று மூலமாகவும் ஏகாதிபத்திய எதிர்ப்பே அமைந்தது. பிரதேச உணர்வும் தேசிய உணர்வும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இணைந்தே செயற்பட்டன. சுதந்திரப் போராட்டகால இந்தியச் சிந்தனையாளர் பலரிடம் இப்பண்பினை நாம் காணலாம். பாரதி இதற்கு விலக்கல்ல. பிரதேச ரீதியிலான தமிழ்ப் பண்பாட்டு உணர்வும், தேசிய ரீதியிலான முழு இந்தியப் பண்பாட்டு உணர்வும் பாரதியிடம் இணைந்தே காணப்படுகின்றன. சிலவேளை இவை ஒன்றுக்கு ஒன்று முரண் பட்டுக் காணப்படினும் ஏகாதிபத்திய எதிர்ப்புக்குப் பலமான ஆயுதங்க ளாகவே அவை பயன்பட்டன.

பாரதியின் தமிழ் உணர்வு ஆங்கில மோகத்துக்கு எதிரானதாகும். பெரும்பான்மையான படித்த சமூகத்தினர் ஆங்கில மோகத்தில் ஆழ்ந்து தமிழைப் புறக்கணித்த ஒரு காலப்பகுதியிலே வாழ்ந்தவன் பாரதி. பிரித் தானிய ஏகாதிபத்தியத்தின் கீழ் ஆங்கிலமே ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் அமைந்து தேசிய மொழிகளின் முழுமையான வளர்ச்சி பாதிக்கப்பட்ட காலப்பகுதி அது. 'கன்னித் தமிழ்' என்ற ஒரு கட்டுரை யிலே அக்காலத்தில் நிலவிய ஆங்கில ஆதிக்கம் பற்றி பாரதி பின்வரு மாறு கூறுகின்றான்.

''தமிழ்ப் பாஷை இறந்துபோய்விடுமென்றும், நமது தமிழ் நாட்டில் எல்லாப் பாஷைகளுக்குமே பிரதியாக இங்கிலீஷ் பாஷை ஏற்படு மென்றும் நம்பிய மூடர்கள் சுமார் 100 வருடங்களுக்கு முன்பு நமது ஜனங்களிலே பலர் இருந்தார்கள். இப்போது கூட அந்த நம்பிக்கையுடையவர் ஆங்கிலேயர்களில் அநேகர் இருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள பாஷைகள் எல்லாம் மடிந்துபோய் அவற்றின் இடத்திலே இங்கிலீஷ் நிலவிவிடும் என்பது இவர்களுடைய எண் ணம்'' (28:104)

1906-ம் 1907-ம் ஆண்டுகளில் ஆங்கில மோகத்தினால் தமிழைப் புறக்கணிப்பவர்கள் பற்றி பாரதி இரண்டு கட்டுரைகள் எழுதியுள்ளான். ஒன்று 'தென்றலுடன் பிறந்த பாஷை' மற்றது 'தமிழ்ப் பாஷைக்கு உள்ள குறைகள்' (பி. ஏ. பரீட்சை தேறிய ஒரு வாலிபனுடைய எண்ணங்கள்). இவ்விரு கட்டுரைகளிலும் ''பொறுப்பென்பதே அற்ற சில மூட வாலிபர் கள் தாம் அரைகுறையாகக் கற்றிருக்கும் அந்நிய பாஷைத் தருக்கு மேலிட்டவர்களாகித் தமிழ் மொழியே இறந்து போய்விடவேண்டுமென்று கூறுவதை நன்கு கண்டித்துப்' பேசுகிறான் பாரதி (21:64). தமிழ்ப் பாஷைக்கு உள்ள குறைகள் என்ற கட்டுரையிலே ஆங்கில மோகியான பி. ஏ. படித்த வாலிபன் தமிழின் இயலாமை பற்றி விரிவாக வாதிடுகிறான்.

''மனிதஜாதி குரங்கு நிலை நின்றும் மாறிக் காட்டு மனிதனின் ஸ்தி திக்கு வந்தபோது உங்கள் தமிழ்ப் பாஷை ஏற்பட்டது. இப்போது உலகம் எவ்வளவோ மாறிப்போய்விட்டது. மனிதனுடைய அறிவு எவ்வளவோ விசாலமடைந்து போயிருக்கிறது. வானத்தில் உள்ள கிர கங்கள், நக்ஷத்திரங்கள், முதலியவற்றையெல்லாம் மனித அறிவு ஊடுருவிச் சென்றிருக்கிறது. பதார்த்தங்களின் அணுக்களிலேயெல் லாம் மனித புத்தி நுழைந்து சென்றிருக்கிறது. பிரகிருதி விநோதங் களை மனிதன் எவ்வளவோ அதிகமாக ஆராய்ச்சி செய்திருக்கிறான். சமுத்திரத்து ஜலம் அனைத்தையும் குடத்துக்குள்ளே எப்படி அடைக்க முடியும். அதுபோல அளவின்றி விரிந்து கிடக்கும் மனுஷ புத்தியின் நவீன சலனங்களையெல்லாம் உம்முடைய பண்டைக்காலத்துத் தமிழிலே கொண்டு நுழைப்பது மிகவும் பிராணுபத்தாய் இருக்கின்றது. நாம் நாகரீகம் அடைய வேண்டுமானால் இந்தத் தமிழ் பாஷையை முற்றும் கைவிட்டுவிடவேண்டும்'' (அழுத்தம் நூலாசிரிய ருடை யது) (27:70).

ஆங்கில மோகியின் கூற்றாக வரும் இப்பகுதியிலே, வளர்ந்துவரும் நவீன அறிவியல் துறைகளுக்கு ஏற்ப தமிழை நவீனப்படுத்த முடியுமா? என்ற கேள்வியே அடிப்படையாக உள்ளது. ஆங்கிலமோகிகள் தமிழில் இது சாத்தியமல்ல என்றே கருதினார்கள். [10]

இத்தகைய ஒரு பின்னணியிலே வாழ்ந்த பாரதி போன்ற ஒரு நவயுகக் கவிஞன் "பொதுவாக இந்நாட்டில் ஆங்கிலம் கற்றோரெல்லாம் சுபாஷாபிமானம் என்பது மிகவும் குன்றியிருப்பது அன்றி, அதன் நயமறியாது திட்டுவதை நினைக்கும்பொழுது நமக்கு வருத்தமுண்டாகிறது" என எழுதியது இயல்பானதேயாகும் (23:64). பாரதியின் தமிழ்ப் பற்றும், தமிழின் இனிமை, வலிமை என்பனபற்றிய உணர்ச்சிக் கூற்றுக்களும் இதன் அடிப்படையில் எழுந்தனவே எனலாம்.

1.6 மொழி உணர்வில் பழமையும் புதுமையும்

பொதுவாக தமிழ் உணர்ச்சியாளர்கள் எல்லாரும் தமிழ் மொழியில் நவீன போக்குகளையும் மாற்றங்களையும் ஏற்றுக்கொள்ளாது, பழைய மரபே உயர்ந்த மரபு எனப் பேணும் மொழிப் பழமைவாதிகளாகவே காணப்படுகின்றனர். தமிழ் மொழியின் பழமை, இளமை, இனிமை போன்றவைபற்றிப் பெருமை கொள்வதோடு தமிழின் தூய்மையைப் பேணுவதே தமது கடமை என்றும் இவர்கள் கருதுகின்றனர். புதிய மாற்றங்களுக்கு அங்கீகாரமளிப்பது தமிழின் சிதைவுக்கே வழிகோலும் என்றும் நம்புகின்றனர்.[11] இவர்களுட் சிலர் உலகின் முதல் தாய்மொழி தமிழே என்றும், தமிழிலிருந்தே வேறு பல மொழிகளும் கிளைத்தன என்றும் நம்புவர்.[12] ஆனால் பாரதியின் தமிழ்ப் பற்றும் மொழி உணர்வும் இவற்றில் இருந்து முற்றிலும் வேறுபட்டனவாகும். பாரதியின் மொழி உணர்வு பழமைவாதத்துக்கு இட்டுச் செல்வதல்ல; பதிலாக நவீனப்படுத்தலுக்கு இட்டுச் செல்வதாகும். 'தெலுங்கு மஹாசபை' என்னும் கட்டுரையில் தமிழபிமானம் பற்றிப் பாரதி பின்வருமாறு அழுத்திக் கூறுவது நமது கவனத்திற்குரியது.

> "தமிழிலிருந்து பூமண்டலத்திலுள்ள பாஷைகளெல்லாம் பிறந்து நிற்பதாகக் கூவின மாத்திரத்தாலே ஒருவன் தமிழபிமானியாக மாட்டான். பள்ளிக்கூடத்து சாஸ்திரங்களெல்லாம் தமிழ்ப் பாஷையில் கற்றுக் கொடுக்கும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழராகப் பிறந்தோர் கூடியிருக்கும் சபைகளிலேயும், தமிழராகப் பிறந்தோர் ஒருவருக்கொருவர் பேசும்போதும் இதர பாஷைகள் பேசாமல் தமிழே பேசும்படி முயற்சிசெய்கிறவன் தமிழபிமானி. தமிழில் புதிய கலைகள், புதிய காவியங்கள், புதிய உயிர் தோன்றும்படி செய்வோன் தமிழபிமானி' (22:209).

தமிழ்ப் பெருமை பேசுவதற்குப் பதிலாக, தமிழின் பயன்பாட்டு எல்லையை விரிவாக்குவதும் தமிழில் புதியன முயல்வதுமே தமிழபிமானத்தின் அடிப்படை என்பது இம் மேற்கோளின் சாராம்சமாகும்.[13] பாரதியின் தமிழபிமானத்தில் இத்தகைய செயற்பாட்டு முக்கியத்துவம் உள்ள அம்சங்களே முதன்மை பெறுகின்றன. இவை பற்றிப் பின்னர் விரிவாக ஆராயப்படும்.

2

பாரதியும் தமிழ் இலக்கணமும்

2.1 இலக்கணம் பற்றிய பொதுக் கருத்துக்களும் பாரதியின் நோக்கும்:

ஒரு மொழியின் இலக்கணம் பற்றி, பொதுவாகக் கற்றவர்கள் மத்தியில் பின்வருவன போன்ற கருத்துக்கள் நிலவுகின்றன.[14]

(அ) ஒரு மொழியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி மொழிப் புலமை மிகுந்த முன்னோர்களால் வகுத்துக் கொடுக்கப்பட்ட விதி முறைகளே இலக்கணமாகும்.
இக் கருத்துப்படி இலக்கணம் என்பது மொழிக்கு வெளியே இருந்து விற்பன்னர்களால் உருவாக்கப்படும் ஒன்றாகும். இவ்வகையில் தமிழுக்கு அகத்தியர், தொல்காப்பியர், பவணந்தி முனிவர் முதலியோர் இலக்கண விதிகளை வகுத்துக் கொடுத்தனர். இவர்கள் வகுத்த விதி முறைகளை மீறுவது இலக்கண வரம்பைச் சிதைப்பதாகும் எனக் கருதப்படுகின்றது.

(ஆ) ஒரு மொழியின் இலக்கணம் என்பது அம் மொழியின் இலக்கணம் பற்றி எழுதப்பட்ட நூல்களில் காணப்படும் விபரங்களாகும்.
இது முதலாவது கருத்தோடு தொடர்புடையது. இதன்படி தமிழ் இலக்கணம் என்பது தொல்காப்பியம், நன்னூல், நேமிநாதம், வீரசோழியம் முதலிய நூல்களில் காணப்படும் விபரங்களாகும். தமிழ் இலக்கணத்தை இந்நூல்களில் இருந்தே நாம் அறிய முடியும்.

(இ) ஒரு மொழியின் இலக்கணம் அம்மொழியைப் பேசும் சிலருக்குத் தான் தெரியும் ஏனையோருக்குத் தெரியாது.
இதுவும் இலக்கணம்பற்றிப் பரவலாக நிலவும் ஒரு கருத்தாகும். இலக்கணம் என்பது இலக்கண நூல்களிலிருந்து படித்தறியவேண்டிய ஒன்று என்பதன் அடிப்படையிலேயே இது பிறந்துள்ளது.

(ஈ) சில மொழிகளுக்கே இலக்கணம் உண்டு; ஏனைய மொழிகளுக்கு இலக்கணம் இல்லை.

இதுவும் ஒரு பொதுக் கருத்தாகும். எழுத்து வடிவம் பெருத, இலக்கண நூல்கள் இல்லாத மொழிகள், திருந்தாத, இலக்கணமற்ற மொழிகள் எனப்படுகின்றன. எழுத்து வழக்குடைய மொழிகளிலும் எழுத்து மொழியே இலக்கண வரம்புடைய சுத்தமான மொழி என்றும் பேச்சு மொழி இலக்கண வரம்பற்ற கொச்சை மொழி என்றும் கருதப்படுகின்றது.

(உ) இலக்கணம் என்பது மொழி வழக்கிலே எது சரி, எது பிழை என்பதைக் கூறுவதாகும்.
இதுவும் பரவலாக நிலவும் ஒரு கருத்தாகும். ''இலக்கண நூலாவது உயர்ந்தோர் வழக்கையும் செய்யுள் வழக்கையும் அறிந்து விதிப்படி எழுதுவதற்கும் பேசுவதற்கும் கருவியாகிய நூலாம்' என ஆறுமுக நாவலரும் கூறியுள்ளார்.

மொழிப்புலமை வாய்ந்த முன்ஞோர்களால் வகுத்துக் கொடுக்கப்பட்ட விதிமுறைகளே இலக்கணம் என்ற கருத்தே மேற்காட்டிய கருத்துக்ளுக்கெல்லாம் அடிப்படையாக உள்ளது. அகத்திய முனிவரே தமிழுக்கு முதல்முதல் இலக்கணம் வகுத்துக் கொடுத்தவர் என்பது தமிழில் நிலவும் ஒரு மரபுவழிக் கருத்தாகும். பாரதியும் இக் கருத்தையே கொண்டிருந்தான். பாரதி இதுபற்றிப் பின்வருமாறு கூறுகின்ருன்:

''தமிழ் பாஷைக்கோ, இலக்கணம் முதல்முதலாக அகத்தியராலும் அவருடைய சிஷ்யராகிய திரணதூமாக்நி (தொல்காப்பியர்)என்ற ஆரிய முனிவராலுமே சமைத்துக் கொடுக்கப்பட்ட தென்பதும் மெய்யே. அதனின்றும் தமிழிலக்கணம் பெரும்பாலும் சம்ஸ்கிருத இலக்கணத்தை அனுசரித்தே சமைக்கப்பட்டிருக்கிற தென்பதும் மெய்யே.எனினும் வடமொழிக் கலப்புக்கு முந்தித் தமிழுக்கு வேறுவகையான இலக்கணமிருந்து ஒரு வேளை பின்னிட்டு மறைந்திருக்கக் கூடு மென்பதற்குப் பல ஹேதுக்கள் இருக்கின்றன'' (16:194)

பாரதியின் மேற்காட்டிய கூற்றிலே மூன்று முக்கியமான கருத்துக்கள் புலப்படுகின்றன.

1) அகத்தியரும் தொல்காப்பியருமே முதல்முதல் தமிழுக்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்தனர்.

2) தமிழ் இலக்கணம் பெரும்பாலும் சமஸ்கிருத இலக்கணத்தைத் தழுவியே அமைக்கப்பட்டது (அகத்தியர், தொல்காப்பியர் காலத்திலேயே சமஸ்கிருத இலக்கணத்தைத் தழுவித் தமிழ் இலக்கணம் அமைக்கும் அளவிற்கு வடமொழிக் கலப்பு ஏற்பட்டு விட்டது என்பதும் இதன் உட்கிடையாகும்.)

3) வடமொழிக் கலப்புக்கு முந்தித் தமிழுக்கு வேறு வகையான இலக்கணம் இருந்திருக்கலாம்.

இவை தெளிவு படுத்தப்பட வேண்டிய கருத்துக்களாகும். இவை பற்றி இனி சிறிது நோக்கலாம்.

2.2 இலக்கணமும் இலக்கண நூல்களும்

''தமிழ் பாஷைக்கோ இலக்கணம் முதல்முதலாக அகஸ்தியராலும்... தொல்காப்பியர் என்ற ஆரிய முனிவராலுமே சமைத்துக் கொடுக்கப்பட்டதென்பதும் மெய்யே'' என்ற பாரதியின் கூற்று, பாரதிக்கு முன்னர் நெடுங்காலமாக நிலவிவந்த கருத்தின் வழிமொழிதலேயாகும். தற்கால ஆய்வுலகம் இக் கருத்தினை ஏற்றுக் கொள்வதில்லை. இதுவரை கிடைத்துள்ள இலக்கண நூல்களுள் தொல்காப்பியமே காலத்தால் முந்தியது என்ற பொருளில் மட்டுமே நாம் இதனை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அகத்தியரும் தொல்காப்பியருமே தமிழ்மொழியின் இலக்கண அமைப்பை உருவாக்கினர்; தமிழ் எவ்வாறு பேசவும் எழுதவும் படவேண்டும் என்பதை வரையறுத்தனர்; அகத்தியருக்கு முன் தமிழ்மொழி இலக்கணமற்றே இருந்தது என்ற பொருளே இக் கூற்றில் வெளிப்படுகின்றது. தமிழை ஆதி சிவன் பெற்றுவிட அகத்தியர் அதைக் கண்டு மகிழ்ந்து நிறைவான இலக்கணம் செய்து கொடுத்ததாகக் கூறும் பாரதியின் கவிதை வரிகளும் இதே பொருளையே வெளிப்படுத்துகின்றன. (சிவன் படைத்த தமிழ் இலக்கண மற்ற தமிழ் என்று பாரதி கருதினன் போலும்.) இவையெல்லாம் இலக்கணம் பற்றிய தவருன மரபு வழி விளக்கத்தின் விளைவுகளாகும்.

ஒரு மொழியின் அமைப்புத்தான் அதன் இலக்கணம் என்பதே இலக்கணம் பற்றிய நவீன மொழியியல் நோக்காகும். மொழியின் கூறுகளான ஒலிகள், உருபன்கள், சொற்கள் முதலியவை ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறையில் இணைந்து சொற் தொடர்களையும் வாக்கியங்களையும் உருவாக்குகின்றன. இந்தக் குறிப்பிட்ட ஒழுங்குமுறையே மொழியின் அமைப்பாகும். இலக்கண நூல்கள் மொழியின் இந்த அமைப்பையே விளக்குகின்றன. ஒரு மொழியில் இலக்கண நூல்கள் எதுவும் இல்லாவிட்டால் அம் மொழிக்கு இலக்கணமே இல்லை என்று நாம் கூற முடியாது. பாரதியின் கருத்துப்படி அகத்தியருக்கு முன் தமிழ் இருந்திருக்க முடியாது. ஏனெனில் ஒரு அமைப்பு இல்லாமல் ஒரு மொழி இருக்கமுடியாது. அதாவது இலக்கணம் இல்லாமல் ஒரு மொழி இயங்க முடியாது. படிப்பு வாசனையற்ற ஒரு சாதாரண மனிதன் தனது தேவைக்கு ஏற்ப மொழியைச் சரளமாகக் கையாள்கிறுன் என்ருல் அவனுக்கு அம் மொழியின் இலக்கணம் நன்கு தெரியும் என்றே நாம் கொள்ளவேண்டும். அதாவது அந்த மொழியின் அமைப்பை அவன் நன்கு

அறிந்திருக்கிறான். இல்லையென்றால் அவனால் மொழியைக் கையாள முடியாது. அவனுக்குத் தெரியாதது இலக்கண ஆசிரியர் அதுபற்றி என்ன எழுதிவைத்திருக்கிறார் என்பதேயாகும்.

இவ்வகையில் இலக்கணம் என்பது மொழிக்கு வெளியே நின்று யாராலோ விதித்துக் கொடுக்கப்படுவதல்ல. ஒரு மொழியைப் பேசும் மக்களே அதன் அமைப்பை உருவாக்கிக் கொள்கிறார்கள். இலக்கண ஆசிரியர்கள் செய்வதெல்லாம் இவ்வமைப்பைக் கண்டறிந்து விளக்குவதுதான். இலக்கண ஆசிரியன் இந்த அமைப்பைப் புதிதாகப் படைப்பதில்லை. அவன் ஆராயும் முன்பே அந்த அமைப்பு இருக்கின்றது. இருக்கும் அமைப்பை விளக்குவது மட்டுமே அவன் வேலையாகும். அது சிறப்பான விளக்கமா இல்லையா என்பது இலக்கண ஆசிரியனின் திறமையைப் பொறுத்தது. மொழியின் அமைப்பு காலத்துக்குக் காலம் மாறுபடுவது. இந்த மாற்றங்களைக் கண்டறிந்து அங்கீகாரத்தோடு அவற்றை விளக்குகின்றவனே சிறந்த இலக்கண ஆசிரியனாகலாம்.

இலக்கணம் பற்றிய இந் நவீன நோக்கின் அடிப்படையில் அகத்தியரும் தொல்காப்பியருமே தமிழுக்கு முதல்முதல் இலக்கணம் சமைத்துக் கொடுத்தனர் என்பது ஏற்றுக் கொள்ளத் தக்க கருத்தல்ல என்பது தெளிவு. தவிரவும் அகத்தியர் பற்றியும் அகத்தியம் பற்றியும், தொல்காப்பியர் அகத்தியரின் சீடர் என்பது பற்றியும் கூறப்படுவனவெல்லாம் கர்ண பரம்பரைக் கதைகளே தவிர அவற்றுக்கு அறிவியல் அடிப்படையிலான ஆதாரங்கள் எவையும் இல்லை. தொல்காப்பியத்திலோ, தொல்காப்பியத்துக்குப் பனம்பாரனார் எழுதிய பாயிரத்திலோ அகத்தியர் பற்றியோ, அகத்தியம் பற்றியோ எவ்வித குறிப்புக்களும் இல்லை. கி. பி. 8ம் அல்லது 9ம் நூற்றாண்டில் இருந்தே அகத்தியம் பற்றிய குறிப்புக்கள் தமிழ் நூல்களில் காணப்படுகின்றன (41:137). அகத்தியர் என்ற பெயரில் ஓர் இலக்கண ஆசிரியர் இருந்தார் என்றும், அவருடைய பெயரில் இன்று வழங்கும் சில இலக்கணச் சூத்திரங்களைக் கவனமாகப் பரிசீலித்துப் பார்க்கும்போது அவை தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டவையாகவே கருதத் தக்கன என்றும், இவ் அகத்தியர் பல்லவர் கால நடுப்பகுதியில் வாழ்ந்திருக்கலாம் என்றும் தெ. பொ. மீ கூறுகிறார் (47:1). தொல்காப்பியர் என்ற பெயரில் இருவர் வாழ்ந்திருக்கலாம் என்றும் பிற்காலத் தொல்காப்பியரே அகத்தியரின் சீடராய் இருக்கலாம் என்றும் அவர் மேலும் குறிப்பிடுகிறார் (47:2). இது எவ்வாறாய் இருப்பினும் பழைய கர்ணபரம்பரைக் கதையையே பாரதி உண்மையென ஏற்றுக் கூறியுள்ளான் என்பதே இங்கு கவனிக்கத்தக்கது.

2.3 தமிழ் இலக்கணத்தில் சமஸ்கிருதச் செல்வாக்கு

''தமிழ் இலக்கணம் பெரும்பாலும் சம்ஸ்கிருத இலக்கணத்தை அனுசரித்தே சமைக்கப்பட்டிருக்கிறது'' என்ற பாரதியின் கூற்றும் ஆராய்ச்சியின் அடிப்படையில் அமைந்ததல்ல. தன் காலத்தில் பொதுவாக வழங்கிவந்த கருத்தினையே இங்கும் பாரதி வழி மொழிந்துள்ளான் என்பது வெளிப்படை. பாரதியின் இக் கூற்றுப்பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. பெ. சு. மணி பாரதியின் இக்கருத்தை மறுத்துரைக்கிறார். அவர்,

> ''பாரதியார் தொல்காப்பியப் பயிற்சி பெற முடியாத காரணத்தால், தமிழ் இலக்கணத்தின் தனித்தன்மையை, வடமொழிச் சார்பகன்றதைப் பற்றித் திட்டவட்டமாகத் தெளிவுபடச் சாற்ற முடியாமற் போயிற்று. 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்னும் குறிப்பிற்கு வடமொழி இலக்கணமான ஐந்திரத்தைப் பின்பற்றித் தொல்காப்பியர் இலக்கணம் செய்தார் என வலிந்துரைத்தனர் சிலர். அக்கால ஆய்வுலகம் இக்காலத்தைப்போல் அப்பொழுதே ஒருமனதாக இந்த ஐந்திர விவகாரத்தை முற்றிலும் நிராகரித்து விடவில்லை. இதனாலும் பாரதியாருக்குக் குழப்பம் ஏற்பட்டிருக்கலாம்'' என்பர் (28:83,85).

பெ. சு. மணியின் கூற்றிலே தொல்காப்பியத்தின் தூய்மையை நிலை நாட்டும் நோக்கு வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆயினும் பெ. சு. மணி கூறுவதுபோல் தொல்காப்பியம் முற்றிலும் வடமொழித் தொடர்பற்றது என்பதை தற்கால ஆய்வுலகம் ஒருமனதாக ஏற்றுக்கொள்வதும் இல்லை. பாணினியின் இலக்கணம், பதஞ்சலியின் மகாபாஷ்யம், கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம், பரதமுனிவரின் நாட்டிய சாஸ்திரம், வாத்சாயனரின் காம சூத்திரம் போன்ற வடமொழி நூல்களின் செல்வாக்கு தொல்காப்பியத்தில் காணப்படுவதை வையாபுரிப்பிள்ளை (34:42-54), கமில் சுவலபில் (38:143-145) ஆகியோர் எடுத்துக் காட்டியுள்ளனர். சமஸ்கிருத இலக்கண முறையுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்ட பிறகே தொல்காப்பியம் தோன்றியது என தெ. பொ. மீயும் கூறுகின்றார் (47:17).

இவ்வாறு கூறுவதன் மூலம் பாரதி கருதுவது போல் தொல்காப்பியர் பெரும்பாலும் வடமொழி இலக்கணத்தை அனுசரித்தே தமிழுக்கு இலக்கணம் சமைத்தார் என்ற கருத்தை ஏற்றுக் கொள்வதாகாது. தொல்காப்பியர் காலத்தில் தமிழில் வடமொழிக் கலப்பு அவ்வளவு அபரிமிதமாக ஏற்பட்டிருக்கவும் இல்லை. தொல்காப்பியர் காலத்தில் ஓர் அகில இந்திய ஒலியனியல், இலக்கணச் சிந்தனை முறை நிலவியது பற்றியும்; மேற்கத்தைய, சீன முறைகளுக்குப் பதிலாக தொல்காப்பியர் இவ் அகில இந்திய சிந்தனை முறையையே பின்பற்றியுள்ளமை பற்றியும் தெ. பொ. மீ. குறிப்பிடுகின்றார்.

யாழ்ப்பாணம்.

இவ் அகில இந்திய இலக்கணச் சிந்தனை முறை மூலம் ஒலிகளின் உச்சரிப்பு அம்சங்கள் போன்ற மொழியியல் பொதுமைகளை (linguistic universals) தொல்காப்பியர் உள்வாங்கிக் கொண்டார் என்றும் ஆகவே அகில இந்திய சிந்தனை முறையைப் பின்பற்றியதன் மூலம் அவர் தமிழ்மொழியின் இயல்பான பண்புகளுக்கு எவ்வித ஊறும் விளைவிக்கவில்லை என்றும் தெ. பொ. மீ. கூறுகின்றார் (47:17).

வடமொழிக் கலப்பு தமிழில் அபரிமிதமாக ஏற்பட்ட பிற்காலத்திலேயே வடமொழி இலக்கணக் கோட்பாட்டைத் தழுவிய சில இலக்கண நூல்கள் தமிழில் எழுந்தன. வீரசோழியம் (11-ம் நூற்றாண்டு), பிரயோக விவேகம் (17-ம் நூற்றாண்டு), இலக்கணக் கொத்து (17-ம் நூற்றாண்டு) என்பனவே அத்தகைய இலக்கண நூல்களாகும். (47:34). ஆகவே தொல்காப்பிய இலக்கணம் பெரும்பாலும் சமஸ்கிருத இலக்கணத்தைத் தழுவியது என்ற பாரதியின் கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

2.4 வடமொழிக் கலப்புக்கு முந்திய தமிழ் இலக்கணம்

'வடமொழிக் கலப்புக்கு முன்னர் தமிழுக்கு வேறுவகையான இலக்கணமிருந்து ஒருவேளை பின்னிட்டு மறைந்திருக்கக் கூடும் என்பதற்கு பல ஹேதுக்கள் இருக்கின்றன' எனக் கூறும் பாரதி, அவ் வேதுக்கள் யாவை என விளக்கவில்லை. ஆயினும் தொல்காப்பியத்துக்கு முன் வேறு இலக்கண நூல்கள் சில இருந்திருக்கலாம் என்ற பாரதியின் யூகம் வலுவானதே. தொல்காப்பியத்துக்கு முந்திய இலக்கண நூற் கருத்துக்கள் தொல்காப்பியத்தில் எடுத்தாளப் பட்டுள்ளமைக்கு தொல்காப்பியத்திலேயே சான்றுகள் உள்ளன. என்மனார், என்ப, சொல்லுப, மொழிப முதலிய கூற்றுக்கள் தொல்காப்பியத்தில் அடிக்கடி இடம் பெறுவது இதனையே காட்டுகின்றது (41:139). எனினும் இவை தொல்காப்பியருக்கு ஏற்புடைய இலக்கண நூல்களாகவே இருந்திருக்க வேண்டும்.

தொல்காப்பியத்துக்கு எதிரான, வலுவான தமிழ் இலக்கணச் சிந்தனைமுறை ஒன்றும் இருந்து வந்ததற்குச் சான்றுகள் உள்ளன. அவினயம் இச் சிந்தனை முறையை ஒரு வகையில் பிரதிநிதித்துவப் படுத்திய தெனினும் தொல்காப்பிய உரையாசிரியர்களால் இது பூரணமாக மறைக்கப்பட்டுவிட்டதென்றும், கற்றோர் உலகம் இப் பெருஞ் சிந்தனை முறையின் பங்களிப்பைக் கிட்டத்தட்ட மறந்து விட்டதென்றும் விஜய வேணு கோபால் குறிப்பிடுகின்றார். (49:2). அவினய ஆசிரியராகக் கருதப்படுகின்ற அவினயருடைய காலம் சரியாகத் தெரியவில்லை. தொல்காப்பியர்போல் இவரும் அகத்தியருடைய மாணவராகவே கருதப்படுகின்றார் (49:6;47:10). ஆயினும் தொல்

காப்பியத்துக்கு முந்திய தமிழ் இலக்கண நூல்கள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆகவே பாரதி யூகிப்பதுபோல் அவை வடமொழிச் சார்பற்றதா, இல்லையா என்பது பற்றி நம்மால் எதுவும் கூறமுடியாது.[15]

இது எவ்வாறுயினும் 'மொழிப் புலமை மிக்க முன்னோர்களால் வகுத்துக் கொடுக்கப்பட்ட விதிமுறைகளே இலக்கணம்' என்ற இலக்கணம் பற்றிய மரபுவழிக் கருத்துடையோர், பொதுவாக மொழி மாற்றத்தையும், புதிய வழக்குகளையும் ஏற்றுக்கொள்ளாது புகழ்பெற்ற இலக்கண ஆசிரியர்களின் விதிகளையே மொழி வரம்பாகப் போற்றுவர். பழைய விதிகளை விளக்குவதிலும் அவைபற்றிய சர்ச்சைகளில் ஈடுபடுவதிலுமே அதிக அக்கறை காட்டுவர். ஆனால் பாரதி இப் பொதுப்போக்கில் இருந்து பெரிதும் வேறுபடுகின்றான். மொழியில் புதுமைகள் புரிவதற்கு முயன்றது மட்டுமன்றி வேண்டாத இலக்கண சர்ச்சைகளை நிராகரிப்பதையும், மொழி மாற்றத்திலும் மொழி வளர்ச்சியிலும் அதிக அக்கறை காட்டுவதையும் நாம் பாரதியிடம் காண்கின்றோம். அடுத்துவரும் பகுதிகளில் இவைபற்றிச் சற்று விரிவாக நோக்கலாம்.

2.5 பாரதியும் மரபுவழி இலக்கணக் கல்வியும்

பாரதி மரபுவழி இலக்கணக் கல்வியிலும் மரபுவழி இலக்கண சர்ச்சைகளிலும் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. நவீன சிந்தனையாளன் என்ற வகையிலே புதிய மரபுகளுக்காகப் போராடிய பாரதி, பழைய இலக்கண சர்ச்சைகளில் அக்கறை காட்டாதது மட்டுமன்றி சில வேளைகளில் அவற்றை ஏளனமாகவும் நோக்கியுள்ளான்.

அரசஞ்சண்முகனார் என்ற பிரசித்தி பெற்ற மரபுவழித் தமிழறிஞர், தேசபக்தியைப் பிரதிபலிக்கும் பாடல்கள் சில இயற்றத் தொடங்கியபோது அதனை வரவேற்று பாரதி பின்வருமாறு எழுதியுள்ளான்.

> ''ஸ்ரீ அ. சண்முகம் பிள்ளை (என்ற) மற்றொரு இலக்கண வித்துவான் 'வந்தேமாதர' மந்திரத்தைப் பற்றிய சில இனிய பாடல்கள் எழுதியிருக்கின்றார்.... ஸ்ரீ அ. சண்முகம் பிள்ளை மலைபுரண்ட போதிலும் தமது கல்வியினின்றும் கருத்தை அகலவிடாத தன்மையினர். இலக்கண ஆராய்ச்சியே இவருக்கு முக்கிய தொழில். அதுவே இவருக்கு உயிர். இதைத்தவிர வேறொன்றையும் இவர் கவனிப்பது கிடையாது. இப்பொழுது பாரததேவி இவருடைய சிந்தையையும் மாற்றிவிட்டாள். பாரததேவியின் தெய்வீக விழிகளினின்றும் உதிரும் கண்ணீர்கள் இவரது நெஞ்சை உருக்கி எமது தாய்க்கு அடிமையாக்கிவிட்டன. இது

ஆகுபெயரா? அன்மொழித் தொகையா? தொல்காப்பியத்துக்கு இவ்விடத்தில் நச்சினார்க்கினியர் கூறிய உரை பொருந்துமா? பொருந்ாதா? என்பது போன்ற இலக்கண விவகாரங்களைச் சிறிது அகற்றிவைத்து விட்டு இந்த வித்வான்

'வந்தே மாதரமென்னும் மந்திரத்தா
லெய்தா வரமுமில்லை
நந்தேய மக்களுக்கு நலந்தருவ
திதுபோலெந் நாட்டு மில்லை' என்று பாட்டியற்றத் தொடங்கிவிட்டார். கல்வித்தாய்க்கு மட்டிலுமே, இதுவரை வழிபாடு இயற்றிவந்த இவர், இப்போது பூமித்தாய்க்குத் தொண்டு புரிவது அதைக் காட்டிலும் உயர்வாகு மென்பதை அறிந்து கொண்டார். இதுவெல்லாம் நமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. இதுவெல்லாம் காலமாறுபாட்டை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகின்றது. (29:169–170)

பாரதி, இங்கு இலக்கண சேவைக்காக அரசஞ் சண்முகனாரைப் பாராட்டவில்லை என்பது வெளிப்படை. பயனற்ற இலக்கண ஆராய்ச்சிக்குள்ளேயே மூழ்கிக் கிடக்காது, கால மாற்றத்தை உள்வாங்கிக் கொண்டு இலக்கண சர்ச்சையில் இருந்து விடுபட்டு தேசியப் பிரக்ஞையை வெளிக்காட்டியமைக்காகவே பாரதி அவரைப் போற்றுகின்றான். மேலும் மரபுவழி இலக்கண வித்துவான்களை ஓரளவு ஏளனத்தோடு நோக்குவதையும் நாம் இங்கு காண்கின்றோம்.

பாரதியின் காலத்திலே நிலவிய மரபுவழி இலக்கணக் கல்வியின் பயனற்ற தன்மை பற்றி பாரதி கவலை கொண்டிருந்தான் என்றும் தெரிகிறது. அன்மொழித் தொகை பற்றிக் கற்பிப்பது சம்பந்தமாக பாரதி பின்வருமாறு எழுதியுள்ளான்.

''நெல் எப்படி விளைகிறது என்பதைக் கற்றுக் கொடுக்காமல் 'அன்மொழித் தொகையாவது யாது' என்று படிப்புச் சொல்லிக் கொடுப்பதை நினைக்கும் போது கொஞ்சம் சிரிப்புண்டாகின்றது. அன்மொழித் தொகை சிலரைக் காப்பாற்றும். ஊர் முழுவதையும் காப்பாற்றாது. நெல்லுத்தான் ஊர் முழுவதையும் காப்பாற்றும். அன்மொழித் தொகையைத் தள்ளிவிட வேண்டுமென்று நான் சொல்ல வில்லை. ஆனால் அன்மொழித் தொகையைப் பயிர்செய்து நெல்லை மறந்து விடுவது சரியான படிப்பில்லை என்று சொல்லுகிறேன் அவ்வளவுதான் (22:74)

இன்று கூட நமது பண்டிதர்கள் இத்தகைய சர்ச்சைகளில் பொழுதைக் கழிப்பது மனங்கொள்ளத் தக்கது. பயனற்ற இலக்கணக் கல்வி பற்றி 1916–ம் ஆண்டிலேயே பாரதி இவ்வாறு எழுதியிருப்பது அவனது மொழிச் சிந்தனையின் நவீன போக்கினைப் புலப்படுத்துகின்றது எனலாம்.

3

மொழி மாற்றமும் பாரதியும்

3.1 கன்னித் தமிழ் பற்றிய கருத்து

தமிழ் மொழி என்றும் மாறா இளமையுடையது என்ற கருத்து நெடுங் காலமாக நிலவி வருகின்றது. கன்னித் தமிழ் என்ற தொடரும் இதையே உணர்த்துகின்றது. 'நின் சீர் இளமைத் திறன் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே' என சுந்தரம் பிள்ளையும் தமிழ் மொழியின் மாறா இளமையை வியந்து பாடியிருக்கிறார். கன்னித் தமிழ் என்ற கருத்து மேனாட்டு அறிஞர் சிலரிடத்தும் காணப் படுவதையும், ''தற்கால இலக்கியத் தமிழின் எழுத்தியலும் சொல்லியலும் கி. மு. 3 ஆம் அல்லது 2 ஆம் நூற்றாண் டில் எழுந்த தமிழ் இலக்கண நூலில் கூறிய அடிப்படையை ஒத்துக் காணப் படுகின்றது. அதனால்தான் மாறா இளமையோடு இருக்கிறது என்றும் அமைப்பில் மாறவில்லை என்று சொல்லும் அளவுக்கு மிகக் குறைந்த அளவே மாறியுள்ளது என்றும் அடிக்கடி கூறப்படுகின்றது. இந்தக் கூற்று இலக்கி யத் தமிழைப் பொறுத்தவரையில் மிகவும் உண்மையானது'' என்று கமில் சுவலபில் கூறியிருப்பதையும் செ. வை. சண்முகம் எடுத்துக் காட்டியுள்ளார் (12:85-86). ஆனால் இக் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கனவல்ல. வையாபுரிப் பிள்ளை கூறுவது போல் ''எவ் வகையான வேறுபாடும் இன்றி, தோன்றிய காலத்தில் இருந்தது போலவே தமிழ் மொழி இருந்து வருகின் றது என்று கருதுவோர், தமிழ் வரலாறும் தமிழ் இலக்கண வரலாறும் அறியாதார்'' என்று தான் கூறவேண்டும் (35:45)

மொழிகள் எல்லாமே மாற்றமடைகின்றன. காலப்போக்கில் மாற் றத்துக்குள்ளாகாத மொழிகள் எவையுமே இல்லை என்பதைத் தற்கால மொழி யியல் ஆய்வுகள் நிரூபித்துள்ளன. தமிழ் மொழியும் இதற்கு விலக்கல்ல. சங்க காலம் முதல் இன்று வரையுள்ள இலக்கியங்களை மேலெழுந்தவாரி யாக நோக்குவோர் கூட இதை உணரலாம். சங்க இலக்கியத்தை விசேட பயிற்சி இல்லாமல் அல்லது வேறு ஒருவரின் துணையில்லாமல் இன்றையத் தமிழர்களால் புரிந்து கொள்ள முடியாது. அந்த அளவுக்கு அது வேறு ஒரு மொழி போன்றே காட்சியளிக்கின்றது. காலந்தோறும் தமிழில் ஏற்பட்டு வந்த மாற்றங்களை ஒலியமைப்பு, வரிவடிவம், உருபன் அமைப்பு, வாக்கிய அமைப்பு, சொற் பொருள் அமைப்பு ஆகிய மொழியின் எல்லா அம்சங்க ளிலும் நாம் அவதானிக்க முடியும். ஆகவே கன்னித் தமிழ் என்ற கருத்து எவ் வகையிலும் ஏற்கத் தக்கதல்ல.

3.2 மொழி மாற்றம் பற்றி பாரதி

கன்னித் தமிழ் என்ற தொடரை பாரதி சில இடங்களில் பயன் படுத்தி இருந்தாலும் (28:104), பாரதியின் மொழிச் சிந்தனையிலே அது செயற்பாட்டு முக்கியத்துவம் எதையும் பெறவில்லை. மொழி மாற்றம் பற்றி பாரதியிடம் தெளிவான சிந்தனை இருந்தது. மொழி வளர்ச்சி பற்றிய அவனது கருத்துக்கள் மொழி மாற்றம் பற்றிய தெளிவின் அடிப்படையில் அமைந்தனவேயாகும். இலக்கண நூல்கள் கூறும் பழைய வழக்குகளை இறுகப் பிடித்துக் கொண்டிருப்பதைப் பாரதி எதிர்த்தான். தமிழ் மொழியை நவீனப் படுத்துவதில் பாரதி தீவிர ஆர்வம் காட்டினுன். இவ் வகையில் மொழி பற்றிய ஒரு இயக்கவியல் நோக்கை நாம் பாரதியிடம் காண்கிலுேரும்.

1916-ல் எழுதிய விதி என்ற ஒரு கட்டுரையிலே மூன்று வகையான விதிகளை பாரதி குறிப்பிடுகின்ருன். தெய்வ விதி, சாஸ்திர விதி, நாட்டு விதி என்பன அவை. தெய்வ விதி என்பது இயற்கை விதியாகும். இதை மாற்ற முடியாது. தீ சுடுவதும், பனி குளிர்வதும் இத்தகையன. இவ் இயற்கை விதி பற்றிய ஞானம் வளர வளர மனித ஜாதி மேன்மை பெறும். சாஸ்திர விதி மனிதனுல் எழுதப்பட்டது. கால, தேச, வர்த்தமானங்களுக்கு ஏற்ப சாஸ்திர விதிகளை மாற்றுதல் அவசியமாகின்றது. வைத்திய சாஸ்திரம், தர்ம சாஸ்திரம், இலக்கணம் முதலியன இத்தகையன. நாட்டு விதி என்பது அரசியல் விதியாகும். இதுவும் சாஸ்திர விதியோடு சேர்ந்ததுதான். எனினும் மற்ற இலக்கணம் முதலிய சாஸ்திரங்களின் விதிகளைக் காட்டிலும் அரசியல் விதிகள் மிகவும் விரைவுடன் மாறுபடுவதால் அதனைத் தனியாகப் பிரித்துக் கூற நேரிட்டதாகப் பாரதி கூறுகின்ருன். ''தெய்வ விதிக்குப் பரிபூரணமாக உட்பட்டு சாஸ்திர விதிகளையும் நாட்டு விதிகளையும் மேன்மேலும் புத்திசாலித் தனமாகச் சீர் திருத்திக் கொண்டு வந்தால், மனுஷ்ய ஜாதிக்குச் சேமமுண்டாகும்'' என்பது பாரதியின் கருத்தாகும் (22: 138-141).

மாறும் விதிகள், மாரு விதிகள் என இரு வகையான விதிகள் பற்றிப் பாரதி கூறுவது இங்கு முக்கியமான கவனத்துக்குரியது. இயற்கை விதிகள் மாருதன; ஏனையவை மாறுவன. இலக்கண விதிகளை மாறும் விதிகளாகவே பாரதி கூறுகின்ருன். ''இலக்கணத்தை எடுங்கள்; 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினுனே' என்று பவணந்தி முனிவரே சொல்லுகிருர்'' என்பது பாரதியின் கூற்ருகும் (22:139). இங்கு மொழியை ஒரு மாறும் சாதன மாகவே பாரதி கருதுகிருன் என்பது தெளிவாகும். புனர் ஜன்மம் என்ற கட்டுரையிலே இது பற்றிப் பாரதி மிகவும் தெளிவாகப் பின்வருமாறு கூறுகின்ருன்.

''நெடுங் காலத்துக்கு முன்னே எழுதப்பட்ட நூல்கள் அக் காலத்துப் பாஷையைத் தழுவினவை. காலம் மாற மாற பாஷை மாறிக் கொண்டு போகின்றது. பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர்கள் அந்த அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடிய பதங்களையே வழங்க வேண்டும்'' (16:45).

பாரதியின் மேற்காட்டிய மேற்கோளிலே இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று, காலம் மாற மாற மொழி மாறுகின்றது என்பது மற்றது புதிய மாற்றங்களுக் கேற்ப புலவர்கள் அந்த அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடிய பதங்களையே வழங்க வேண்டும் என்பது. இந்த இரண்டாவது அம்சம் முதலாவது அம்சத்தின் விளைவாகும். அதாவது, மொழியில் ஏற்படும் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை, இயல்பானவை, அவசியமானவை என்பதைப் புரிந்து கொண்டால்தான் புதுமைகளைப் புகுத்துவது பற்றிச் சிந்திக்க முடியும். பாரதியிடம் நாம் இந்த இரு பண்புகளையும் காண்கின்றோம். பொதுவாக மொழி மாற்றம், மொழி வளர்ச்சி பற்றிய பாரதியின் சிந்தனைகளிலே நவீன விஞ்ஞான நோக்கே அடிப்படையாக உள்ளது எனலாம்.

3.3 மொழி மாற்றமும் எளிய நடையும்

பாரதி பற்றி எழுதுபவர்கள் பாரதியின் எழுத்திலே காணப்படும் எளிமை பற்றி விசேடமாகக் குறிப்பிடுவர். தமிழ் மொழியை எளிமைப் படுத்தியதில் பாரதிக்கு முக்கியமான பங்கு உண்டு என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை. எளிமையை ஒரு கோட்பாடாகக் கொண்டிருந்தது மட்டுமன்றி, தனது எழுத்துக்களிலே அதைச் சிறப்பாகப் புகுத்தியவன் பாரதி.

''மொழியைப் பேசும் பெரும்பான்மையோருக்கு வேண்டி, மொழியினைப் புரிந்துகொள்ளும் நிலையிலும், உருவாக்கும் நிலையிலும் எளிமையைப் புகுத்துவதை எளிமையாக்கம் எனலாம்'' என எளிமையாக்கத்தை வரையறுப்பர் (1:364). இதை வேறு வகையில் சொல்வதானால் சாதாரண படிப்பறிவுள்ளவர்களும் இலகுவில் விளங்கிக் கொள்ளும் வகையிலும் பயன்படுத்தும் வகையிலும் மொழி நடை ஒன்றை உருவாக்குவதை எளிமையாக்கம் எனலாம். இவ்வகையில், எளிமையாக்கம் மொழி மாற்றத்தின் வெளிப்பாடேயாகும். எழுத்து, கற்றறிந்த ஒரு சிறு குழாத்தினருக்கு உரியது என்ற நிலையில் இருந்து பரந்து பட்ட வெகுஜனங்களுக்குப்

பயன் படத் தொடங்கும் போதே எளிமையாக்கம் அவசியமாகின்றது. பாரதி பொது ஜனங்களுக்காகவே எழுதியதனல் எழுத்திலே எளிமையைப் புகுத்துவது அவனுக்கு அவசியமாயிற்று.

ஆயினும் பாரதியின் ஆரம்பகாலக் கவிதைகள் சில பழைய பண்டித நடையிலே அமைந்திருக்கக் காணலாம். 1903 அல்லது 1904-ல் பிரசுரமாகிய பாரதியின் முதலாவது கவிதை எனக் கருதப் படுகின்ற தனிமை இரக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது.

குயிலினுய்! நின்னெடு குலவியின் கலவி
பயில்வதிற் கழித்த பன்னுள் நினைந்து பின்
இன்றெனக் கிடையே எண்ணில் யோசனைப் படும்
குன்றமும் வனமும் கொழிதிரைப் புனலும்
மேவிடப் புரிந்த விதியையும் நினைந்தால்
பாவியேன் நெஞ்சம் பகீரெனல் அரிதோ?
கலங்கரை விளக்கொரு காதவம் கோடியா
மலங்குமோர் சிறிய மரக்கலம் போன்றேன்
முடம்படு தினங்காள்! முன்னர் யான் அவளுடன்
உடம்பொடும் உயிரென உற்றுவாழ் நாட்களில்
வளியென பறந்தநீர் மற்றியான் எனது
கிளியினைப் பிரிந்துழிக் கிரியெனக் கிடக்கும்
செயலையென் இயம்புவல் சிவனே
மயலையிற் றென்றவர் வகுபரங் கவட்கே.

1906-ல் வேல்ஸ் இளவரசரின் வருகையை முன்னிட்டு எழுதிய வாழ்த்துப் பாடலும் இத்தகைய மொழி நடையிலேயே அமைந்துள்ளது. அக் கவிதையின் சில வரிகளையும் இங்கு உதாரணமாகத் தரலாம்.

வருக செல்வ வாழ்கமன் நீயே!
வடமேற் றிசைக்கண் மாப்பெருந் தொலையினேர்
பொற்சிறு தீவகப் புரவலன் பயந்த
நற்றவப் புதல்வ நல்வர வுனதே
மேதக நீயுநின் காதலங் கிளியும்
என்றனைக் காணுமா றித்தனை காதம்
வந்தனிர் வாழ்திரென் மனமகிழ்ந் ததுவே..

மேற்காட்டிய கவிதை வரிகளில் காணப்படும் மொழி நடை சாதாரண மக்களால் எளிதில் புரிந்துகொள்ள முடியாதது என்பது வெளிப் படை. இப் பாடல்களில் பயன்படுத்தப் பட்டுள்ள பல சொற்களும், சொற்

புணர்ச்சிகளும், உருபன் அமைப்பு, வாக்கிய அமைப்புக்களும் பாரதியோடு சார்த்திப் பேசப்படுகின்ற இந்த நூற்றுண்டின் எளிய தமிழ் நடைக்கு முற்றிலும் மாற்றமானவை. 1905, 1906–ம் ஆண்டுகளில் பாரதி எழுதிய பல கவிதைகளிலும் இத்தகைய மொழி நடையையே நாம் காண்கின்ருேம்.[16] 1910-ல் வெளியிடப்பட்ட பாரதியின் ஸ்வசரிதை யிலும் இத்தகைய மொழி நடையின் செல்வாக்கினை நாம் ஓரளவு காண முடியும். எட்டயபுரம் சமஸ்தானத்தில் அரசவைப் புலவர்களுடன், அவர்களின் புலமைச் சூழலில் பழகிய பாரதி தனது ஆரம்ப காலத்தில், கவிதை கடின நடையிலேயே எழுதப்பட வேண்டும் என்ற கருத்தை உடையவனுக இருந்திருக்கலாம். ஆயினும் பாரதி மிக விரைவிலேயே சிந்தனைத் தெளிவோடு, பிரக்ஞை பூர்வமாக இப் போக்கில் இருந்து விடுபடத் தொடங்கிவிட்டான். இது தொடர்பாக க கைலாசபதி கூறுவதும் இங்கு கவனிக்கத்தக்கது.

> ''பாரதியாரது சமகாலப் புலவரிடத்துக் காணப்படும் இரு பண்புளாம் பழந்தமிழ் நடையும் ஆங்கில வாடையும் தொடக்கத்தில் தவிர்க்க முடியாதபடி பாரதியிடத்துங் காணப் படுகின்றன. ஆனல் மற்றையோர் தொடர்ந்து அப்பண்புகளுக்கு உருவம் கொடுத்துக்கொண்டிருக்க, பாரதியோ மின்னல் வேகத்தில் புதுப் பிறவி பெற்றவன் போல் தனிப் பாதை ஒன்றை வகுத்துக் கொள்கிருன். இதிலே தான் அவன் தன் சகபாடிகளிடம் இருந்து விலகி முன்னேடிகள் சிலரைச் சார்ந்து கொள்கிருன்'' (7:227–228).

பழமையில் இருந்து விலகிய இந்த விடுபாட்டின் பிரகடனம் போலவே ''புலவர்கள் அந்த அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடிய பதங்களையே வழங்க வேண்டும்'' என்ற பாரதியின் கூற்று அமைந்துள்ளது. பாரதியின் கவிதைகளிலும் உரை நடைப் படைப்புக்களிலும் காணப்படும் எளிமையின் இரகசியத்தை இக் கூற்று இரத்தினச் சுருக்கமாக விளக்கிவிடுகின்றது.

1905 இன் பின்னர் பாரதியிடம் தேச விடுதலை உணர்வும், மக்கள் நல நாட்டமும் தீவிரமாக வளர்ச்சியடைந்து வந்தன. இக்கால கட்டத்திலேயே பாரதி ஒரு பத்திரிகையாளனுகவும் மாறினுன். பாரதியின் மொழி எளிமைக்கு இவையே அடிப்படைக் காரணிகளாக அமைந்தன. சமூகம், பண்பாடு முதலியவை பற்றிய பாரதியின் நவீன சிந்தனைகள் அனைத்தும் பரந்துபட்ட பொதுமக்களை மையமாகக் கொண்டவை. கலை, இலக்கியம், கல்வி, அரசியல் அனைத்துமே பொதுமக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்று பாரதி கருதினுன். பொதுஜனங்கள் என்ற சொல்லைப் பாரதியின் எழுத்துக்களில் நாம் அடிக்கடி காண

லாம். ஸங்கீத விஷயம் என்ற கட்டுரையிலே கலைஞர்கள் பொதுஜனங் களை நம்பவேண்டியதன் அவசியம்பற்றி பாரதி அழுத்திக் கூறியுள்ளான்.[17] வெகுஜனங்களைப் பிரதானப்படுத்திய பாரதி ''ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவது'' அவசியம் என்பதை வலியுறுத்தியதில் ஆச்சரியமில்லை (17:357). ஜனங்களுக்கு விளங்க வேண்டுமென்றால் அவர்களது காலத்தில் பொது வழக்கில் உள்ள மொழியைப் பயன்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. பாரதி இத்தகைய ஒரு பொது வழக்கு மொழியையே கையாண்டான். இப்பொது மொழி எந்த ஒரு பிரதேச அல்லது சமூகக் கிளைமொழியுமல்ல. தெ. பொ. மீ. கூறுவதுபோல ''எல்லாப் பிரதேசங்களுக்கும் ஓரளவு பொதுவான, படித்த, படிக்காத எல்லோருக்கும் ஓரளவு பொதுவான'' இலக்கிய வழக்கினையே இது குறிக்கும். (41:83). மேடைப் பிரசங்கம் போன்ற சம்பிரதாயச் சூழல்களிலும இதுவே பயன்பட்டது. சாதாரண மக்களுக்கு விளங்காத பண்டித நடையில் இருந்து சொற்தொகுதியில் மட் டுமன்றி இலக்கண அமைப்பிலும் இது முற்றிலும் வேறுபட்டது. பாரதி கையாண்ட இத்தகைய புதிய நடைக்கு உதாரணமாக அவன் எழுதிய பின் வரும் அகவல் வரிகளைக் காட்டலாம்.

அச்ச மில்லை, அமுங்குத லில்லை,
நடுங்குத லில்லை, நாணுத லில்லை
பாவ மில்லை, பதுங்குத லில்லை
ஏது நேரினு மிடர்ப்பட மாட்டோம்
அண்டஞ் சிதறினு லஞ்ச மாட்டோம்
கடல் பொங்கி எழுந்தாற் கலங்க மாட்டோம்
யார்க்கு மஞ்சோம், எதற்கு மஞ்சோம்
எங்கு மஞ்சோம் எப்பொழுது மஞ்சோம்...''

மேற்காட்டிய அகவல் வரிகளின் மொழி அமைப்பை ஏற்கனவே காட்டிய தனிமை இரக்கம், வேல்ஸ் இளவரசருக்கு வாழ்த்து ஆகிய கவி தைகளின் மொழியமைப்புடன் ஒப்பு நோக்கினல் சொற்கள், உருபன் அமைப்பு, வாக்கிய அமைப்பு ஆகியவற்றிலுள்ள பாரிய வேறுபாட்டை எளிதில் அறிந்து கொள்ளலாம். பாரதி கையாண்ட பள்ளு, சிந்து, கண்ணி போன்ற நாட்டார் பாடல் வடிவங்களில் பாரதியின் இந்த எளிமை மேலும் துலக்கமாக உள்ளது. பாரதியின் உரை நடையிலும் இவ்வெளி மைப் பண்பே முதன்மை பெறுகின்றது- மொழி மாற்றத்தைப் புரிந்து கொண்டு, காலத்தின் புதிய தேவைகளுக்கேற்பு புதிய மொழியைக் கை யாண்டதன் விளைவே இவ் வெளிமையாகும்.

3.4 எளிமை பற்றி பாரதி

'ஓரளவு படிப்பறிவுள்ளவர்களும் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதாக எழுதுவதே எளிமை' என்ற வகையில் பாரதி எளிமையை வரையறை செய்கிறான். எனினும் இவ் வெளிமையின் மொழியியல் அம்சங்கள் பற்றி பாரதியிடம் தெளிவான கருத்துக்கள் இருந்ததாகத் தெரியவில்லை. கடின நடையைக் கண்டித்தும் எளிய நடையை ஆதரித்தும் பாரதி எழுதியுள்ள சில குறிப்புக்களிலே எளிமை பற்றிய அவனது சில கருத்துக்கள் வெளிப்படுகின்றன.

> ''சென்ற சில நூற்றாண்டுகளாக, புலவர்களும் சாமியார்களும் சேர்ந்து வெகு சாதாரண விஷயங்களை அசாதாரண, அலௌகீக, அந்தகார நடையில் எழுதுவதுதான் உயர்ந்த கல்வித்திறமை என்று தீர்மானம் செய்துகொண்டார்கள்... கரடுமுரடான கல்லும் கள்ளிமுள்ளும் போன்ற பாதை எம் கவிகளுக்கு நல்ல பாதையாகத் தோன்றலாயிற்று. கவிராயர் 'கண்' என்பதைச் 'சக்கு' என்று சொல்லத் தொடங்கினார். ரசம் குறைந்தது; சக்கை அதிகப்பட்டது. உண்மை குறைந்தது; பின்னல் திறமைகள் அதிகப்பட்டன'' (16:44,45).

கடின நடைபற்றிய, பாரதியின் மேற்காட்டிய கூற்றிலே சாதாரண விஷயங்களைச் சிக்கல் படுத்தி எழுதுவதும் 'கண்' போன்ற வழக்கில் உள்ள சொற்களுக்குப் பதிலாக 'சக்கு' போன்ற வழக்கில் இல்லாத சொற்களைக் கையாள்வதும் எளிமைக்கு எதிரான அம்சங்கள் எனப் பாரதி கருதுவதாகத் தெரிகிறது. ஆயினும் அலௌகீக, அந்தகார என்னும் அடைகள் திட்டவட்டமாக எதைக் குறிக்கின்றன என்பதைப் புறநிலையாக விளக்க முடியவில்லை. அசாதாரண என்பது அன்றாட அல்லது பொது வழக்கில் இல்லாதது எனப் புரிந்து கொள்ளப்படலாம்.

எளிய நடை என்ற தொடரைப் பாரதி பல இடங்களிலே கையாள்கின்றான் (16:46;17:357;28:43). ஆயினும் எளிய நடையின் அடிப்படை அம்சங்கள் பற்றிய தெளிவான விளக்கங்கள் எதுவும் தரப்படவில்லை. கவிதைக்கும் உரைநடைக்கும் இருக்கவேண்டிய பண்புகள் பற்றி, கம்பன் கோதாவரிக்குக் கவிதையை உவமித்துக் கூறியதை அடிப்படையாகக் கொண்டு பாரதி விளக்க முயல்கிறான். ''கவிதைகளில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்கவேண்டும் என்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை'' என்றும் (16:45) ''வசன நடை கம்பர் கவிதைக்குச் சொல்லியது போலவே தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்குமுடையதாய் இருக்கவேண்டும். இவற்றுள் ஒழுக்கமாவது தட்டுத்தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை''

என்றும் (16:142) பாரதி கூறுகிறுன். இங்கு ஒளி, குளிர்ந்த நடை, தண் மை போன்றவை எதை உணர்த்துகின்றன என்பதை மொழியியல் அடிப் படையில் நாம் புறநிலையாக விளக்க முடியாது என்பது தெளிவு. மொழி நடையைப் பொறுத்தவரை இவையெல்லாம் மனப்பதிவின் (impression) பாற்பட்டவையாகும். பாரதி வசன நடை பற்றி எழுதுகையிலே 'வாக்கி யம் தத்தளிக்கத்தான் செய்யும்', 'நடை நேராகச் செல்ல வேண்டும்,' 'நேரான எழுத்து' போன்ற தொடர்களையும் கையாள்கின்றுன் (16·142). இவற்றின் மூலமும் பாரதி என்ன கருதுகிறுன் என்பதை நாம் புறநிலையாக விளங்கிக்கொள்வது சிரமமானதே.

அரவிந்தரின் கடலுக்கு என்ற கவிதையைத் தமிழில் மொழி பெயர்த்த பாரதி, அதற்கு எழுதிய ஒரு குறிப்பிலே அதில் தான் கையாண்ட மொழி நடை பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்.

> ''இம் மொழி பெயர்ப்பைச் சகல ஜனங்களுக்கும் தெளிவாகும் படி மிக எளிய நடையிலே அமைக்க வேண்டு மென்று சிரமப்பட் டிருக்கி றேன். என்னை யறியாமல் அகராதிப் பண்டிதர்களுடைய சில 'கற்சற்' மொழிகள் விழுந்திருக்கின்றன. செய்யுள் அமைதி நாடி அம் மொழிக ளுக்கு எளிய பிரதி பதங்கள் போடாமல் இருந்துவிட்டேன். இதன் பொருட்டுப் படிப்போர்கள் க்ஷமிக்குமாறு பிரார்த்தனை செய்கிறேன்'' (28:43).

இம் மேற்கோளிலிருந்து எளிய பதங்களே எளிய நடைக்கு அடிப்படை என்று பாரதி கருதுவதாகக் கொள்ள முடியும். எல்லோருக்கும் பரிச்சய மான, அன்றாட வழக்கில் உள்ள சொற்களையே எளிய பதங்கள் என பாரதி கருதுகிறுன் என்பது தெளிவு. எளிய பதங்களைக் கையாள்வதனுல் மட்டும் பொருள் விளக்கத்தை ஏற்படுத்திவிட முடியாது. உருபன் அமைப்பு, வாக்கிய அமைப்பு என்பவற்றிலும் இவ் வெளிமை இடம் பெறும் போது தான் எல்லோராலும் விளங்கிக் கொள்ளக் கூடிய எளிய நடை உருவாக முடியும். ஆனல் பாரதி உருபன் அமைப்பு. வாக்கிய அமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய இலக்கண அமைப்புப் பற்றி வெளிப்படையாகப் பேசாமல் சொற்கள் பற்றியே பேசுகின்றுன். மொழி மாற்றம் பற்றிக் கூறும்போதும் 'பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உருவாகின்றன' எனச் சொற்க ளின் மாற்றம் பற்றியே கூறுகின்றுன். ஆகவே மொழி மாற்றம், எளிமை என்பன பற்றிப் பேசுகையில், பாரதி சொற்களையே பிரதானமாகக் கருத் தில் கொண்டுள்ளான் என்றும் இலக்கண அமைப்பைக் கவனத்தில் கொள் ளவில்லை என்றும் ஒருவர் சிலவேளை கருதக் கூடும். ஆனல் மொழி மாற் றம், எளிமை ஆகியவற்றில் இலக்கண அமைப்பின் முக்கியத்துவம் பற்றிப் பாரதி வெளிப்படையாக எதுவும் கூருவிடினும் அவனது உரை நடையிலும்

கவிதையிலும் மொழியின் எல்லாக் கூறுகளிலும் புதுமை புகுந்திருப்பதையே நாம் காண்கின்றோம். சொற்களில் மட்டும் எளிமையையும், உருபன் அமைப்பு, வாக்கிய அமைப்பு ஆகியவற்றில் பழமையையும் பாரதி பேண வில்லை. ஆகவே பாரதி 'எளிய பதங்கள்', அல்லது 'அந்த அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாக விளங்கக் கூடிய பதங்கள்' என்று கூறும் போது சொற்களை மட்டுமன்றி முழு இலக்கண அமைப்பையுமே கருதுகிறான் என்று கொள்வதே பொருத்தமானது. இக் கருத்தைப் பாரதி பிரக்ஞை பூர்வமா கக் கொண்டிருந்தானு என்று கூற முடியாது. ஆயினும் பாரதியின் உள்ளு ணர்வில் பதம் என்பது உருபன்களையும் வாக்கியங்களையும் உள்ளடக்குவதா கவே தோன்றுகின்றது. பழைய இலக்கண நூல்களிலும் இத் தன்மையை நாம் காண்கின்றோம். தமிழ் மொழியின் அமைப்பை எழுத்து, சொல் என்ற இரு பெரும் பிரிவுகளிலேயே பழைய இலக்கண காரர் ஆராய்ந்துள்ளனர். சொல்லதிகாரத்தில் சொல்லமைப்பும் (உருபன் அமைப்பு), சொற் தொடர் அமைப்பும் (வாக்கிய அமைப்பு) சேர்த்தே ஆராயப்படுகின்றன. சொற் கூறுகளாகிய உருபன்களை இடைச் சொற்கள் என்றே இலக்கண காரர் அழைப்பர். இம் மரபிலேயே பாரதி பதம் என்ற சொல்லைக் கையாள்கின் றான் என்று நாம் கருதலாம். பாரதி தன் எழுத்துக்களிலே சொற்களில் மட்டுமன்றி சொற்புணர்ச்சி, வாக்கியம் போன்ற மொழியின் எல்லா அம் சங்களிலும் புதிய மாற்றங்களைப் புகுத்தியிருப்பதும் இதை உணர்த்தும்.

3.5 பேச்சும் எழுத்தும்

தமிழிலே பேச்சு மொழி, எழுத்து மொழி ஆகிய இரண்டுக்கும் இடையே பாரிய வேறுபாடுகள் உள்ளன. இவ் வேறுபாடுகள் இவ்விரு வகை களும் வெவ்வேறு மொழிகளோ எனக் கருதத் தக்க அளவு உள்ளதாக நவீன மொழியியலாளர் சிலர் கருதுவர் (31:1). இவ்விரு வகைகளுக்கும் இடையே அதிக அளவு வேறுபாடுகள் இருப்பது மட்டுமன்றி, பேச்சுத் தமிழ், எழுத்துத் தமிழைவிடத் தரங் குறைந்தது; கொச்சையானது என் றும் எழுத்துத் தமிழே உயர்ந்தது தூய்மையானது என்றும் கருதப் படு கின்றது இதனால் எழுத்துத் தமிழிலே பேச்சுத் தமிழைக் கலக்காது தூய இலக்கிய வழக்கையே பேணவேண்டும் என்ற கருத்தும் பலகாலமாக நிலவி வந்தது. பேச்சுக்கும் எழுத்துக்கும் இடையே இடைவெளி பெருகி வளர்ந் தமைக்கு இதுவும் ஒரு முக்கிய காரணியாகலாம்.

எழுத்தறிவு ஒரு சிறுபான்மையினருக்கு மட்டும் உரியதாக இருந்த காலத்தில் பேச்சுக்கும் எழுத்துக்கும் இடையே நிலவிய இந்த இடைவெளி இயல்பானதாக இருந்திருக்கலாம். ஆனால் எழுத்தறிவு பெருகிய, மேலும் பெருக வேண்டிய அவசியம் உள்ள இன்றைய ஜனநாயக யுகத்திலே இந்த

இடைவெளி முக்கிய கவனத்துக் குரியதாகின்றது. பரந்துபட்ட பொது மக்களின் எழுத்தறிவுத் தேட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, மொழியை நவீனப் படுத்த – அல்லது எளிமைப்படுத்த எடுக்கப்படும் முயற்சிகள் ஒரு வகையில் பேச்சுக்கும் எழுத்துக்கும் இடையே நிலவும் இந்த இடை வெளியைக் குறைப்பதற்கான முயற்சிகளே எனலாம்.

19 ஆம் நூற்றுண்டின் நவீன உரை நடையின் முன்னேடிகளிடம் இப் போக்கினை நாம் ஓரளவு காண்கின்ருேம். புதிய தமிழ் உரை நடையின் முதல் முயற்சியாளர்களான, தத்துவ போதக சுவாமிகள், வீரமாமுனிவர், சீகன் பால்கு ஐயர் போன்ற ஐரோப்பிய பாதிரிமார்கள் சாதாரண சனங்களுக்காகத் தாங்கள் எழுதிய உரை நடையை ஓரளவு பேச்சு வழக்குச் சார்ந்ததாகவே அமைக்க முன்ருர்கள். இது பற்றிப் பேராசிரியர் வி. செல்வநாயகம் கூறுவது இங்கு கவனிக்கத்தக்கது.

> ''பேச்சு வழக்கில் உள்ள மொழியை ஆதாரமாகக் கொண்டு எழுகின்ற நடை எதுவோ, அதுதான் சிறந்தது என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். அதனுல் பொதுமக்கள் பேசும் தமிழில் உள்ள சொற்களையும் இலக்கண அமைதிகளையும் பயன் படுத்தி தமிழுக்கு ஒரு புதிய நடையிலே தம் கருத்துக்களை வெளியிடத் தொடங்கினர்'' (20:78)

செல்வநாயகத்தின் இக் கூற்று சற்று மிகைப்படுத்தலாக இருப்பினும் அதை முற்றிலும் நாம் நிராகரிப்பதற்கில்லை. 17-ம் நூற்றுண்டில், தமிழ் நாட்டில் வந்து வாழ்ந்த தத்துவ போதக சுவாமிகளின் பின்வரும் உரை நடைப் பகுதியில் பேச்சு வழக்கின் செல்வாக்கினை நாம் காண்கின்ருேம்.

> ''இரண்டாஞ் சல்லாபத்திலே நம்மால் உபதேசிக்கப் பட்ட தெல்லாம் நன்றுய்த் தெளிஞ்சாயானுல் இப் பாலும் அறிய வேண்டியதை சங்கோசப் படாமல் கேழ்ப்பாயாக.''

> ''அதுகளைப் புத்தியானது சென்று புடிக்கக் கூடாமலிருக்கச் செய்தே, அதுகளை யெந்தக் காரணத்தினுலே அறியலாம்.'' (26:42)

வீரமாமுனிவரின் பரமார்த்த குரு கதைகளிலும் பேச்சு வழக்கின் செல்வாக்கை நாம் ஓரளவு காணலாம். 18 ஆம் நூற்றுண்டின் இறுதியில் ஞானப்பிரகாச சுவாமிகளினுல் எழுதப்பட்ட சிலுவைப் பாதையின் ஞான முயற்சி என்னும் நூல் 'செந்தமிழுடன் கொடுந்தமிழும் கலந்து' எழுதப் பட்டதாகத் தெரியவருகிறது (6:174). 18 ஆம் நூற்றுண்டிலே கற்ருேர் மரபில் இருந்து முற்றிலும் விலகிய, சாதாரண பேச்சு வழக்கை நேரடியாகப் பிரதிபலிக்கும் ஆனந்தரங்கம் பிள்ளை (1709–1761) யின் எளிமையான உரை நடை முயற்சி ஒன்றையும் நாம் காண்கின்ருேம்.

''காலமே தரங்கம்பாடி சின்னத்துரை பேர்விளங்கன் வந்தான். ஆள் கழுக்கு மழுக்கென்று மணலிலே பிடுங்கி எடுத்த வள்ளிக் கிழங்காட்டமாயிருக்கிறான். முகம் பரந்த முகமாய் ஆனவாகனாய் இருக்கிறான். அவன் சென்னப் பட்டணத்துக்குப் போயிருந்து வந்தவன். மீனாட்சியம்மை சத்திரத்திலே வந்து சொல்லியனுப்பினான்.''

ஆனந்தரங்கம் பிள்ளையின் மேற்காட்டிய உரைநடைப் பகுதி பெரிதும் பேச்சு வழக்குச் சார்ந்தது என்பது வெளிப்படை. ஆயினும் இத்தகைய பேச்சு மொழி சார்ந்த உரைநடை மரபு ஆறுமுக நாவலர் போன்ற கற்றறிந்த, மரபு வழி நின்ற, சுதேச உயர் குழாத்தினர் மத்தியில் செல்வாக்குப் பெற முடியவில்லை. அவர்கள் தூய இலக்கிய நடையையே பெரிதும் போற்றினர். ஆறுமுக நாவலர் இலக்கண வழுவற்ற தூய இலக்கிய நடையினையே வலியுறுத்தியவர். ஆயினும் அதனை எல்லோர்க்கும் விளங்கத் தக்கதாக எளிமைப்படுத்தவும் முயன்றார். 'கல்வியறிவுடைய வித்துவான்கள், கல்வியறிவு குறைந்தவர்கள், கல்வியறிவு இல்லாதவர்கள் ஆகிய யாவருக்கும் எளிதில் பொருள் விளங்குமாறு, பெரும்பாலும் இயற் சொற்களைக் கொண்ட, அவசியமான இடத்து சிறுபான்மை திரிசொற்களும் வடசொற்களும் கலந்த, பெரும்பாலும் சந்தி விகாரங்கள் அற்ற ஒரு உரைநடையைத், தான் கையாண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார் (4:3). இவ் வகையில் 19 ஆம் நூற்றாண்டில் தமிழ் உரை நடையை நவீனப்படுத்த முயன்ற முன்னோடிகளுள் ஆறுமுக நாவலருக்கும் ஒரு முக்கிய இடம் உண்டு.[13] எனினும் நாவலரின் உரை நடையிலே பேச்சு வழக்குக்கு இடமில்லை. பழைய இலக்கண விதிகளைப் பேணுவதையே அவர் வலியுறுத்தினார்.

''உரை நடையிலே அன்றாடப் பேச்சு வழக்கு வடிவங்களையும் சொற்களையும் பயன்படுத்துவதற்கு ஆறுமுக நாவலர் திட்டவட்டமாக எதிரானவர். அந்த வகையிலே இறுகிய, வளைந்து கொடுக்காத, ஒருவகையில் செயற்கையான தமிழ் உரைநடை வகை ஒன்று இன்றுவரை கூட நிலைத்திருப்பதற்கு அவரும் ஓரளவுக்குப் பொறுப்பாளியாக இருக்கின்றார்'' என கமில் சுவலபில் கூறுவதும் இங்கு

மனங்கொள்ளத் தக்கது (41:259). ஆறுமுக நாவலர் போன்ற சமூக உயர் குழாத்தினர், புதிய தமிழ் உரை நடையின் முதல் முயற்சியாளர்களான ஐரோப்பிய பாதிரிமாரைப் பின்பற்றிப் பேச்சு மொழி சார்ந்த தமிழ் உரை நடை ஒன்றை அமைக்க முயன்றிருந்தால், இன்று தமிழ் உரைநடையின் சரித்திரமே வேறாக இருந்திருக்கலாம். பேச்சுக்கும் எழுத்துக்கும் இடையே இன்று நிலை பெற்றிருக்கும் இடைவெளி சுருங்கி இருக்கலாம். ஆனால் இவ் விடைவெளியைச் சுருக்க யதார்த்த வாதத்தைக் கையாண்ட புனைகதை எழுத்தாளர்களும் பரந்துபட்ட வெகுஜன இயக்கங்களில் ஈடுபட்ட பிற்

காலத்தவர் சிலருமே குரல் கொடுத்தனர். பாரதி இதிலே முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவன். பாரதியின் எழுத்துக்களிலே பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் இணைக்கும் முயற்சிகளை நாம் காணலாம்.

3.6 பாரதியும் பேச்சு மொழியும்

தனது உரைநடைக் கொள்கைபற்றிப் பாரதி பின்வருமாறு எழுதியுள்ளான்.

> ''தமிழில் வசனநடை இப்போதுதான் பிறந்து பல வருஷமாகவில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும். ஆதலால் இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்யவேண்டும். கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமமென்பது என்னுடைய கட்சி. எந்த விஷயமெழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம் எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைத்துவிட்டால் நல்லது.'' (16:142)

'கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமம்' என்ற தன் கொள்கையைப் பாரதி இங்கு வலியுறுத்திக் கூறியுள்ளான். 'எந்த விஷயமெழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது' என்றும் அவன் கூறுகின்றான். பேச்சுக்கும் எழுத்துக்கும் இடையே அதிக வேறுபாடு இருக்கக்கூடாது என்பதுதான் இதன் சாராம்சம் என்பது தெளிவு. ஆயினும் 'பேசுவதுபோல எழுதுவது' என்பதன் மூலம் மொழி அமைப்பு ரீதியாக பாரதி உண்மையில் எதைக் கருதினன் என்பது ஆய்வுக்குரியது. பேச்சுத்தமிழை அப்படியே எழுத்தாக்கம் செய்வதைப் பாரதி கருதியிருக்க முடியாது. ஏனெனில் பாரதியின் கவிதைகளிலும், உரைநடையிலும் பேச்சுமொழியின் செல்வாக்கு இருக்கின்றதே தவிர, அவை பேச்சுத் தமிழ் அல்ல. தவிரவும் பேச்சுத் தமிழை அப்படியே எழுத்தில் கொண்டு வருவதிலும் பல சிக்கல்கள் உள்ளன. பேச்சுத்தமிழ் இடத்துக்கு இடமும் சமூகத்துக்கு சமூகமும் பெரிதும் வேறுபடுகின்றது. இவற்றிலே எச் சமூகத்தவர் அல்லது எவ்விடத்தவர் பேசும் பேச்சை அடியொற்றி எழுதுவது என்பது பெரிய பிரச்சினைக்குரியது. கற்றறிந்தவர்கள் மேடைகளிலும் ஆய்வரங்குகளிலும் வேறு சம்பிரதாய சூழல்களிலும் பெருமளவு எழுத்துத்தமிழை ஒட்டிய ஒரு பேச்சு முறையைக் கையாள்கின்றனர்கள். எனினும் படித்த, படிக்காதவர் எல்லோருக்கும் பொதுவான தராதரப் பேச்சுத்தமிழ் (Standard Spoken Tamil) ஒன்று இன்னும் தெளிவாக உருவாகவில்லை. இந்நிலையில் பேசுவது போல எழுதுவது என்பதை ஏதா

வது ஒரு பேச்சுவடிவத்தைப் பின்பற்றி எழுதுவது என்ற கருத்தில் பாரதி கையாண்டிருக்க முடியாது. ஆகவே, பேசுவதுபோல எழுதுவது என்பதன் மூலம் பாரதி என்ன கருதினுன் என்பதை அவனது எழுத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழியைக் கொண்டே நாம் தீர்மானிக்க வேண்டும்.

3.7 பாரதியின் எழுத்தில் பேச்சு மொழியின் செல்வாக்கு

பாரதியின் எழுத்தில் காணப்படும் ஒரு பிரதான அம்சம் சிறு வாக்கிய அமைப்பாகும். இது பேச்சு மொழியின் ஒரு முக்கிய பண்புமாகும். நாம் பேசும்போது தொடர்ந்து செல்லும் நீண்ட வாக்கியங்களைப் பெருபாலும் பேசுவதில்லை. சிறு சிறு வாக்கியங்களையே பெரிதும் பயன்படுத்துகின்றேம்' பாரதி இத்தகைய வாக்கிய அமைப்பையே பெரிதும் பயன்படுத்தியுள்ளான். 19-ம் நூற்றுண்டில் ஆறுமுக நாவலர் பாலபாடம், இலக்கண வினவிடை போன்ற கல்விசார் நூல்களிலே இத்தகைய சிறுவாக்கிய அமைப்பைப் பயன்படுத்தியுள்ளார் எனினும் உரையாசிரியர் வழிவந்த மிக நீண்ட வாக்கியங்களையும் அவர் ஏராளமாகக் கையாண்டுள்ளார். உதாரணமாக திருத்தொண்டர் பெரியபுராண வசனத்திலே 36 வரிகளில் 180 சொற்கள் கொண்ட நீண்ட வாக்கியத்தைக் காண்கின்றேம். ஆனுல் பாரதியின் வாக்கியங்கள் எல்லாம் பொதுவாக அளவில் சிறியனவாகும். உதாரணமாக சிட்டுக்குருவி பற்றிய பின்வரும் விபரணத்தைக் காட்டலாம்.

> ''சிறிய தானியம் போன்ற மூக்கு; சின்னக் கண்கள்; சின்னத் தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப் போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப் போர்த்த முதுகு; சிறிய தோகை; துளித் துளிக் கால்கள். இத்தனையும் சேர்ந்து ஒரு பச்சைக் குழந்தையின் கையிலே பிடித்து விடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண். மற்றென்று பெண்'' *(16:104-105).*

இப்பந்தியிலே உள்ள வினை தொக்கிய சிறு வாக்கிய அமைப்பு 'பேச்சுமொழியைப் பெரிதும் எதிரொலிப்பதாக உள்ளது.' அதுமட்டுமன்றி, ''இவருடைய பாட்டில் ஒரு புதுமை என்னவென்ருல், அது வசன நடை போலேதான் இருக்கும். எதுகை, மோனை, தளை ஒன்றுமே கிடையாது'' என்பன போன்ற பாரதியின் வாக்கியங்கள் *(14:342)* பெரிதும் பேச்சில் பயிலும் வாக்கியங்களாகவே உள்ளன. இத்தகைய வாக்கிய அமைப்பு, இ. அண்ணுமலை கூறுவதுபோல ''பேச்சு வழக்கினையும் எழுத்து வழக்கினையும் இணையும்படி செய்கின்றது.'' *(1:373).*

பேச்சுமொழியிலே காணப்படும் இலக்கண அமைதிகள் பலவற்றையும் பாரதி தன் எழுத்திலே கையாண்டுள்ளான். உதாரணமாக ''இதுவெல்லாம் நமக்கு மகிழ்ச்சியளிக்கிறது.'' இதுவெல்லாம் கால மாறுபாட்டை உள்ளங்கை நெலிக்கனி போல விளக்குகின்றது'' (29 : 170) ஆகிய வாக்கியங்களிலே இடம் பெற்றுள்ள இதுவெல்லாம் என்னும் தொடர் ஆறுமுக நாவலர் போன்ற இலக்கணத் தூய்மை வாதிகளால் ஏற்றுக்கொள்ளப் படாதவை. ஒருமைச் சொல்லான இது பன்மைச் சொல்லான எல்லாம் என்பதுடன் எவ்வாறு இணையும் என அவர்கள் ஆட்சேபிப்பர். இவையெல்லாம் என்றே எழுதவேண்டுமென்பர். ஆனால் இதுவெல்லாம் — இதெல்லாம் என்பது பேச்சு வழக்காகும். 'இதுவெல்லாம் நமக்கு மகிழ்ச்சியளிக்கிறது' என்ற வாக்கியம் பேச்சுமொழியின் இலக்கண அமைதியை உள்வாங்கிக்கொண்டதன் விளைவாகும். ('இது நமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது', 'இவையெல்லாம் நமக்கு மகிழ்ச்சியளிக்கின்றன என்பனவே தூய எழுத்து வழக்கு வாக்கியங்களாகும்.) இத்தகைய பல உதாரணங்களை நாம் பாரதியிடம் காணமுடியும்.

சொற்களைப் பொறுத்தவரை தன்காலத்து ஜனங்களுக்கு எளிதில் விளங்கக்கூடிய பதங்களையே கையாளவேண்டும் என்ற பாரதியின் கொள்கைபற்றி ஏற்கனவே பார்த்தோம். இலக்கிய வழக்கில் மட்டும் பயிலும் அருகிய சொற்களை விட அன்றாடப் பேச்சு வழக்கில் உள்ள சொற்களே ஜனங்களுக்கு எளிதில் விளங்கக்கூடியவை. பாரதியின் கவிதைகளிலே ''செய்யுள் அமைதி நாடி'' சில அருகிய சொற்கள் கையாளப் பட்டிருப்பினும் உரைநடையிலே பெரிதும் வழக்குச் சொற்களே கையாளப் பட்டுள்ளன. இதுவும் இரு வழக்குகளையும் இணைக்கும் முயற்சியாகும். ஆச்சே, போச்சே, வருகுது போன்ற பேச்சுவழக்கில் மட்டும் பயிலும வினை வடிவங்களையும் பாரதி சிறுபான்மை கவிதையில் கையாண்டுள்ளமையும் முக்கியத்துவமுடையது.

பேச்சில் வழங்கும் பிறமொழிச் சொற்களை எழுதும் போது பழைய இலக்கண விதிகளுக்கு ஏற்ப அவற்றைத் தமிழ் மயப்படுத்தாது, பெரிதும் அவற்றின் உச்சரிப்பைத் தழுவி எழுதவே பாரதி முயன்றிருப்பதைக் காணலாம். ஸம்ஸ்க்ருதம், மனுஷ்யத் தன்மை, ஸ்வராஜ்யம், ஸ்த்ரீகள், பிரஹ்லாதன், பூஜை, தைர்யம் போன்ற சொற்களை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். இங்கு பாரதி இவற்றைத் தான் உச்சரிப்பது போலவே எழுத முயன்றிருக்கிறான் எனக் கருதலாம். பிறமொழிப் பெயர்களை அவற்றின் உச்சரிப்புக்கு ஏற்பத் தமிழில் எழுதுவதற்குப் புதிய எழுத்துக் குறிகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் பாரதி கருதினான். இது பற்றிப் பின்னர் ஆராயலாம்.

சொற்புணர்ச்சியைப் பொறுத்தவரை பாரதி, பேச்சுமொழியைப் பெரிதும் பின்பற்றி இருப்பதைக் காணலாம். கற்றூண், புற்றரை போன்ற பேச்சில் இல்லாத புணர்ச்சிகளைப் பெரிதும் தவிர்த்துள்ளான். சொற்களைப் பெரிதும் சந்தி பிரித்து எழுதியிருப்பதைப் பாரதியின் எழுத்துக்களில் அவ தானிக்க முடியும். ஆயினும் இதில் ஒரு ஒருமைப்பாடின்மை காணப்படுகின் றது. சில இடங்களில் சந்தி பிரித்து எழுதப்பட்டிருப்பவை வேறு சில இடங்க ளில் புணர்த்தி எழுதப்பட்டுள்ளன. ஒரு கட்டுரைக்குள்ளேயே இத்தகைய முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஒரே கட்டுரை வெவ்வேறு பதிப்புக்க ளில் இடம்பெறும் போது அவற்றிலும் இத்தகைய வேறுபாடுகள் காணப் படுகின்றன. இது பாரதியின் முரண்பாடா அல்லது பதிப்பித்தவர்களின் கவனக்குறைவினால் ஏற்பட்டதா என்பது ஆய்வுக்குரியது. பாரதி நூல்க ளிலே பாடபேதம் நிறைய உள்ளன என்பது பிரசித்தம். 'பாரதி நூல்களும் பாடபேத ஆராய்ச்சியும்' என்ற நூலில் இது பற்றிக் கைலாசபதி விரிவாக ஆராய்ந்துள்ளார். பாரதியின் மொழி நடை பற்றி ஆராய்வோருக்கு இப் பாடபேதம் ஒரு முக்கிய பிரச்சினையாகும். உதாரணத்துக்கு ஒன்றைக் கூற லாம். தமிழ் பாஷைக்கு உள்ள குறைகள் என்ற பாரதியின் கட்டுரை ரா. அ. பத்மநாபன் தொகுத்த பாரதி புதையல் முதல் தொகுதியிலும் இளசை மணியன் தொகுத்த பாரதி தரிசனம் இரண்டாம் தொகுதியிலும் இடம் பெற்றுள்ளது. இவ்விரு பதிப்பிலும் சந்தி பிரித்தல் சம்பந்தமாக அநேக வேறுபாடுகளைக் காண முடிகின்றது. பத்மநாபனின் பதிப்பில் உள்ள சில வரிகள் பின்வருமாறு.

தமிழ் பாஷைக்கு உள்ள குறைகள்

[பி. ஏ. பரீட்சை தேறிய ஒரு வாலிபனுடைய எண்ணங்கள்]

வாலிபன் : தமிழ்ப் பாஷை ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை. இது சீக்கிரம் அழிந்தால் தான் நமது நாடு பிழைக்கும்

புலவன் : ஏதப்பா, உனக்கு இந்தப் பாஷையிலே இவ்வளவு கோபம் உண்டாயிருக்கின்றது?

....

புல : 'நாம்' என்று யாரையப்பா சேர்த்துச்சொல்கிறாய்?

இளசை மணியனின் நூலிலே இப்பகுதி பின் வருமாறு பதிப்பாகி உள்ளது.

தமிழ் பாஷைக்குள்ள குறைகள்

(ஒரு பி. ஏ. பரீட்சை தேறிய பிராமண வாலிபனுடைய எண்ணங்கள்)

(வாலிபனுக்கும் புலவனுக்கும் சம்பாஷணை)

வாலிபன் : தமிழ் பாஷை ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை. இது சீக்கிரம் அழிந்தால் தான் நமது நாடு பிழைக்கும்.

புலவன் : ஏதப்பா, உனக்கு இந்த பாஷையிலே இவ்வளவு கோபம் உண்டாயிருக்கின்றது

....

புலவன் : 'நாம்' யென்று யாரையப்பா சேர்த்து சொல்லுகிறாய்?

இளசை மணியனின் பதிப்பிலே தலைப்பில் காணப்படும் சில பகுதிகள் பத்ம நாபனின் பதிப்பில் இடம்பெறவில்லை. ஒரு என்ற அடை இடம் மாறியுள்ளது. சொற் புணர்ச்சியில் இரு பதிப்பிலும் பின்வரும் வேறுபாடுகள் இருப்பதையும் அவதானிக்கலாம்.

தமிழ்ப் பாஷை	தமிழ் பாஷை
பாஷைக்கு உள்ள	பாஷைக்குள்ள
இந்தப் பாஷை	இந்த பாஷை
'நாம்' என்று	'நாம்' யென்று
சேர்த்துச் சொல்	சேர்த்து சொல்
சொல்கிறாய்	சொல்லுகிறாய்

இத்தகைய வேறுபாடுகள் இவ்விரு பதிப்பிலும் ஏராளமாக உள்ளன. இளசை மணியனின் பதிப்பில் இக்கட்டுரையில் பத்து இடங்களில் தமிழ் பாஷை என்று பகர ஒற்று மிகாமலும் ஒரு இடத்தில் மட்டும் பகர ஒற்று மிகுந்து தமிழ்ப் பாஷை என்றும் அச்சிடப்பட்டுள்ளது. ஆனால் பத்மநாபனின் பதிப்பில் எட்டு இடங்களில் தமிழ்ப் பாஷை என்று ஒற்று மிகுந்தும் மூன்று இடங்களில் தமிழ் பாஷை என்று ஒற்று மிகாமலும் அச்சிடப்பட்டுள்ளது. இத்தகைய முரண்பாடான தரவுகளை வைத்துக்கொண்டு பாரதியின் உண்மையான சந்திபிரிப்புப் பற்றி நம்மால் திட்டவட்டமாக எதுவும் சொல்ல முடியாதுள்ளது. பொதுப்படையாக, பாரதியின் சொற் புணர்ச்சி பெரிதும் பேச்சு மொழி உச்சரிப்பை ஒட்டியதாக உள்ளது என்று மட்டுமே கூற முடியும். இது தனியே விரிவான ஆய்வுக்குரியது.

இதுவரை நோக்கியதில் இருந்து, பேசுவது போலவே எழுதுவது தான் உத்தமம் என்று பாரதி கூறியதன் பொருள், ஏதாவது ஒரு பேச்சு மொழி வடிவத்தை அப்படியே எழுத்தில் கொண்டு வருவதல்ல என்பது தெளிவாகும். பதிலாக எல்லாக் கிளை மொழிகளுக்கும் உரிய பொதுவான அம்சங்களை உள்வாங்கிக்கொண்டு, பேச்சு மொழியின் ஆட்சி மிகுந்த கூறுகளை எழுத்தில் கலந்து பெரிதும் பேச்சு மொழியை ஒட்டிய ஒரு எழுத்து நடையை உருவாக்குவதையே அது குறிக்கின்றது எனக் கருதலாம். பாரதி இதையே நடைமுறையில் செய்து காட்டினான். மொழியை ஒரு மாறும் சாதனமாகக் கருதியமையினாலேயே பாரதிக்கு இது சாத்தியமாயிற்று. அதனாலேயே நிலையான, மாறாத இலக்கண விதிகளை ஏற்றுக் கொள்ளாது புதிய வழக்குகளை முதன்மைப் படுத்தி எழுத்து மொழியை எளிமைப் படுத்த அவனால் முடிந்தது. மொழி மாற்றத்தைப் புரிந்து கொண்டதாலேயே மொழி வளர்ச்சி பற்றியும் பாரதியால் சிந்திக்க முடிந்தது.

4

மொழி வளர்ச்சியும் பாரதியும்

4.1 மொழி வளர்ச்சி பற்றிய வரையறை

மாருத எதுவும் வளர்ச்சி அடைவதில்லை என்பது ஒரு சாதாரண இயக்கவியல் உண்மையாகும். மொழியும் இதற்கு விலக்கல்ல. வாழும் மொழிகளெல்லாம் இடையருது மாற்றத்துக்கு உள்ளாகின்றன. அதனுல் தொடர்ந்து வளர்ச்சி அடைகின்றன. மாற்றமும் வளர்ச்சியும் ஒரு நிகழ்ச்சியின் இரு அம்சங்களாகும். மொழி ஒரு சமூக சாதனம் ஆகையால் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களும் வளர்ச்சிகளுமே மொழி மாற்றத்தையும் வளர்ச்சியையும் இறுதியாகத் தீர்மானிக்கின்றன எனலாம். முற்காலத்திலே மொழி வளர்ச்சி பிரக்ஞை பூர்வமான ஒரு நிகழ்ச்சியாக இருக்கவில்லை எனலாம். அதனுலேயே மொழி வளர்ச்சி பற்றிய திட்டங்களும், கொள்கைகளும் பழைய மொழி நூல்களில் காணப்பட வில்லை. இன்றையக் கைத்தொழில் நாகரீக யுகத்திலே பிற துறைகள் போல மொழி வளர்ச்சியும் பிரக்ஞை பூர்வமான ஒரு நிகழ்ச்சியாக உள்ளது. மொழி வளர்ச்சி பற்றிய கொள்கைகளும் திட்டமிட்ட செயல் முறைகளும் காணப்படுகின்றன.

மொழி வளர்ச்சியை அளவிடுவதற்கு ஃபேர்குசன் மூன்று அளவு கோல்களைக் கொடுத்துள்ளார். எழுத்தாக்கம் (graphization), நியமப் படுத்துதல் (standardization), நவீனப படுத்துதல் (modernization) என்பன அவை. ஒரு மொழிக்கு எழுத்து வடிவத்தை ஏற்படுத்துதல், புதிய தேவைகளுக்கேற்ப எழுத்து முறையை மறுசீரமைத்தல் போன்றவை எழுத்தாக்கம் என்பதுள் அடங்கும். நியமப் படுத்துதல் என்பது பல்வேறு சமூக பிரதேசக் கிளை மொழிகளுக் கிடையே ஒரு தராதர வடிவத்தை (norm) உருவாக்குவதைக் குறிக்கும். சொற் தொகுதி, புதிய மொழி நடை ஆகியவற்றின் வளர்ச்சி நவீனப் படுத்துதல் என்பதுள் அடங்கும். மொழி வளர்ச்சியின் இம் மூன்று பரிமாணங்களையும் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகவும் நவீனப் படுத்துதல் என்பது பயன்படுத்தப் படுகின்றது. (48:352—353).

இந்த நூற்ருண்டின் ஆரம்ப தசாப்தங்களில் தமிழ் மொழி வளர்ச்சி பற்றிச் சிந்தித்தவர்களுள் பாரதிக்கு முதலிடம் உண்டு. மொழி வளர்ச்சி பற்றிய பாரதியின் கருத்துக்கள் பெரிதும் அறிவியல் ரீதியில் அமைந்துள்

ள்ன். மொழி மாற்றம் பற்றிய பகுதியிலே மொழி வளர்ச்சியோடு தொடர்புடைய, எளிய நடைபற்றிய பாரதியின் கருத்துக்கள் சற்று விரிவாக ஆராயப் பட்டுள்ளன. இப் பிரிவிலே மொழி வளர்ச்சி பற்றிப் பொதுவாகவும், கலைச் சொல்லாக்கம், எழுத்துச் சீர்திருத்தம் என்பன பற்றிக் குறிப்பாகவும் பாரதி கூறியுள்ள கருத்துக்கள் ஆராயப்படும்.

4.2 சமுதாய வளர்ச்சியும் மொழி வளர்ச்சியும்

மொழியை ஒரு சமூக சாதனமாகக் கருதியவன் பாரதி என ஏற்கனவே கூறப்பட்டது. அதற்கிணங்க மொழி வளர்ச்சியைச் சமூகநிலைப் பட்டதாகவே பாரதி நோக்குகின்ருன். மொழி வளர்ச்சி சமுதாய வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது என்ற அறிவியல் அடிப்படையில் அமைந்த கருத்தைப் பாரதி கொண்டிருந்தான். 'தமழ்ப் பாஷைக்குள்ள குறைகள்' என்ற கட்டுரையிலே இது பற்றிய பாரதியின் கருத்துக்கள் விரிவாகக் காணப்படுகின்றன. ஆங்கில மோகத்தினுல் தமிழைப் புறக்கணிக்கும் பி. ஏ. படித்த வாலிபன் ஒருவனின் 'மூடத்தனமான' கருத்துக்களுக்குப் பதில் அளிப்பது போல் அமைந்துள்ள அக் கட்டுரையிலே பாரதி பின்வருமாறு கூறுகிருன்.

> ''மனுஷ பாஷைகள் மனுஷ வாழ்க்கையோடு ஒட்டி உடன் வளர்ந்த பொருள்கள் அல்லவோ? தலைமுறை தலைமுறையாய் எத்தனையோ நூற்ருண்டுகளாக ஒரு நாட்டார் பேசிவரும் பாஷை அவர்களின் உயிரோடு ஒன்றி விடுகின்றது. மனித அறிவு வளர்ச்சிக்குப் பாஷை ஒரு கண்ணுடி. ஒரு நாட்டாரின் அறிவு வளர்ந்து கொண்டு வரவர அந்நாட்டின் பாஷையும் விசாலமடைந்து வருகிறது'' (23:70).

இம் மேற்கோளிலே சமுதாய வளர்ச்சியோடு மொழி வளர்ச்சி பிரிக்க முடியாததாய் உள்ளது என்ற கருத்துப் புலப்படுவதைக் காணலாம். ''அளவின்றி விரிந்து கிடக்கும் நவீன சலனங்களை யெல்லாம்......தமிழிலே கொண்டு நுழைப்பது பிராணுபத்தாய்'' இருப்பதற்குக் காரணம் அன்னிய ஆட்சியினுல் தமிழ் நாட்டு ஜனங்கள் பொருளாதார வளர்ச்சியிலும் கல்வியறிவிலும் குன்றியிருப்பதே என்பது பாரதியின் கருத்தாகும். குமாஸ்தாக்களையே உருவாக்கும் ஆங்கிலேயரின் கல்விக் கொள்கையினுல் தமிழ் நாட்டு மக்கள் பொதுவாக மிகவும் அறிவு சுருங்கிப்போய் இருக்கிருர்கள் என்றும் அதற்குப் பாஷையைக் குற்றம் சொல்ல முடியாது எனறும் பாரதி கூறுகிருன். இந்தியாவில் ரெயில் வண்டி வழக்கத்துக்கு வந்ததும் மக்கள் அதற்கு வார்த்தையை ஏற்படுத்திக் கொண்டார்கள். மின்சார சக்தியினுல் தந்தி ஏற்படுத்தப்பட்ட பிறகு அதற்குத் தமிழர்கள் வார்த்தை உண்டாக்கிக் கொண்டார்கள் என்பதைப் பாரதி சுட்டிக் காட்டுகிருன்.

''கோவணம் இல்லாத நிர்வாண தேசத்தாரின் பாஷையிலே பட்டு அங்கவஸ்திரத்துக்குப் பெயர் கிடையாதென்றால் அதற்கு அவர்களுடைய பாஷைமேல் என்ன குற்றம் இருக்கின்றது? துணியைக் கொண்டு கொடுத்து வழக்கப் படுத்தினால் முறையே வார்த்தைகளும் உண்டாக்கிக் கொள்வார்கள். தமிழ் நாட்டிலே தொழில் வகைப்பாடும் ஆலோசனை மிகுதியும் ஏற்பட்டால் தமிழ்ப் பாஷை அன்றைக்கே வளர்ந்து விடும்...... நமது நாடு செல்வமும், பெருமையும், சுதந்திரமும் பெற்ற பிறகு, நமது பாஷை இருக்கும் மாதிரியைப் பார்த்தால் அப்போது ஆச்சரியம் அடையத் தக்க விதமாக இருக்கும்.'' என்றும் பாரதி கூறுகிறான் (23:71,73).

தமிழர் சமூகத்தில் பொருளாதார, கல்வித் துறைகளில் முன்னேற்றமும் புது மலர்ச்சியும் ஏற்படும்போது தமிழ் மொழியும் அதனையொட்டி வளர்ச்சியடையும் என்பதே இங்கு பாரதி கூறுவதன் சாராம்சமாகும். சமுதாய வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் இடையே உள்ள இயக்கவியல் உறவினைப் பாரதி நன்கு புரிந்திருந்தான் என்பதை இதன் மூலம் நாம் அறிய முடிகின்றது. மொழி வளர்ச்சி பற்றிய பாரதியின் கருத்துக்கள் முழுச் சமூக முன்னேற்றம் பற்றிய அவனது சிந்தனையின் ஒரு பகுதியேயாகும் என்பதும் நாம் இங்கு மனங்கொள்ளத் தக்கது.

4.3 மொழிப் பயன்பாடும் மொழி வளர்ச்சியும்

தமிழ் மொழி வளர்ச்சியடைய வேண்டுமானால் சகல துறைகளிலும் தமிழ் மொழியே பயன்படுத்தப்பட வேண்டும் என்று பாரதி கருதினான். இது ஒரு முக்கியமான கருத்தாகும்.

ஐரோப்பியர் காலம் வரை தமிழ் மொழியிலே செய்யுள் நடையே பிரதான மொழி ஊடகமாக இருந்தது. இலக்கியம், இலக்கணம், தத்துவ சாஸ்திரம், வைத்தியம், வானசாஸ்திரம் போன்ற அனைத்தும் செய்யுளிலேயே எழுதப்பட்டன. பண்டைக் காலத்தில் இருந்தே உரை நடை வழக்கில் இருந்ததாயினும் அதன் பயன்பாட்டெல்லை மிகச் சுருங்கியதாகவே இருந்தது. இலக்கிய, இலக்கண நூல்களுக்கு உரை எழுதுவதற்கும், கல்வெட்டுப் போன்ற சில ஆவணங்களுக்குமே உரை நடை பயன்படுத்தப் பட்டது. செய்யுளே பிரதான ஊடகமாக அமைய உரை நடை ஒரு துணைச் சாதனமாகவே இருந்தது. உரை நடையின் பொதுப் பயன்பாட்டுக்கான சமூகத் தேவை அதுவரை உருவாகி இருக்கவில்லை. ஐரோப்பியரின் வருகையைத் தொடர்ந்து 18-ம், 19-ம் நூற்றாண்டுகளிலே தமிழர் சமூகத்தில் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்கள் அதுகால

வரை பயன்படுத்தப் பட்டு வந்த செய்யுளினுலோ, அல்லது உரையாசிரியர் வழிவந்த பழைய உரைநடையினுலோ நிறைவேற்றப் பட முடியாத, புதிய மொழித் தேவைகளைத் தோற்றுவித்தன. இப் புதிய தேவைகளை நிறைவேற்றவல்ல புதிய தமிழ் உரை நடை தோன்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இப்புதிய சமூக, மொழித் தேவைகளே உரை நடையின் பயன்பாட்டெல்லையை விரிவுபடுத்தி, உரை நடையையே பிரதான மொழி ஊடகமாக மாற்றி, அதன் பன்முகப்பட்ட வளர்ச்சிக்கு வழிகோலின.

ஆயினும் பிரித்தானியரின் ஆட்சிக் காலத்திலே ஆங்கிலமே ஆட்சித் துறை நிருவாக மொழியாகவும் கல்வி மொழியாகவும் இருந்து வந்தமையினுல் தமிழ் முதலிய சுதேச மொழிகள் பூரணமாக விருத்தியடைய முடியாத நிலை இருந்தது. அதுமட்டுமன்றி ஆங்கிலம் கற்ற படித்த உயர் வர்க்கத்தினரிடையே வேரூன்றி இருந்த கலாசார ஏகாதிபத்திய மனுேபாவங்களினுல் சுதேச மொழிகள் மதிப்புக் குறைந்தன வாகவும் கருதப்பட்டன. தாய் மொழியின் வலிமை புறக்கணிக்கப் பட்டது. இத்தகைய மனுேபாவங்களுக்கு எதிராகப் பாரதி குரல் எழுப்பியதை நாம் ஏற்கனவே பார்த்தோம். பாரதி தமிழின் மேன்மையை மட்டும் வலியுறுத்தியதோடு அமையாது, சகல துறைகளிலும் தமிழைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தினுன். தமிழின் நிலை என்ற கட்டுரையிலே இது தொடர்பான பாரதியின் கருத்துக்கள் வலுவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

> ''சபைகள், சங்கங்கள், பொதுக் கூட்டங்கள், வருஷோத்சவங்கள், பழஞ்சுவடிகள் சேர்த்துவைத்தல், அவற்றை அச்சிடல் இவையெல்லாம் பாஷை வளர்ச்சிக்கு நல்ல கருவிகள் என்பதில் சந்தேகமில்லை. ஆனுல் தமிழ் மக்கள் தமது மொழியை மேன்மைப் படுத்த விரும்பினுல் அதற்கு முதலாவது செய்ய வேண்டிய காரியம் ஒன்றுண்டு .....எங்கும் எப்போதும் இந்தப் ''பண்டிதர்கள்'' இங்கிலீஷ் பேசும் வழக்கத்தை நிறுத்தினுல், உடனே தேசம் மாறுதலடையும். கூடிய வரை இவர்கள் தமிழ் எழுதக் கற்றுக்கொள்ள வேண்டும்......புஸ்தக ரூபமாகவும், பத்திரிகைகளில் லிகிதங்களாகவும் இவர்கள் எழுதுகிற கதை, காவிய விளையாட்டு வார்த்தை, வினை வார்த்தை, சாஸ்திர விசாரணை, ராஜ்ய நீதி எல்லாவற்றையும் தமிழில் எழுத வேண்டும்''

எனப் பாரதி கூறுகின்ருன் (16:150). பாரதி கூறுவது போல பேச்சிலும் எழுத்திலும் எல்லாத் துறைகளிலும் தமிழைப் பயன் படுத்துவது மொழி வளர்ச்சிக்கு அடிப்படையானது என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை.

4.4 மொழி வளர்ச்சியும் கல்வி மொழியும்

கல்வி, மொழிப் பயன்பாட்டுக்குரிய ஒரு முக்கியமான 'துறையாகும். உயர் கல்வி வரை தாய் மொழியிலேயே கற்பிக்கப்பட வேண்டும் என்பது பாரதியின் கருத்தாகும். தாய்மொழியைக் கல்வி மொழியாக்குவதன் மூலம் மொழி வளர்ச்சியடையும் எனப் பாரதி கருதினன். மொழி வளர்ச்சியைப் பொறுத்தவரை இதுவும் ஒரு முக்கியமான கருத்தாகும். இது தொடர்பான பாரதியின் கருத்துக்களை தேசியக் கல்வி என்னும் அவனது கட்டுரையிலே விரிவாகக் காணலாம். தாகூரின் கல்வி கற்பிக்கும் பாஷை (The medium of Education) என்னும் நீண்ட கட்டுரையையும் பாரதி மொழி பெயர்த்துள்ளான் (20:582-610). தாய் மொழிக் கல்வி பற்றிய தாகூரின் ஆணித்தரமான கருத்துக்களுடன் ஏற்புடமை கொண்டே பாரதி அதனை மொழி பெயர்த்துள்ளான் என்பதில் ஐயமில்லை. தேசியக் கல்வி என்னும் கட்டுரையிலே பாரதி பின்வருமாறு எழுதுகிறுன்.

> ''தமிழ் நாட்டிலே தேசியக் கல்வி என்பதாக ஒன்று தொடங்கி, அதில் தமிழ்ப் பாஷையைப் பிரதானமாக நாட்டாமல் பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும் தமிழ் ஒருவித உப பாஷையாகவும் ஏற்படுத்தினல் அது தேசியம் என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியும் என்பதில் ஐயமில்லை. தேச பாஷையே பிரதானம் என்பது தேசியக் கல்வியின் ஆதாரக் கொள்கை. இதை மறந்து விடக் கூடாது தேச பாஷையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தொடங்கப் படுகின்ற இந்த முயற்சிக்கு நாம் தமிழ் நாட்டிலிருந்து பூரண சகாயத்தை எதிர்பார்க்க வேண்டுமானுல் இந்த முயற்சிக்குத் தமிழ்ப் பாஷையே முதற்கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதைத் தம் பட்டம் அறிவிக்கவேண்டும்'' (அழுத்தம் நூலாசிரியருடையது). (19:255-256)

இங்கு பாரதி தேசபாஷை எனக் குறிப்பிடுவது சுதேசிய மொழிகளையே என்பது தெளிவு. தமிழ் மொழியே தமிழ் நாட்டில் கல்வி மொழியாக இருக்கவேண்டும் என்பதையும் தமிழை விருத்தி செய்வதற்கு அது அவசியம் என்பதையும் இங்கு பாரதி அழுத்திக் கூறியுள்ளான். குறிப்பாக சகல விஞ்ஞான பாடங்களும் தமிழ் மொழியிலேயே கற்பிக்கப்பட வேண்டும் என்பதற்குப் பாரதி முக்கிய அழுத்தம் கொடுக்கின்ருன். இதுபற்றிப் பல இடங்களிலே (16:256,257,309;22:83;29:218,312) பாரதி குறிப்பிட்டுள்ளான் ''பூலோக சாஸ்திரம், உலக சாஸ்திரம், ரஸாயனம், வானசாஸ்திரம், கணிதம் என்பனவற்றை சுதேச பாஷைகளிலேயே கற்றறிந்து கொள்வதற் குரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்,'' என்பது பார

தியின் கருத்தாகும் (29:218). சுதேச மொழிகள் விஞ்ஞானம் கற்பிப்பதற்குத் தகுதியற்றவை என்போரின் கொள்கையை பாரதி தீவிரமாக நிராகரிக்கிறன். பச்சையப்பன் கல்லூரி அதிபர் திரு. ரோலோ என்பவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற தக்கணத்து மொழிகள் விஞ்ஞானம் கற்பிப்பதற்குத் தகுதியற்றவை என்று கூறியபோது ''அவருக்கு இவ்விடத்துப் பாஷைகள் தெரியாது. சங்கதி தெரியாமல் விரிக்கிறார்'' என்று பாரதி அவரைக் கண்டித்ததோடு ''சாஸ்திர பரிபாஷை நமது பாஷைகளிலே மிகவும் எளிதாகச் செய்து விடலாம்'' என்றும் கூறுகிறன். இதற்கும் ஒரு படி மேலே சென்று, ''இயற்கை நடையிலே இங்கிலீஷைக் காட்டிலும் தமிழ் அதிகம் நேர்மை உடையது'' என்றும் ''ஆதலால் சாஸ்திர ப்ரவசனத்துக்கு அதிக சீருடையது'' என்றும் ''இந்தச் சங்கதி நம்மவர்களிலே கூட சில இங்கிலீஷ் பண்டிதருக்குத் தெரியாது'' என்றும் பாரதி கூறுகிறன் (16:309).

இங்கு இயற்கை நடை என்றும், நேர்மை என்றும் பாரதி எதைக் கருதுகிறன் என்பது தெளிவில்லை. இத்தகைய தொடர்களை மொழியியல் ரீதியில் நம்மால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. தமிழில் விஞ்ஞானம் கற்பிக்க இயலும் என்பதை வலியுறுத்துவதற்காகவே, ஆங்கிலத்தின் ஆற்றலை இங்கு பாரதி குறைத்து மதிப்பிடுகிறன் என்று தோன்றுகின்றது. அவ்வாறு இல்லாமலே தமிழின் வலிமையை நிறுவ முடியும். இது எவ்வாருயினும், தேசிய மொழிகளே போதன மொழிகளாக இருக்க வேண்டுமென்றும் சகல அறிவியல் துறைகளும் தேசிய மொழிகளிலேயே கற்பிக்கப்பட வேண்டும் என்றும் தேசிய மொழிகளின் வளர்ச்சிக்கு இவை அவசியம் என்றும் பாரதி கருதினன் என்பதே இங்கு முக்கியமானது. இந்த நூற்ருண்டின் தொடக்கத்திலே இந்தியா முழுவதிலும் தேசப் பற்றுடைய சிந்தனையாளர் இத்தகைய கருத்துக்களையே கொண்டிருந்தனர். இந்திய தேசிய எழுச்சியின், இந்திய விடுதலைப் போராட்டத்தின் வெளிப்பாடுகளுள் இதுவும் ஒன்ருகும். தமிழ் நாட்டிலே பாரதி இதைச் சிறப்பாகப் பிரதிபலித்தான் என்பது குறிப்பிடத் தக்கது.

4.5 மொழி பெயர்ப்பும் மொழி வளர்ச்சியும்

தமிழ் மொழியைக் கல்வி மொழியாக்கும்போது கல்வித்துறை சார்ந்த விஞ்ஞான, கலைத்துறை விஷயங்களையெல்லாம் தமிழுக்குக் கொண்டு வருவது அவசியமாகும். இதன் மூலம் தமிழின் சொல்வளம் பெருகிச் செல்லும் என்பது ஒரு இயல்பான வளர்ச்சி நியதியாகும். சகல அறிவுத் துறைகளையும் தமிழ் மொழியில் கொண்டு வருவதிலே கடைப்பிடிக்கத் தக்க இரண்டு நடைமுறைகளைப் பாரதி வலியுறுத்திக் கூறியுள்ளான். ஒன்று

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியில் பெயர்த்தல்'; மற்றது 'இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல்'. இவ்விரு வழிமுறைகளாலும் உலகெங்கும் உள்ள கலைச்செல்வங்கள் யாவும் தமிழ் மொழியில் கொண்டு வரப்பட வேண்டும் என்று பாரதி ஆசைப்பட்டான்.

சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

என்று தமிழ்த் தாயே ஆணையிடுவதாகப் பாரதி பாடியிருப்பது யாவரும் அறிந்ததே.

அறிவியல் விஷயங்களைத் தமிழிலே கொண்டு வருவதில் மொழி பெயர்ப்புக்குப் பாரதி முக்கிய இடம் கொடுத்திருக்கிறான். இதுபற்றிய பாரதியின் கருத்துப் பின்வருமாறு:

''பஞ்ச பூதங்களின் இயற்கையைப் பற்றிய ஆராய்ச்சிகளிலே நம்மைக் காட்டிலும் ஐரோப்பியர் முன்னேறி நிற்பது தெரிந்த விஷயம். ஆதலால் ஐரோப்பாவில் வழங்கும் லௌகீக சாஸ்திரங்களைத் தமிழில் எழுத வேண்டுமென்று பல பண்டிதர் மிகவும் ஆவலோடிருக்கிறார்கள். ஏற்கனவே, சில பகுதிகளின் ஆரம்பம் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறது. இந்த முயற்சி மேலும் வளரும்; வளர்ந்து தீரவேண்டும்'' (16:154).

மொழி பெயர்ப்பின் அவசியத்தை வலியுறுத்திய அதே வேளை, மொழி பெயர்ப்பு எத்தகைய மொழி நடையில் அமைய வேண்டும் என்பது பற்றியும் பாரதியிடம் தெளிவான கருத்து இருந்தது. மொழி பெயர்ப்பு நடை தமிழ் நடையாகவே இருக்க வேண்டும்; அதாவது தமிழ் அமைப்புக்கு ஒத்ததாக இருக்க வேண்டும் என்பது பாரதியின் கருத்தாகும். தமிழ் நாட்டின் விழிப்பு—பத்திரிகைகளின் நிலைமை என்ற கட்டுரையிலே இது பற்றிய பாரதியின் கருத்துக்கள் தெளிவாகக் காணப்படுகின்றன. ஐரோப்பிய மொழிகளிலே, மொழி பெயர்க்கப்படும் போது ''ஸ்வபாஷையின் வழக்கங்களையும் பிரயோகங்களையும் கைவிட்டு அன்னிய பாஷையின் வசன நடையைப் பின்பற்றும் வழக்கம் கிடையாது'' என்றும் ''ஆனால் தமிழ் நாட்டிலோ, முழுதும் தமிழ் நடையை விட்டு இங்கிலீஷ் நடையில் தமிழை எழுதும் விநோதமான பழக்கம் நமது பத்திராதிபர்களிடம் காணப்படுகின்றது'' என்றும் பாரதி குற்றம் சாட்டுகின்றான் (16:153-154). இதிலிருந்து மொழி பெயர்ப்பாளரிடம் பாரதி எத்தகைய மொழி நடையை எதிர்பார்க்கின்றான் என்பது தெளிவு.

ஆயினும் பாரதியின் மொழி பெயர்ப்புக்களிலும் சுய ஆக்கங்களிலும் ஆங்கில மொழியின் செல்வாக்கு முற்றிலும் இல்லை என்று திடமாகக் கூற முடியாது.[19] பிறமொழிச் செல்வாக்கு மொழி வளர்ச்சியிலே முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியது என்று நாம் கூறவும் முடியாது. பாரதியின் கருத்தும் அதுவன்று. 'தமிழ் நடையை விட்டு இங்கிலீஷ் நடையில் தமிழை எழுதும் விநோதமான பழக்கம்' என்று பாரதி கூறுவது சாதாரண மனிதனுக்கு விளங்காத, முற்றிலும் அன்னிய நடையில் எழுதுவதையே என்றுதான் நாம் கருதவேண்டி யுள்ளது. மூல மொழி தெரியாதவனுக் காகத்தான் மொழி பெயர்ப்பு. ஆகவே அது அவனுக்குத் தெளிவாக விளங்க வேண்டும். அதனால் தான் ''நீ எழுதுவதை இங்கிலீஷ் தெரியாதவனுக்கு முதலில் படித்துக் காட்டு; அவனுக்கு அர்த்தமானால் தொடர்ந்து எழுது'' என்கிறான் பாரதி (16:154). இது நியாயமான கோரிக்கையேயாகும். இன்று கூடப் பல மொழி பெயர்ப்பு நூல்களைப் படித்துப் புரிந்து கொள்வதைவிட, அவற்றின் மூல நூல்களைப் படித்துப் புரிந்து கொள்வது இலகுவாக உள்ளது. அவ்வகையில் மொழி பெயர்ப்பாளருக்குப் பாரதியின் ஆலோசனை இன்று கூடப் பயன்படக் கூடியதே எனலாம்.

4.6 சொற்றொகுதி வளர்ச்சியும் கலைச்சொல் லாக்கமும்

மொழி பெயர்ப்பிலே இரண்டு பிரதான பிரச்சினைகள் உள்ளன. ஒன்று கலைச்சொல் லாக்கம்; மற்றது பிறமொழிப் பெயர்களைத் தமிழில் எழுதுவதில் உள்ள சிக்கல். முதலாவது சொற்றொகுதி வளர்ச்சி பற்றிய பிரச்சினை. இரண்டாவது ஒலியமைப்பைப் பேணுவது சம்பந்தமான பிரச்சினை. இவை இரண்டும் மொழி வளர்ச்சியோடு சம்பந்தப்பட்ட முக்கிய பிரச்சினைகளாகும். இவ்விரு அம்சங்கள் பற்றியும் பாரதியிடம் திடமான சில கருத்துக்கள் இருந்தன.

கலைச்சொல் லாக்கம் பற்றிய பிரச்சினை மொழி பெயர்ப்போடு மட்டும் சம்பந்தமுடைய தல்ல. நவீன அறிவுத் துறைகள் பற்றித் தமிழிலே சுயமாக எழுதுவதில் கூட இது ஒரு முக்கிய பிரச்சினையாகும். பாரதி இப்பிரச்சினையை எவ்வாறு எதிர் நோக்கினான்? அதற்கு அவன் கண்ட தீர்வு யாது? என்பனவற்றை அறிவது பயனுடையது.

கலைச்சொல் லாக்கத்தின் அவசியத்தைப் பாரதி நன்கு உணர்ந்திருந்தான். பாரதி காலத்திலே இதுபற்றிய பிரக்ஞை தமிழ் நாட்டில் வேறு பல அறிஞர் மத்தியிலும் ஏற்பட்டிருந்தது. ராஜாஜி, வேங்கட சுப்பையர் ஆகியோர் கலைச் சொல்லாக்கம் தொடர்பாக ஒரு மாதப் பத்திரிகை கூட நடத்தி இருக்கிறார்கள். கலைச் சொல்லாக்கத்தின் அவசியம் பற்றியும், அவர்களது

பத்திரிகை முயற்சி பற்றியும் தமிழில் சாஸ்த்ர பரிபாஷை என்ற சிறு கட்டுரையில் பாரதி குறிப்பிட்டுள்ளான். விஞ்ஞான அல்லது அறிவியல் கலைச் சொல்லையே இங்கு பாரதி சாஸ்த்ர பரிபாஷை என்று குறிப்பிடுகின்றான். "ஒரு கூட்டத்தார் அல்லது ஒரு சாஸ்திரக்காரர் விசேஷார்த்தம் தோன்றும்படி உடன் பட்டு வழங்கும் பொது வழக்கமில்லாத" சொல்லே கலைச் சொல் எனப் பாரதி வரைவிலக்கணமும் கொடுத்துள்ளான் (16:154). "கூடியவரை சாஸ்த்ர பரிபாஷையை நிச்சயப் படுத்தி வைத்தால் பிறகு மொழி பெயர்ப்புத் தொடங்குவோர்க்கு அதிக சிரமமிராது" என்றும் "பண்டிதர்கள் செய்து வைக்க வேண்டிய அடிப்படைக் காரியம் இது" என்றும் பாரதி கூறியுள்ளான் (16:154).

பொதுவாக ஒரு மொழியிலே புதிய சொற்கள் இரண்டு வழிகளில் உருவாக்கப் படுகின்றன என மொழியியலாளர் கூறுவர். ஒன்று உள்நிலையாக்கம் (internal creation) எனப்படும். அதாவது ஒரு மொழியில் உள்ள சொந்தக் கூறுகளைக் கொண்டு புதிய சொற்களை ஆக்குதல். மற்றது கடன் வாங்கல் (borrowing) எனப்படும் (48:353). உதாரணமாக வானொலி, மின்விசிறி என்பன உள்நிலையாக்கத்தினால் உருவாகிய சொற்களாகும். வான், ஒலி; மின், விசிறி ஆகிய கூறுகளின் இணைப்பினால் இவை உருவாக்கப் பட்டுள்ளன. றேடியோ, ஃபேன் என்பன கடன் வாங்கிய சொற்களாகும். ஏனைய மொழிகளைப் போல இவ்விரு வழிகள் மூலமே தமிழிலும் புதிய புதிய சொற்கள் வந்து சேர்ந்து சொற்தொகுதி வளர்ச்சி அடைகின்றது.

தமிழில் கலைச் சொல்லாக்கம் எவ்வாறு நிகழ வேண்டும் என்பது பற்றிய பாரதியின் கொள்கை பின்வருமாறு.

> "இயன்ற இடத்தி லெல்லாம் பதார்த்தங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே உபயோகிக்க வேண்டும். திருஷ்டாந்தமாக ஆக்சிஜன், ஹைட்றஜன் முதலிய பதார்த்தங்களுக்கு ஏற்கனவே தமிழ் நாட்டில் வழங்கப்பட்டிருக்கும் பிராணவாயு, ஜலவாயு என்ற நாமங்களையே வழங்க வேண்டும். தமிழ்ச் சொற்கள் அகப்படா விட்டால் சம்ஸ்கிருத பதங்களையே வழங்கலாம். பதார்த்தங்களுக்கு மட்டுமே யன்றி, கிரியைகளுக்கும், அவஸ்தைகளுக்கும் (நிலைமைகளுக்கும்) தமிழ், சம்ஸ்கிருத மொழிகளையே வழங்குதல் பொருந்தும். இந்த இரண்டு பாஷைகளிலும் பெயர்கள் அகப்படாத விடத்தில் இங்கிலீஷ் பதங்களையே உபயோகப் படுத்தலாம். ஆனால், குணங்கள். செயல்கள், நிலைமைகள் இவற்றுக்கு இங்கிலீஷ் பதங்களை ஒரு போதும் வழங்கக் கூடாது. பதார்த்தங்களின் பெயர்களை மாத்திரமே இங்கிலீஷில் சொல்லலாம், வேறு வகையில் உணர்த்த இயலாவிடில்" (16:263).

இம் மேற்கோளின் படி கலைச்சொல் லாக்கத்தில் பாரதி தமிழுக்கே முதலிடம் கொடுப்பதைக் காண்கின்றோம். அதாவது உள்நிலை யாக்கத்துக்கே அவன் முக்கியத்துவம் கொடுக்கிறான். இவ்வகையில் பாரதி உருவாக்கி வழங்கிய விடுதலை, பொதுவுடமை போன்ற புதுச் சொற்கள் இன்றையத் தமிழில் பெருவழக்கா யுள்ளன.

கலைச் சொல்லாக்கத்தில்,தமிழுக்கு அடுத்த இடத்தை வட மொழிக்கு வழங்குகின்றான் பாரதி. அதிலும் தமிழில் சரியான சொற்கள் அகப்படா விட்டால் தான் சமஸ்கிருதச் சொற்களை வழங்கலாம் என்கிறான். ஆயினும் பாரதியே இக் கோட்பாட்டைச் சரியாகக் கடைப்பிடிக்க வில்லை எனலாம். தனது எழுத்துக்களிலே சாதாரண சொற்களைப் பொறுத்தவரை கூட, உரிய தமிழ்ச் சொற்கள் இருந்தும் வட சொற்களைக் கையாண் டிருப்பதை நாம் காணலாம். சில வேளை பாரதியின் சொந்தக் கிளைமொழியின் செல்வாக்கே இதற்குக் காரணமாகலாம். இந்தியத் தமிழை இரு பிரதான சமூகக் கிளைமொழிகளாக (social dialects) வேறுபடுத்துவர். ஒன்று பிராமணத் தமிழ் மற்றது பிராமணர் அல்லார் தமிழ். பிராமணத் தமிழில் வட மொழிச் செல்வாக்கு மிகவும் அதிகமாகும். பாரதி பிராமணர் தமிழையே பேசினான். அவனது எழுத்திலும் அதன் செல்வாக்கு இருப்பது இயல்பானதே. மேற்காட்டிய மேற்கோளிலே கூட பல சமஸ்கிருதச் சொற்கள் பயின்று வந்திருப்பதை அவதானிக்கலாம். இம் மேற்கோளிலிருந்து பிராண வாயு, ஜலவாயு ஆகிய சொற்களைப் பாரதி தமிழ்ச் சொற்கள் என்றே கருதியதாகத் தோன்றுகின்றது. அவை கூட வட சொற்கள் என்பது நமது கவனத்துக் குரியது.

கலைச் சொல்லாக்கத்தில் ஆங்கிலத்துக்கு மிகவும் வரையறுக்கப் பட்ட இடமே பாரதியினால் வழங்கப்படுகின்றது. பொருட்களைச் சுட்டுவதற்கு மட்டுமே ஆங்கிலச் சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும் எனப் பாரதி கருதுகிறான். ஆங்கிலத்தைப் பாரதி இவ்வாறு மூன்றும் நிலைக்கு ஒதுக்கியதற்கு பிரித்தானிய ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வே காரணமாகலாம். ஆயினும் பாரதியின் எழுத்துக்களிலே ஆங்கிலச் சொற்கள் சில கையாளப்பட் டிருப்பதையும் நாங்கள் காணலாம். எனினும் இச் சொற்களை மிகுந்த பிரக்ஞையுடன், தமிழில் பொருத்தமான சொற்கள் அகப்படாத பட்சத்திலேயே பாரதி கையாண்டுள்ளதாகத் தெரிகிறது. உதாரணமாக மெம்பர் என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் தனக்கு அகப்படாதது ஆச்சரியத்திலும் ஆச்சரியம் என்று பாரதி கூறியுள்ளான். அவயவி, அங்கத்தான், சபிகன், உறுப்பாளி ஆகிய ஒன்றுமே மனத்துக்குப் பொருந்த வில்லை என்றும் அதனால் கடைசியில் 'மெம்பர்' என்றே எழுதிவிட்டதாகவும் பாரதி கூறுகின்றான் (16: 228).

தற்காலத்திலே தமிழில் கலைச்சொல் லாக்கம் பற்றிய மூன்று வேறு பட்ட கொள்கையினரை செ. வை. சண்முகம் இனங்காண்கின்றார். முதல் வகையினர் உள்நிலை யாக்கத்தின் மூலம் மட்டுமே கலைச் சொற்கள் ஆக்கப்பட வேண்டும் என்ற கொள்கையினர். பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கு வதை இவர்கள் தீவிரமாக எதிர்ப்பர். இரண்டாம் வகையினர் கலைச் சொல் லாக்கத்திற்கு உள்நிலை யாக்கத்தையும் கடன் வாங்கலையும் ஏற்றுக் கொள்பவர்கள். இவர்களுள்ளும் கடன் வாங்கலை ஒரு இடைக்கால ஏற்பா டாக மட்டும் ஏற்றுக் கொள்ளலாம் என்று கருதுபவர்களும், எப்பொழு தும் ஏற்றுக் கொள்ளலாம் என்று கருதுபவர்களும் உளர். மூன்றாம் பிரிவி னர் சர்வதேசக் கலைச் சொற்களை அப்படியே கடன் வாங்கலாம் என்ற கருத்துடையவர்கள். இவர்கள் உள்நிலை யாக்கத்தை ஏற்றுக்கொள்வதில்லை (11:161). இவர்களுள் இரண்டாம் பிரிவினர் வெவ்வேறு அளவில் பாரதி வழி நிற்பவர்கள் எனலாம். கலைச்சொல் லாக்கத்துக்கு உள்நிலை யாக்கத் தோடு கடன் வாங்கலும் அவசியம் என்பது பாரதியின் கருத்தாகும்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே கலைச் சொல்லாக்கத்தின் அவசியம் பற்றி அழுத்திக் கூறியது மட்டுமன்றி தேசம் முழுவதும் கலைச் சொல்லாக்கத்தில் ஒருமைப்பாடு நிலவ வேண்டியதன் அவசியம் பற்றியும் பாரதி ஆழமாகச் சிந்தித்திருக்கின்றான். கலைச் சொற்களில் தேசம் முழுவ திலும் ஒருமைப் பாட்டைப் பேணுவதற்குச் சமஸ்கிருதத்தைப் பொது மொழியாகக் கொள்ளலாம் என்ற ஒரு கருத்தும் பாரதியிடம் இருந்தது. இதுபற்றிப் பரிபாஷை சேகரிக்க ஒருபாயம் என்ற தலைப்பில் பாரதி எழுதி யுள்ள ஒரு குறிப்பிலே ஐரோப்பிய கலைச் சொற்களையெல்லாம் சமஸ்கிரு தத்தில் பெயர்த்து ஒரு பெரிய அகராதி தயாரிக்கும் முயற்சி காசியிலே நடைபெற்று வருவதாகவும், அச் சொற்களைத் தேசிய மொழிகள் எல்லா வற்றிலும் ஏககாலத்தில் கையாளலாம் என்றும், இவ்வாறு செய்வதன் மூலம் தேசிய மொழிகளில் கலைச் சொல் ஒருமைப்பாடு ஏற்படும் என்றும் தேசம் எங்கும் விஞ்ஞானம் எளிதில் வளர்ச்சியடையும் என்றும் பாரதி கருத்துத் தெரிவித்துள்ளான். ஐரோப்பிய மொழிகள் இவ்வாறு லத்தீன், கிரேக்க மொழிச் சொற்களைக் கையாள்வதையும் பாரதி சுட்டிக்காட்டு கின்றான் (16:155).

அறிவியல் வளர்ச்சிக்குக் கலைச் சொற்களில் ஒருமைப்பாடு நிலவ வேண்டுவதன் அவசியம்பற்றி இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பாரதி நன்கு உணர்ந்திருந்தான் என்பதை இதன்மூலம் அறிய முடிகின் றது. ஆயினும் கலைச் சொல்லாக்கத்தில், இயன்ற இடத்திலெல்லாம் பதார்த்தங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே உபயோகிக்க வேண்டும் என்ற பாரதியின் கொள்கையுடன், சமஸ்கிருதக் கலைச் சொற்களைத் தேசிய மொழி

கள் எல்லாவற்றிலும் ஏககாலத்தில் கையாளலாம் என்ற கொள்கை முரண் படுவதை நாம் அவதானிக்கலாம். தவிரவும், கலைச்சொற் பொதுமைக்குச் சமஸ்கிருதத்தைக் கையாளலாம் என்ற பாரதியின் கருத்துக்குத் தற்காலத் திலே ஆதரவு கிடைப்பதும் அரிதாகும். 'நவீன கருத்துக்களை வெளிப்ப டுத்த அவசியமான பெரும்பாலான தொழில்நுட்ப, விஞ்ஞான, பண்பாட் டுத்துறைக் கலைச் சொற்கள் இன்று தமிழில் உள்நிலை யாக்கத்தின் மூலமே உருவாக்கப் படுகின்றன' (48:360). பெறப்படும் கடன் சொற்கள் பெரி தும் ஆங்கிலத்தின் மூலமே பெறப்படுகின்றன. தற்காலத்திலே எமது மொழிகள் ஆங்கிலத்தின் மூலமே அறிவியல் ஊட்டம் பெறுகின்றன. ஆகவே ஆங்கிலத்திலிருந்து கலைச் சொற்களை அதிகம் கடன் வாங்குவது தவிர்க்க முடியாதது. அவ்வகையிலே வெவ்வேறு மொழிகளில் கலைச் சொற் பொதுமையை நிலைநாட்டுவதற்கு இன்று ஆங்கிலமே உகந்த மொழி யாகத் தோன்றுகின்றது. இவ்வகையில் பாரதியின் வடமொழிப் பற்றை ஆங்கிலத்தின் அறிவியல் முக்கியத்துவம் புறங்கண்டு விட்டதெனலாம். பாரதியின் கருத்துக்கு மாறாக இன்று சமஸ்கிருதத்தின் இடத்தை தவிர்க்க முடியாமல் ஆங்கிலமே பிடித்துக்கொண்டது.

4.7 எழுத்துக் குறையும் புதுக் குறியீடுகளும்

பிற மொழிப் பெயர்களையும் சொற்களையும் கடன் வாங்கும் போது அவற்றைத் தமிழில் எவ்வாறு எழுதுவது என்பது பற்றிய கருத்து வேறு பாடுகள் தமிழறிஞர் மத்தியிலே இன்று கூட நிலவுகின்றன. 1915ம் ஆண்டு ஞானபானு என்னும் பத்திரிகையில் தமிழில் எழுத்துக் குறை என் னும் தலைப்பில் எழுதிய கட்டுரையிலே இது பற்றிப் பாரதி தெரிவித்துள்ள கருத்துக்கள் முக்கியமான கவனத்துக் குரியன. அவற்றைப் பின்வருமாறு நாம் சுருக்கிக் கூறலாம். (முழு விபரத்துக்குப் பின்னிணைப்பைப் பாக்கவும்)

1. பிற மொழிப் பெயர்களை நாம் அந்த அந்த மொழியில் உச்சரிக் கப்படுவதுபோல் ஒலிச் சிதைவின்றி உச்சரிக்கவும், எழுதவும் வேண்டும்.

2. அவ்வாறு எழுதுவதற்குத் தற்போது வழக்கில் உள்ள எழுத்துக் கள் போதா.

3. இந்தக் குறையைப் போக்குவதற்குப் பிற மொழி எழுத்துக்களைக் கடன் வாங்குவதை விட, தமிழ் எழுத்துக்களுடன் சில புதிய குறியீடுகளைச் சேர்த்துக் கொள்வது எளிதானது. இம் முறையே பிற மொழிகளிலும் கடைப்பிடிக்கப் படுகின்றது.

தமிழின் இந்த எழுத்துக் குறையை நீக்கும் பொருட்டு, மிகவும் சுலபமாக ஐந்து நிமிஷங்களில் யாரும் கற்றுக் கொள்ளக் கூடிய சில குறியீடுகளைத் தான் தயார் செய்து வைத்திருப்ப தாகவும், அதை எல்லோரும் அறியக் கூடிய முறையில் துண்டுப் பிரசுரமாக வெளியிடத் தனக்கு இப்போது சௌகரியம் இல்லை என்றும் அதை அறிந்து கொள்ள விரும்புவோர் தபால் மூலம் தொடர்பு கொண்டால் அதை நல்ல கை எழுத்தில் எழுது வித்து அனுப்புவதாகவும் அக்கட்டுரையின் இறுதியிலே பாரதி குறிப்பிட்டுள்ளான் (23:66-68).

பாரதி குறிப்பிட்டுள்ள இப் புதுக் குறியீடுகள் பின்னர் எங்கும் வெளிவந்த தாகத் தெரியவில்லை. தன் எழுத்துக்களில் பாரதி அவற்றைக் கையாண்ட தாகவும் தெரியவில்லை. ''அவரது குறிப்புமுறை எங்கும் வெளியிடப்படாததால் நமக்குக் கிடைக்காமல் போய்விட்டது நமது துரதிர்ஷ்டமாகும்'' என ரா அ. பத்மநாபன் குறிப்பிடுகின்றார் (23:66). அது உண்மையே. எழுத்துச் சீர்திருத்த ஆர்வலர்களுக்கும் மொழி வளர்ச்சி பற்றி ஆராய்பவர்களுக்கும் அது ஒரு இழப்பு என்பதில் ஐயமில்லை. எனினும் பாரதியின் மேற்காட்டிய கட்டுரைக் கருத்துக்களுக்குப் பாரதி காலத்திலேயே பலமான எதிர்ப்பு இருந்ததாகத் தெரிகிறது. பாரதியின் மிக நெருங்கிய நண்பரும், சுதந்திரப் போராட்ட வீரரும், தமிழபிமானியுமான வ. உ. சிதம்பரம்பிள்ளை (வ. உ. சி.) ஞானபானுவிலேயே தனது எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார். அதன் முக்கிய பகுதிகளை ம பொ. சிவஞானம் (ம. பொ. சி.) தனது விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு என்னும் நூலிலே தந்துள்ளார். அதில் இடம் பெறும் வ. உ. சி. யின் கருத்துப் பின்வருமாறு.

> ''சென்ற சில வருஷங்களாகச் சில அறிவாளிகள் நம் தமிழ்ப் பாஷையில் சில எழுத்துக்கள் குறைவா யிருக்கின்றன வென்றும் அக்குறைவை நிவர்த்திக்கத் தக்க பிறபாஷை எழுத்துக்களேனும் பிற சில குறிகளேனும் நம் தமிழ்ப் பாஷை எழுத்துக்களோடு சேர்க்கப்பட வேண்டு மென்றும் கூறுகின்றார்கள்.
>
> நமது நண்பர் ஸ்ரீ. சி. சுப்பிரமணிய பாரதியவர்கள் சென்ற ஆடி மாதத்தில் வெளிவந்த தமது 'ஞானபானு' விலே, 'தமிழில் எழுத்துக்குறை' என்னும் தலைப்பெயரோடு ஒரு நிருபம் வரைந்துள்ளார்கள். அந்நிருபத்தில் மேற்கண்ட சேர்க்கையைச் செய்ய வேண்டுமென்பதற்காகக் கூறப்பட்டுள்ள காரணம் ஒன்றே. அஃதாவது பிறபாஷைகளின் மனிதப் பெயர், நகரப் பெயர் முதலியவற்றிற் சிலவற்றை அப்பாஷையாளர் உச்சரிக்கும் சப்தத்தில் நாம் உச்சரிக்குமாறு செய்யத்தக்க சில எழுத்துக்கள் நமது தமிழ்ப் பாஷையில் இல்லை என்பதே.

தெய்வ பாஷை என்றும், பூரண பாஷையென்றும் பல பாஷைகளுக்கும் தாய்ப் பாஷையென்றும் சொல்லப்படுகிற சமஸ்கிருத பாஷை எழுத்துக்களோடு ழ, ற, ன, f, z என்னும் எழுத்துக்களையாவது அவற்றின் ஒலிகளைக் குறிக்கும் குறிகளையாவது சேர்ப்பதற்கு நண்பரவர்களும் அரவிந்தரவர்களும் முயற்சி செய்து வெற்றி பெறுவார்களாயின் அவர்கள் நமது தமிழ் மக்களுக்கு ஒப்பற்ற வழிகாட்டிகளாவார்கள். பின்னர் நமது தமிழ் மக்கள் அவர்களைப் பின்பற்றத் துணிவார்கள்.

இதுகாறும் தமிழ்ப் பாஷை எழுத்துக்களில் குறையுளது என்று கூறியவர்களில் ஒருவரும் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பூரணமாகக் கற்றுணர்ந்தவராக வாவது, சமஸ்கிருத சம்பந்தமில்லாதவராக வாவது சமஸ்கிருத பாஷையில் மேற்சொல்லிய திருத்தங்களையோ, வேறு திருத்தங்களையோ செய்ய வேண்டுமென்று கூறிய வராகவாவது காணப் படவில்லை யென்றும் அவர்கள் நம் தமிழ்ப் பாஷையைத் திருத்த முயல்கிறார்களோ வருத்த முயல்கிறார்களோ என்றும் நம் தமிழ் மக்களிற் சிலர் ஐயமுறுகின்றனர்'' (13:107-108).

மேற்காட்டிய கண்டனத்திலே பாரதி தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பூரணமாகக் கற்று உணராதவன் என்றும், சமஸ்கிருத சம்பந்த முள்ளவன் என்றும் வ. உ. சி. மறைமுகமாகக் குற்றஞ் சாட்டுவதைக் காணலாம்.

பாரதி சமஸ்கிருத பற்றுள்ளவன் என்பதில் ஐயத்துக்கு இடமில்லை. எனினும் அதற்குச் சமமான, சில வேளை அதற்கு மேலான தமிழ்ப் பற்றுளன் என்பதிலும் ஐயமில்லை. பரலி சு. நெல்லையப்ப பிள்ளைக்கு எழுதிய கடிதம் ஒன்றிலே, ''தமிழை விட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்த முண்டாகுகிறது'' எனப் பாரதி எழுதியதையும் நாம் அறிகிறோம் (13:121). தமிழ் இலக்கண, இலக்கியங்களைப் பாரதி பூரணமாகக் கற்றுணராதவன் எனினும் அவற்றைத் துறைபோகக் கற்ற தன்காலத் தமிழறிஞர் அனைவரையும் விட தமிழை நவீனப்படுத்தி, அதற்குப் புதிய உயிரும் உருவமும் கொடுத்ததிலே பாரதிக்கே பெரும்பங்கு உண்டு என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடம் இல்லை. அவ்வகையில் வ. உ. சி. பாரதிக்கு அண்மையிலும் நிற்கக் கூடியவரல்ல. அது எவ்வாறாயினும் இங்கு முக்கியமாகக் கருத வேண்டியது வ. உ. சி. பாரதிபோல் மொழியை ஒரு மாறும் சாதனமாகக் கருதவில்லை என்பதுதான். அவரது கூற்றுக்கள் அதையே உணர்த்துகின்றன. தமிழுக்கு எழுத்துத் திருத்தம் வேண்டும் என்று பாரதி கூறும்போது, முதலில் சமஸ்

கிருதத்திலே அதை அவர் செய்து விட்டு பிறகு தமிழுக்கு வரட்டும் என்று அவர் கூறுவது இதனால்தான். சமஸ்கிருதம் ஒரு இறந்த மொழி; தமிழ் ஒரு வாழும் மொழி. இறந்த மொழிக்கு மாற்றமும் இல்லை; வளர்ச்சியும் இல்லை. வாழும் மொழியே மாறும்; வளரும். அவ்வகையில் சமஸ்கிருதத்தில் எழுத்துச் சீர்திருத்தம் அவசியமில்லை; தமிழுக்கே அவசியமாகும் என்பதை வ. உ. சி. புரிந்து கொள்ளவில்லை.

வ. உ. சி யின் கருத்துக்குப் பதில் சொல்வது போல் பாரதி ஞான பானு 1915 அக்டோபர் 15 இதழில் இது பற்றி ஒரு சுருக்கமான குறிப்பு எழுதினன். மொழி வளர்ச்சியை வரலாற்று ரீதியாக அணுகும் பாரதியின் மொழி நோக்கு அதிலே தெளிவாக வெளிப்படுகின்றது. தொல்காப்பியர் காலத்து எழுத்துக்கள் போதாவண்ணம் தமிழ் மொழி வளர்ச்சியுற்றபோது ஜ,ஷ,ஸ,ஹ, க்ஷ ஆகியஎழுத்துக்களை முன்னோர்கள் தமிழில் சேர்த்துக் கொண்டார்கள் என்றும் இவற்றைச் சேர்க்கா விட்டால் தமிழ் நேரே பேச முடியாமலும் எழுத முடியாமலும் போய்விடும் என்று அவர்களுக்கு அச்சமுண்டாயிற்று என்றும் அவ்வாறே நாமும் இக்காலத்தில் ஏற்படும் உச்சரிப்புக் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்குப் புதிய எழுத்துக்களைப் புகுத்துவதற்குப் பதிலாகப் புதுக் குறியீடுகளைச் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் அக் குறிப்பில் பாரதி தெரிவித்துள்ளான். பிரஞ்சு, இங்கிலீஷ் முதலிய ஐரோப்பிய மொழிகளிலும் ஹிந்தி போன்ற இந்திய மொழிகளிலும் ''உயிருள்ள பாஷைகளிலே வளர்வன வெல்லாவற்றிலும்'' இத்தகைய புதுக் குறியீடுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன என்றும் ''இந்த எளிய வழியை அனுசரித்து நமது தமிழ் மொழி விசாலமடைய வேண்டு மென்பதே என்னுடைய விருப்பம்'' என்றும் பாரதி அக்குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளான் (23:68–69). (முழு விபரத்துக்குப் பின்னிணைப்பைப் பார்க்கவும்)

''வெளிநாட்டு ஊர்களின் பெயர்களையும் மனிதர்களின் பெயர்களையும் நாம் சரியானபடி சொல்லவேண்டுமா? வேண்டாமா?'' என்று பாரதி 'தமிழில் எழுத்துக்குறை என்ற அதே கட்டுரையில் கேள்வி எழுப்புகிறன். இவ்வினா முக்கிய கவனத்துக்குரியது. இது தொடர்பாக இரண்டு எதிர் நிலைப்பட்ட விடைகள் உள்ளன. ஒன்று, பிறமொழிச் சொற்களை ஒலிச் சிதைவின்றி எழுதவேண்டும் என்பதும் அதன் பொருட்டுப் புதிய எழுத்துக்களை அல்லது குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதுமாகும். இதுவரை நோக்கியதில் இருந்து பாரதியே இக்கருத்தின் முன்னோடி என்பது பெறப்படும். பாரதி வழிவந்த மறுமலர்ச்சியாளர்கள் சிலரும் குறிப்பாக டி. கே. சிதம்பரநாத முதலியார் போன்றவர்களும் தற்கால மொழியியலாளர் சிலரும் வெவ்வேறு அளவில் இக்கருத்தின் ஆதரவாளர்களாக உள்ளனர். மற்றது, பிறமொழிச் சொற்களை முற்றிலும் தமிழ் மயப்

படுத்தி, தமிழ் எழுத்துக்களைக் கொண்டே எழுதவேண்டும் என்பதாகும். மொழித் தூய்மை வாதிகளே இக்கருத்தைக் கொண்டுள்ளனர். இவர்கள் மொழியில் புதிய மாற்றங்களை அங்கீகரிப்பதில்லை.

பிறமொழிப் பெயர்களைத் தமிழ்மயப் படுத்தியே எழுத வேண்டுமென்போர் ''வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே'' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தையே பொதுக் கோட்பாட்டின் வேதமாகக் கொண்டுள்ளார்கள்'' என செ. வை. சண்முகம் கூறுகிறார் (11 : 162). பிற்காலத் தனித்தமிழ் வாதிகள் மட்டுமன்றி, புதுமை எழுத்தாளரான வ. வே. சு. ஐயர், சுவாமி விபுலானந்தர் ஆகியோரும் இத்தகைய நோக்கையே கொண்டிருந்தனர். பாரதியின் சகாவும், இந்த நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் வாழ்ந்த மறுமலர்ச்சி யாளர்களுள் ஒருவருமான வ. வே. சு. ஐயர், பிறமொழிப் பெயர்களைத் தமிழ்மயப் படுத்தி எழுதவேண்டும் என்ற கொள்கை யுடையவராகவே காணப்படுகிறார். ஐயர் தனது பாலபாரதி இதழிலே டிசம்பர் 1924ல் இதுபற்றி எழுதிய ஒரு விளக்கத்தில் அன்னியநாட்டுச் சிறப்புப் பெயர்களைத் தமிழுடன் பொருந்தும் படியும், அன்னியர் படித்த மாத்திரத்தில் அறிந்து கொள்ளும் படியும் அமைக்க வேண்டியது அவசியம் என்றும், அதன்படி வெகுநாட்களாக அத்தகைய பெயர்களை அவற்றின் பகுதியை மாற்றாமல் அவற்றுடன் தமிழ் விகுதியைச் சேர்த்து தான் எழுதி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார் (13 : 115-116). இதற்கிணங்க, ''மெக்டொனால்டு என்பதை மெக்தொனல்டு என்றும் அரஸ்டாட்டல் என்பதை அரிஸ்தோத்தலன் என்றும் பிளேட்டோ என்பதை பிளாத்தன் என்றும் டால்ஸ்டாய் என்பதை தோல்ஸ்தோயி என்றும்'' ஐயர் எழுதியுள்ளதை ம. பொ. சி. சுட்டிக் காட்டுகிறார் (13 ; 115).

ஐயர் கூறுவது போல பிறமொழிப் பெயர்களைத் தமிழ் மயப்படுத்தித் தமிழ் விகுதி சேர்த்து எழுதுவது அவசியம் இல்லை என்றே கூறவேண்டும். ஐயர் அதற்குக் காட்டும் காரணமும் பொருத்த மற்றதாகவே தோன்றுகின்றது. தமிழ்மயப் படுத்திய பிறமொழிப் பெயர்களை அன்னிய மொழியாளர் இலகுவில் புரிந்து கொள்வார்களா என்பது சந்தேகமே. சுவாமி விபுலானந்தரும் ஐயரைப் போன்றே பிற மொழிப் பெயர்களைத் தமிழ்மயப் படுத்தியுள்ளார். ஷேக்ஸ்பியரை அவர் செகப்பிரியர் என்றே எழுதியுள்ளார். இது தமிழின் ஒலியமைப்பை மாறாது பேண முயல்வதன் விளைவாகும். இவ்வாறு பேண விரும்பியவர்களுள் காலம் சென்ற இ. இரத்தினம் அவர்களும் குறிப்பிடத் தக்கவர். தோமஸ், சிமித் என்னும் பெயர்களை தோமசு, சிமது என்றே எழுத வேண்டும் என்பது அவரது கருத்தாகும். இவர் மொழி பெயர்த்த உலகப் பிரசித்தி பெற்ற கிரேக்க நாடகாசிரியர் சொபக்லீஸ்

(Sophoclese) எழுதிய மன்னன் ஈடிபசு என்னும் நாடகத்தில் வரும் பாத்திரங்களினதும் இடங்களினதும் பெயர்களை இவர் எவ்வாறு தமிழ் மயப் படுத்தி இருக்கிறார் என்பதற்குப் பின்வருவன சில உதாரணங்களாகும்.

அகனர், அதினு, அபயன், இசுமீன், இசுமென், இலபகசு, இய்லசு, இலிசுபன், ஈடிபசு, ஈசுமசு, உலெட்சியசு, ஒலிம்பசு, கதுமசு, சித்திரன் சிபிஞ்சு, தீபசு (5 : ix, x).

இத்தகைய போக்கு தமிழ் மொழியில் மட்டும் காணப்படும் ஒன்றல்ல. வேறுபல மொழிகளிலும் இப்பண்பினைக் காணலாம். உதாரணமாக அரபு மொழியிலே பிளேட்டோவின் பெயர் அப்லாதூன் என்று அரபு மயமாகியே வழங்குவதைச் சுட்டிக் காட்டலாம்.

இவ்வாறு ஒரு மொழியிலே பிறமொழி ஒலிகளையோ, அவற்றைக் குறிக்கும் புதிய எழுத்துக்களையோ புகவிடாது அதைப் பழைய வடிவிலேயே பேண முயல்வோரின் கொள்கையினை செம்மையாக்க வாதம் என செ. வை. சண்முகம் குறிப்பிடுகிறார் (11 : 96) செம்மையாக்க வாதிகள் தமிழ் எழுத்துக்களில் எந்தவித மாற்றத்தையும் ஏற்றுக் கொள்வதில்லை. தவிரவும் நெடுங்காலமாகத் தமிழில் வழக்கில் இருந்துவரும் கிரந்த எழுத்துக்களையும் இவர்கள் நிராகரித்து விடுகின்றனர். இதற்கு இவர்கள் கூறும் காரணம் புதிய எழுத்துக்களால் மொழி சிதைந்துவிடும் என்பதே. புதிய எழுத்துக்களைச் சேர்க்கத் தொடங்கினால் அதற்கு ஒரு முடிவே இராது என்றும் அவர்கள் கூறுவர் (6 : 76 ; 11 : 95). இவர்களது வாதங்களின் பலவீனத்தை எழுத்துச் சீர்திருத்த'ம் என்ற தனது நூலிலே செ. வை. சண்முகம் நன்கு விவாதித்துள்ளார் (11 : 96-111).

பாரதி செம்மையாக்க வாதத்தின் பலமான எதிரியாகவே காணப்படுகிறான். பிறமொழிச் சொற்களைத் தமிழ் மயப்படுத்தி எழுதுவதில் பாரதிக்குச் சற்றும் உடன்பாடு இல்லை என்பதையும் பிறமொழிப் பெயர்களை மூலமொழியில் உச்சரிப்பது போன்றே தமிழிலும் எழுத வேண்டும் என்ற கருத்தையே பாரதி கொண்டிருந்தான் என்பதையும் ஏற்கனவே பார்த்தோம். தனது எழுத்துக்களிலே பிறமொழிப் பெயர்களைத் தமிழ் மயப்படுத்தாது எழுதவே பாரதி பெரிதும் முயன்றிருப்பதைக் காணலாம். உதாரணமாக பாரதி கையாண்டுள்ள ப்ரெஞ்ச், பிரிடிஷ், லண்டன் டைம்ஸ், ஸ்பீக்கர், ட்யூடர் போன்ற சொற்களைக் காட்டலாம்.

" நமது பத்திரிகைகளில் ஐரோப்பாவில் உள்ள நகரங்கள், மலைகள் முதலியவற்றின் பெயர்களைப் பார்க்கும்போது கண் கூசுகிறது. அதைத் தமிழ் மாத்திரமறிந்த தமிழர் எப்படி வாசிப்பார்க ளென்பதை நினைக்கும்

போதே காது கூசுகிறது '' என பிறமொழிப் பெயர்களை ஒலிச் சிதைவோடு எழுதுவதை எண்ணி வருத்தப்படும் பாரதியும் சரி (23 : 68), முற்றிலும் தமிழ் மயப்படுத்தியே எழுதவேண்டும் என்று கூறும் செய்மையாக்க வாதிகளும் சரி மொழிகள் கடன் வாங்குவதில் உள்ள பொது இயல்பைப் புரிந்து கொள்ளவில்லை என்றே கூறவேண்டும்.

48. கடன் வாங்கலின் பொது இயல்பு

பொதுவாக எந்த ஒரு மொழியும் பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கும் போது பெரும்பாலும் தனது ஒலியமைப்புக்கு ஏற்பவே கடன் வாங்குகின்றது. இதனைத் தன்மயமாக்குதல் (nativization) என மொழி யியலாளர் கூறுவர். கடன் வழங்கும் மொழியில் கடன் வாங்குவோருக்கு உள்ள மொழியாட்சியின் அளவைப் பொறுத்து கடன் வாங்கப்படும் சொல் லின் வடிவம் அமைகின்றது. அதாவது மொழியாட்சியின் அளவைப் பொறுத்துத் தன்மயமாக்கலின் அளவு வேறுபடுகின்றது. உதாரணமாக ஜப்பான் மொழியிலே violin என்ற ஆங்கிலச் சொல் வெவ்வேறு விதமாகக் கடன் வாங்கப்படுகின்றது. இது பேசுவோர் ஆங்கிலத்தில் எந்த அளவு ஆட்சி பெற்றிருக்கின்றார் என்பதைப் பொறுத்தது. ஆங்கில மொழிப் பரிச்சயம் உடையோர், அவர்களது சொந்த மொழியில் /v/ என்னும் ஒலி யன் இல்லா விடினும் கிட்டத்தட்ட மூலச் சொல்லை ஒத்ததாக vaiorin என்று சொல்வர். ஆங்கிலப் பரிச்சயம் அற்றோர் ஆங்கில /v/ வுக்குப் பதிலாக /w/ அல்லது /b/ வைப் பயன்படுத்தி waiorin என்றோ அல்லது baiorin என்றோ சொல்வர். ஆனால் இருசாராருமே l வை r வாகவே உச்சரிப்பர். (43 : 213-214) ஏனெனில் ஜப்பான் மொழியிலே l ஒரு ஒலியன் அல்ல. அது /r/ வின் மாற்றொலியாகும். இதனால் ஜப்பானியர் பிறமொழிச் சொற்களில் உள்ள l ஒலியைப் பிரக்ஞையற்றே ஒதுக்கி விடுகின்றனர்.[20] தமிழ் மொழியிலும் இத்தகைய தன்மையினைக் காண லாம். ஆங்கிலப் பரிச்சயமற்ற சாதாரண பொதுமக்கள் machine, gate என்னும் ஆங்கிலச் சொற்களை முறையே மிசின் [micin], கேத்து [kettu] என்றே உச்சரிக் கின்றனர். இவை பெருமளவு தன்மய மாக்கப்பட்ட வடிவங்களாகும். ஆங்கிலப் பயிற்சியுடைய கற்றவர்கள் பெருமளவு இவற் றின் மூல உச்சரிப்பைப் பேணுகின்றனர்.

ஆங்கிலேயரும் பிறமொழிச் சொற்களை இவ்வாறு தங்கள் மொழி யின் ஒலியமைப்புக்கு ஏற்பவே பெரிதும் கடன் வாங்குகின்றனர். தமிழ்ப் பெயர்களை ஆங்கிலேயர் எவ்வாறு உச்சரிக்கின்றார்கள், எழுதுகின்றார்கள் என்பதையே நாம் உதாரணமாகக் கொள்ளலாம். தமிழ் என்ற சொல்லே ஆங்கில வழியாகத் திரிபடைந்து சில தமிழரின் பேச்சிலேயே Tamil ஆகி

விட்டதைக் காண்கிறேம். தமிழ்ப் பேசும் முஸ்லிம்களின் அறபுப் பெயர்களும் தன்மயமாக்கலுக்கு ஒரு சிறந்த உதாரணமாகும். முகம்மது என்ற பெயர் சிலவேளை முஹம்மது என எழுதப்படினும் இதிலுள்ள க அல்லது ஹ கடையண்ண உரசொலியாகவே உச்சரிக்கப் படுகின்றது. அறபு மொழியில் இது ஒலிப்பிலா முன் தொண்டை உரசொலியாகும். இறுதிமெய் அறபு மொழியில் ஒலிப்புள்ள வெடிப்பொலியாகும். தமிழிலே அது ஒப்பிலா ஒலியாகி உகரம் பெற்று முடிகின்றது. தமிழ்மொழி மட்டும் அறிந்த கல்வி கற்காத கிராமப்புறத்து முஸ்லிம்கள் மத்தியிலே இது மம்மது என்றே வழங்குகின்றது.

மொழிகள் பெரும்பாலும் தமது ஒலியமைப்புக்கு ஏற்பவே பிற மொழிச் சொற்களைக் கடன் வாங்குகின்றன என்பதைப் பார்த்தோம். ஆயினும் கடன் வாங்கலின் மூலம், கடன் வாங்கும் மொழியின் ஒலியமைப்பில் சில மாற்றங்கள் நிகழ்வதும் உலகப் பொது இயல்பாகும். உதாரணமாக ஆங்கில மொழி /v z j/ ஆகிய ஒலியன்களை பிரஞ்சு மொழியில் இருந்தே பெற்றது என்பர். இதன் விளைவாக ஆங்கிலத்தில் /v/ வுக்கும் /f/ வுக்கும் இடையிலும் /z/ வுக்கும் /s/ வுக்கும் இடையிலும் ஒலியன் முரண் தோன்றியது என்பர். இதுபோல் பல லத்தீன் அமெரிக்க மொழிகளின் ஒலியன் அமைப்பு ஸ்பானிய மொழிக் கடன்சொற்களால் மாற்றம் அடைந்தது என்றும் மொழியியல் ஆய்வு காட்டுகின்றது. உதாரணமாக Quechua மொழியில் ஸ்பானியரின் வருகையின் முன் /i a u/ என்னும் மூன்று உயிர் ஒலி அமைப்பே இருந்தது என்றும் ஸ்பானியக் கடன் சொற்களால் இவை பின்னர் /i e a o u/ என்னும் ஐந்து உயிர் ஒலி அமைப்பாக மாறியது என்றும் ஹொக்கற் கூறுகின்றூர் (39 : 410-411). ருஷ்ய மொழியில் இருந்து சோவியத் சோசலிசக் குடியரசு மொழிகள் பல ஒலியன்களைக் கடன் வாங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது (40 : 361). தமிழ் மொழியிலே வட மொழிக் கலப்பால் ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ முதலிய எழுத்துக்கள் குறிக்கும் ஒலிகள் தோன்றின. மொழிக்கு முதல், இடை, கடை நிலைகளில் வரா எனப் பழைய இலக்கண நூல்கள் குறிப்பிடும் பல ஒலிகள் கடன் வாங்கலின் காரணமாக இன்று அவ்விடங்களில் இடம் பெறுகின்றன. இவை பேச்சில் மட்டுமன்றி இன்றைய எழுத்துத் தமிழிலும் ஆதிக்கம் பெறத் தொடங்கிவிட்டன.

எந்த மொழியும் பிறமொழிச் சொற்களை ஒலிச் சிதைவின்றி மூல மொழியில் உள்ளது போல் அப்படியே கடன் வாங்கிக் கொள்வதும் இல்லை; அதேபோல் முற்றிலும் தனது ஒலியமைப்புக்கு ஏற்ப ஒலி மாற்றம் செய்து தன் மயமாக்கிக் கொள்வதும் இல்லை என்ற உண்மையையே நாம் இதன் மூலம் அறிகின்றேம். இரண்டுமே நிகழ்கின்றன. எல்லா மொழிகளும் பெருமளவு தமது ஒலியமைப்புக்கு ஏற்பவே கடன் வாங்குகின்றன. அதேவேளை

ஓரளவு பிறமொழி ஒலிகளையும் ஒலிச் சேர்க்கைகளையும் கடன் வாங்கியும் கொள்கின்றன. இது கடன் வாங்கப்படும் சொல்லின் ஒலியமைப்பிலும் கடன் வாங்குவோருக்கு கடன் வழங்கும் மொழியில் உள்ள மொழியாட்சியின் அளவிலும் தங்கியுள்ளது. தாய்மொழி மட்டும் அறிந்த ஒருமொழியாளர் (monolinguals) கடன் சொற்களைப் பெருமளவு தன் மயமாக்குகின்றனர். இரு மொழி அறிவுடையோர் (bilinguals) குறைந்த அளவு தன் மயமாக்குகின்றனர்.

இப் பின்னணியில் பார்க்கும்போது; பாரதியிடமோ அல்லது இரத்தினம் போன்ற செம்மையாக்க வாதிகளிடமோ தற்காலத்தில் 'தன்மயமாக்கல்' எனப் பேசப்படும் மொழியியற் பண்பு பற்றிய உணர்வை நாம் காணமுடியவில்லை. இரத்தினம் போன்றோர் ஒரு மொழியாளனின் நிலை நின்று பூரண தன்மயமாக்கலை வலியுறுத்துகின்றனர். இரு மொழியாளரின் நோக்கு நிலையில் இது கேலிக்கிடமானதாகின்றது. இந்தகைய தன்மயமாக்கலைப் பாரதி 'கூசத்தக்க' நிலைமையாகக் கருதுகிறான் என்பதை ஏற்கனவே பார்த்தோம். அதேவேளை பிற மொழிப் பெயர்களை ஒலிச் சிதைவின்றி எழுதுவதற்குப் புதிய எழுத்துக் குறியீடுகள் தேவை என்ற பாரதியின் கருத்தையும் நாம் பூரணமாக ஏற்றுக் கொள்ள முடியாது. பாரதியாரே "ஸம்ஸ்கிருதச் சொற்களை ஸம்ஸ்கிருத வழக்கப்படி நாம் உச்சரிக்க வேண்டிய அவசியம் இல்லையாதலால் நமக்கு அந்த எழுத்துக்கள் வேண்டுவதில்லை" என்ற வாதத்தை ஓரளவு ஏற்றுக் கொள்கிறார் (23 : 67). ஆயினும் பிற நாட்டு ஊர்ப் பெயர்களையும் ஆட் பெயர்களையும் சரியானபடி உச்சரிக்கவும் எழுதவும் வேண்டும் என்பது அவரது வாதமாகும். சம்ஸ்கிருதச் சொற்களுக்குப் பொருந்துவது ஊர்ப் பெயர், ஆட் பெயர்களுக்கு ஏன் பொருந்தாது என்பதை அவர் தெளிவு படுத்தவில்லை. தமிழில் எழுத்துக் குறைபாட்டுக்குப் பாரதியார் சொல்லும் காரணம் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாயினும் தமிழில் எழுத்துக் குறைபாடே இல்லை; புதிய குறியீடுகளோ, சீர்திருத்தமோ தேவையில்லை என்று ஆகிவிடாது. இது தொடர்பாக செ. வை. சண்முகம் கூறுவதும் இங்கு மனங்கொள்ளத் தக்கது.

> "பாரதியார் சொன்ன காரணத்தை வேண்டுமானால் ஓரளவு மறுக்கலாம். ஏனெனில் பல நாட்டு ஊர்கள், மக்கள் பெயர்களைக் கூறும்போது பல புதிய ஒலிகள் இருக்கும். எனவே அந்தப் பெயர்களை அந்த அந்த மொழியினர் உச்சரிப்பது போல ஒலிப்பது கொஞ்சம் சிரமம்தான். மேலும் ஒவ்வொரு நாடும் பிற மொழிப் பெயர்களைத் தத்தம் மொழியின் இயல்பிற்கும் வரலாற்றுத் தொடர்புக்கும் ஏற்ப உச்சரித்து வருவதைக் காணலாம். பாரதியார் சொன்ன காரணம் வேண்டுமானால் தவறுடையது. கருத்து அல்ல (11 : 112).

ஆகவே பாரதியார் சொன்னதுபோல் பிறமொழிப் பெயர்களை ஒலிச்சிதைவின்றி அப்படியே எழுதுவதற்காக அல்லாவிடினும், பிறமொழிக் கலப்பால் ஏற்படும் புதிய மொழிமாற்றங்களுக்கும் புதிய தேவைகளுக்கும் ஏற்ப தமிழ் எழுத்து வடிவத்தை இயைபு படுத்திக் கொள்வதற்காக வேனும் தமிழ் வரிவடிவில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமே யாகும். இவ்வாறு செய்வது எழுத்துச் சீர்திருத்தத்தின் பாற்படும். எழுத்துச் சீர்திருத்தம் பல்வேறு அம்சங்களைக் கொண்டுள்ளது. புதிய ஒலிகளுக்குரிய எழுத்துக்களை அல்லது குறியீடுகளை அமைப்பது, வரிவடிவ அமைப்பில் உள்ள ஒழுங்கீனங்களைச் சீர்படுத்தி எழுத்து முறையைச் சிக்கன மாக்குவது, எழுத்துக் கூட்டலை நியமப்படுத்துவது (standardization of spelling) போன்றவை அவற்றுள் அடங்கும். பாரதியார் கூறிய புதிய குறியீட்டாக்கம் எழுத்துச் சீர்திருத்தத்தின் ஓரம்சம் மட்டுமே. அதன் வேறு அம்சங்கள் பற்றி அவர் சிந்தித்ததாகத் தெரியவில்லை. ஆயினும் எழுத்துக் குறை பற்றிய பாரதியின் கருத்துக்கள் பெருமளவு அறிவியல் நிலைப்பட்டவை என்பதில் ஐயமில்லை. இவ்வகையில் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தமிழில் எழுத்துக் குறை பற்றி ஆழமாகச் சிந்தித்த பெருமை பாரதிக்கே உரியது.

தமிழில் புகுந்துள்ள புதிய ஒலியன்களுக்கு எழுத்தில் இடம் கொடுக்க வேண்டும் என்பதில் நவீன மொழியியலாளர் மத்தியிலே இன்று கருத்து வேறுபாடுகள் அதிகம் இல்லையெனலாம். ஆனால் இவற்றுக்கு எத்தகைய வடிவம் கொடுப்பது என்பதிலே கருத்து வேறுபாடு உண்டு. ஆயினும் பாரதியின் கருத்துக்கே இன்று அதிகம் ஆதரவு காணப்படுகின்றது. ''புதிய ஒலியன்களை எப்படி அமைப்பது என்ற முறையில் பாரதியார் வழியே எளிமையானது'' என செ. வை. சண்முகம் கூறுகின்றார்.

> ''எழுத்துக்களைக் கடன் வாங்குவதும், புதிய எழுத்துக்களைப் படைப்பதும், கூட்டெழுத்துக்களைப் பயனபடுத்திப் புதிய எழுத்துக்களைக் குறிப்பதும் சிறந்தவை யல்ல. பாரதியார், புதிய கிரந்த எழுத்துக்களை வாங்கக் கூடாது என்பதற்குக் கூறிய காரணமே ரோமன் எழுத்துக்களை வாங்கவேண்டாம் என்பதற்கும், புதிய எழுத்துக்களைப் படைக்க வேண்டாம் என்பதற்கும் பொருந்தும்'' என்பது அவர் கருத்து

(11 : 113). பாரதி புதிய கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தக் கூடாது என்பதற்குக் கூறிய காரணம், கிரந்த எழுத்துக்களைத் தெரியாதவர்களுக்கு வாசிக்க முடியாது போகும் என்பதுதான். குறியீடுகளால் அந்த இடைஞ்சல் இல்லை. தப்பாகவோ சரியாகவோ வழக்கம்போல வாசித்துக் கொண்டு போவதை அடையாளங்கள் தடுக்க மாட்டா என்பதே பாரதியின் கருத்தாகும் (21 : 69). [21]

5

இந்தியாவுக்குப் பொதுப் பாஷை

இந்தியா பல இன, பல மொழி பேசும் மக்களைக் கொண்ட ஒரு நாடாகும், கிரியர்சனின் ஆய்வின்படி இந்தியாவில் 179 மொழிகளும், 544 கிளை மொழிகளும் பேசப்படுவதாக அறிய முடிகின்றது (15 : 67). இவரது ஆய்வு சென்னை, மைசூர், ஹைத்ராபாத் முதலிய அப்போதைய இந்திய மாகாணங்களை உள்ளடக்காத ஓர் ஆய்வாகும் என்பதும் மனங்கொள்ளத் தக்கது. இன்று அரசியல் அமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட 14 தேசிய மொழிகள் இந்தியாவில் வழக்கில் உள்ளன.

பிரித்தானியரின் வருகையின் முன்பு இந்தியா ஒருபோதும் ஒரு தனி நாடாக இருந்ததில்லை. பிரித்தானிய ஆட்சி நிருவாகமே இந்தியாவை ஒன்றிணைத்தது. இந்திய சுதந்திரப் போராட்டம் இந்தியர் என்ற தேசிய உணர்வை உருவாக்கிற்று. சுதந்திரப் போராட்ட காலத்திலேயே இந்தியர்கள் பொதுத் தொடர்பு மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் எதைப் பயன்படுத்துவது என்ற சர்ச்சை ஆரம்பித்து விட்டது. சுதந்திரத்துக்கு முந்திய காலப்பகுதியில் வட இந்தியாவில் ஆட்சி மொழி அந்தஸ்கில் இருந்த உருது மொழியின் இடத்தை ஆங்கிலமும், ஹிந்தியும் படிப்படியாகப் பிடித்துக் கொண்டன (36 : 127-136). பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலமே இந்தியா முழுவதிலும் ஆட்சி மொழியாகவும், கற்றறிந்தோர் மத்தியில் பொதுத் தொடர்பு மொழியாகவும் இருந்து வந்தது. முஸ்லிம் ஆட்சி இந்தியாவில் பரவி இருந்த காலத்தில் உருது மொழியே அரசவை மொழியாகவும் முஸ்லிம் உயர் குழாத்தினரின் பொது மொழியாகவும் இருந்தது. ஆயினும் சுதந்திர இந்தியாவிலே பொதுத் தொடர்பு மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் எதைக் கொள்வது என்பது தொடர்பாக கருத்து வேறுபாடு நிலவி வந்துள்ளது.[22]

ஆங்கிலத்தைப் பொது மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் தொடர்ந்து வைத்திருக்கக் காந்தி முதலிய பெருந் தலைவர்கள் விரும்பவில்லை. ஹிந்தி அல்லது உருது தான் இந்தியாவின் பொது மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் இருக்க வேண்டுமென்று காந்தி விரும்பினர். ஆயினும் தீவிரமடைந்து வந்த ஹிந்தி ஆதரவு இயக்கத்தின் செல்வாக்கினல் இந்தியாவின் ஆட்சி மொழியாக ஹிந்தியே அரசியல் சாசனத்தில் அங்கீகரிக்கப் பட்டது

ஹிந்தி அல்லது ஆங்கிலத்துக்குப் பதிலாக சம்ஸ்கிருதமே பண்டைக் காலத்தில் இருந்ததுபோல் பொது மொழியாக இருக்க வேண்டுமென்று அரவிந்தர் போன்ற வேறுசிலர் விரும்பினர்,

இது விசயத்தில் பாரதியின் நிலைப்பாடு இரு முனைப் பட்டதாகக் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் பாரதி ஹிந்தி ஆதரவாளனாகவும் பிற் காலத்தில் சமஸ்கிருத ஆதரவாளனாகவும் காணப்படுகிறான். இதுபற்றிய பாரதியின் கருத்துக்களை இனி நாம் நோக்கலாம்.

1906 டிசம்பர் 15ம் திகதி இந்தியா பத்திரிகையிலே ஹிந்தி பாஷைப் பக்கம் என்ற தலைப்பில் பாரதி எழுதியுள்ள ஒரு குறிப்பிலே ஹிந்தி மொழியையே இந்தியாவுக்குப் பொதுப் பாஷையாகக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டுள்ளான். " தமிழர்களாகிய நாம் ஹிந்தி பாஷையிலே பயிற்சி பெறுதல் மிகவும் அவசியமாகும் " என்றும் " இந்தியா பல வித பிரிவுகளை உடையதாய் இருந்த போதிலும், உண்மையிலே ஒன்றாய் இருப்பதற் கிணங்க, அதிலுள்ள வெவ்வேறு நாடுகளிலே வெவ்வேறு பாஷைகளிருந்த போதிலும் முழுமைக்கும் ஒரு பொது பாஷை வெண்டும் " என்றும், " தமிழர்கள் தமிழும் ஹிந்தியும், தெலுங்கர்கள் தெலுங்கும் ஹிந்தியும், பெங்காளத்தார் பெங்காளியும் ஹிந்தியும் என இவ்வாறே எல்லா வகுப்பினரும் அறிந்திருப்பார்களானால் நமக்கு பொது பாஷை ஒன்றிருக்கும் " என்றும் பாரதி அக் கட்டுரையிலே கூறுகிறான் (29 : 348).

ஹிந்திக்குப் பதிலாக ஆங்கிலத்தை இந்தியாவின் பொதுப் பாஷையாக்கக் கூடாது என்பதும் பாரதியின் கருத்தாகும். அதற்குப் பாரதி கூறும் காரணம், ஆங்கிலம் அன்னிய பாஷை என்பதும், அது இந்தியாவில் உள்ள எல்லா " வகுப்பினர்க்கும் ஸ்திரமாகப் பதிந்துவிடும் இயற்கை உடையதன்று " என்பதுமாகும் பதிலாக ஹிந்தியே பொதுப் பாஷைக்குரிய தகுதி உடையதென்றும் பாரதி கருதுகிறான். "முப்பது கோடி இந்தியர்களில் ஏற்கனவே சுமார் எட்டுக் கோடிப் பேர் ஹிந்தி பேசுபவராக உள்ளனர். தவிரவும் மஹாராஷ்டிரர், வங்காளிகள் முதலியோர் ஹிந்தியை எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடியவர்கள். தமிழர்கள், தெலுங்கர்கள் முதலியோர் சிறிது பிரயாசை எடுத்தால் ஹிந்தியைக் கற்றுக்கொள்ளலாம்". இவ்வகையில் ஹிந்தியைப் பொதுப் பாஷையாக்குவது எளிது என்று பாரதி கருதுகிறான் (29 : 349). தமிழர்களுக்கு ஹிந்தி மொழியைச் சிறிது சிறிதாகக் கற்பிக்க வேண்டும் என்பதற்காகவே 'ஹிந்தி பாஷைப் பக்கம்' என்ற ஒரு பகுதி இந்தியா பத்திரிகையில் தொடங்கப் பட்டதாகவும் அக் குறிப்புக் கூறுகின்றது.

இக் குறிப்பை எழுதிப் பல ஆண்டுகளுக்குப் பிறகு 1920 அல்லது 1921-ல் சுதேச மித்திரனிலே இந்தியாவுக்குப் பொது பாஷை என்ற தலைப்பில் பாரதி எழுதிய ஒரு குறிப்பிலே[23] ஹிந்திக்குப் பதிலாக சமஸ்கிருதத்தையே இந்தியாவின் பொதுப் பாஷையாக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளான் இக் கட்டுரையிலே

''இந்தியாவுக்கு பொது பாஷையாக ஹிந்தியை வழங்கலா மென்று ஸ்ரீமான் காந்தி முதலிய பல பெரியோர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். ஆனால் பாரததேச பக்த சிரோரத்ன மென்று கூறத்தக்க ஸ்ரீமான் அரவிந்த கோஷ் முதலிய வேறு பலர் ஸம்ஸ்கிருத பாஷையே இந்தியாவுக்குப் பொதுப்பாஷை யென்றும், நாம் அதைப் புதிதாக அங்ஙனம் சமைக்க வேண்டிய தில்லை யென்றும் ஏற்கனவே ஆதிகாலந் தொட்டு அதுவே பொதுப் பாஷையாக இயல்பெற்று வருகிறது என்றும் சொல்லுகிறார்கள்'' என்று கூறும் பாரதி (23: 74), பண்டைக்காலத்தில் சமஸ்கிருதமே பொதுப் பாஷையாக இருந்தது என்பதற்கு ஒரு உதரண விளக்கமும் தருகிறான். இந்தியாவில் ஆங்கிலேய ஆதிக்கம் ஏற்படுவதற்கு முன், ஒரு தமிழ் மன்னன் குஜராத் மன்னன் ஒருவனுக்குக் கடிதம் எழுத நேர்ந்தால் தமிழிலோ, குஜராத்திலோ எழுதுவது அசாத்தியமாய் இருந்திருக்கு மென்றும், இரண்டு நாட்டுப் பண்டிதர்களும், ராஜகுருக்களும், முக்கிய மந்திரிகளும் ஒருங்கே பயிற்சி பெற்றிருந்த ஸம்ஸ்கிருத பாஷையிலேயே கடிதப் போக்குவரத்து நடந்திருக்கும் என்றும் பாரதி கூறுகிறான் (23:75). சமஸ்கிருத மொழியைப் படித்துத் தேர்ச்சி பெறுதல் கடின மாகையால் அதைத் தேச முழுமைக்கும் பொதுப் பாஷையாகச் செய்தல் சௌகரியப் படாது என்று கூறுவோருக்கும் பாரதி பதில் கூறுகின்றான். சமஸ்கிருதத்தைப் பழைய முறையில் படிப்பதனால்தான் இக்கஷ்டம் ஏற்படும் என்றும் ஆனால் தற்போது ஆசிரியர் இல்லாமலே ஏழு எட்டு மாதங்களில் சமஸ்கிருதத்தைக் கற்றுக்கொள்ள வழி இருக்கிற தென்றும் பாரதி குறிப்பிட்டுள்ளான். (23: 75)

மேற்காட்டிய குறிப்புக்களிலே பாரதி பொதுப்பாஷை என்பது பொதுத் தொடர்பு மொழியை மட்டுமா அல்லது ஆட்சி மொழியையுமா? என்பது தெளிவாகவில்லை. கொடுத்த உதாரணத்தைப் பார்க்கும்போது பொதுத் தொடர்பு மொழியையே பாரதி கருதுவதாகத் தோன்றுகின்றது. ஆயினும் ஆட்சி மொழியையும் பொதுத்தொடர்பு மொழியையும் பாரதி வேறுபடுத்தி நோக்கி இருக்க முடியாது என்றும் நாம் யூகிக்கலாம். காந்தி முதலியோர் ஹிந்தியைப் பொதுமொழியாக்குவது பற்றிப் பேசும்போது, அதை அகில இந்தியாவிலும் அதிகார பூர்வமான நிருவாக மொழியாக

மாற்றுவது பற்றியே பேசினர்கள் என்பதையும் நாம் மனங்கொள்ளலாம். ஆகவே பாரதியின் பொதுப்பாஷை என்ற பிரயோகம் அகில இந்தியாவுக்கும் உரிய பொதுத் தொடர்பு மொழி என்பதோடு ஆட்சித்துறை நிருவாக மொழியையும் உள்ளடக்குவதாகக் கொள்வதே பொருத்தமானது.

ஆரம்பத்திலே பொதுமொழியாக ஹிந்தியை ஆதரித்த பாரதி, பிற்காலத்திலே சமஸ்கிருத ஆதரவாளனக மாறியதற்கான காரணம் என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை. 'காந்தி முதலியோர் ஹிந்தியை இந்தியாவின் பொது மொழியாகக் கொள்ளலாமென அபிப்பிராயப் படுகிறார்கள்' என்று எழுதும் பாரதி, ஒருகாலத்தில் தானும் அத்தகைய அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தது பற்றி எதுவும் கூறவில்லை. பிற்காலத்திலே பாரதி ஹிந்தியைக் கைவிட்டு சமஸ்கிருதத்தை ஆதரித்தமைக்கு அரவிந்தரின் செல்வாக்கே முக்கிய காரணம் எனத் தோன்றுகின்றது. பாரதிக்கு அரவிந்தர் மீது மிகுந்த பற்று இருந்ததென்பது பிரசித்தம். காந்தியின் சில கருத்துக்களைக் கூட விமர்சித்துள்ள பாரதி (16: 130), அரவிந்தருடன் அபிப்பிராய பேதம் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. 'பாரத தேச பக்த சிரோ ரத்தினம்' என்று அடைமொழியிட்டு அழைப்பதன் மூலம் அரவிந்தர் மீது பாரதிக்குள்ள மரியாதை புலப்படுகின்றது. அவ்வகையிலே அரவிந்தரின் கொள்கை பாரதி மீது செல்வாக்குச் செலுத்தி இருக்கலாம். பாரதிக்கு இயல்பாகவே இருந்த வடமொழிப் பற்றும் இதற்கு ஒரு காரணமாகலாம். இதுபற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. தமிழை ஒரு பிராந்திய மொழியாகவும் (regional language) வடமொழியை ஒரு அகில இந்திய மொழியாகவுமே (all Indian language) பாரதி கருதியுள்ளான். 1920-ல் எழுதிய தேசியக் கல்வி என்ற கட்டுரையிலே இதுபற்றிய பாரதியின் பின்வரும் குறிப்புக் காணப்படுகின்றது.

> "......தமிழ் நாட்டில் தமிழ் சிறந்திடுக. பாரததேசம் முழுவதும் எப்போதும் போலவே வடமொழி வாழ்க, இன்னும் நாம் பாரத தேசத்தின் ஐக்கியத்தைப் பரிபூரணமாகச் செய்யுமாறு நாடு முழுவதிலும் வடமொழிப் பயிற்சி மென்மேலும் ஓங்குக. எனினும், தமிழ் நாட்டில் தமிழ்மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக." (16: 256)

இங்கு, பாரதி இந்தியாவின் ஐக்கியத்தைப் பேணுவதற்காக நாடெங்கும் வடமொழிப் பயிற்சி ஓங்க வேண்டும் என்று கூறுவதை அவதானிக்கலாம். இந்தியாவின் ஐக்கியத்தைப் பேணுவதற்கு வடமொழி அவசியம் என்று பாரதி கருதினன் போலும். ஹிந்தியைப் பாரதி கைவிட்டமைக்கு இதுவும் ஒரு காரணமாகலாம். இந்தியாவின் எல்லா மாநிலத்தவர்களும் ஹிந்தியை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை இருக்கவில்லை. வட

மாநிலங்களில் உருது பேசும் முஸ்லீம்கள் ஹிந்தித் திணிப்பை விரும்பவில்லை. தென் மாநிலங்களிலும் ஹிந்திக்கு எதிர்ப்பு இருந்தது. இவ்வகையில் ஹிந்தியைப் பொதுப் பாஷையாக்குவது தேசிய ஐக்கியத்திற்கு இடையூருக இருக்கலாம் எனப் பாரதி உணர்ந்திருக்கக் கூடும். சமஸ்கிருதத்தைப் பொதுப் பாஷையாக்குவதைப் பெரும்பான்மையான இந்தியர்கள் எதிர்க்கமாட்டார்கள் என்றும் பாரதி கருதியிருக்கக் கூடும். அதனுலேயே பாரதி பிற்காலத்தில் தன் கொள்கையை மாற்றிக் கொண்டிருக்கலாம். அரவிந்தரின் செல்வாக்கும் இதற்கு அனுசரணையாக இருந்திருக்கலாம். ஆயினும் சமஸ்கிருதத்தைப் பொதுமொழியாக்கும் பாரதியின் அபிலாசை எந்த அளவு காரிய சாத்தியமானது என்பது ஆய்வுக்குரியது.

பண்டைக் காலத்தில் இந்தியா முழுவதிலும் கற்றறிந்தோர் மத்தியில் பொதுத் தொடர்பு மொழியாகச் சமஸ்கிருதம் பயன்பட்டது என்பது உண்மையே. ஆனுல் வெகு காலத்துக்கு முன்பே அது ஒரு பொதுத் தொடர்பு மொழி என்ற நிலையை இழந்துவிட்டது. ஒரு புத்தக மொழியாகவும், சமயச் சடங்கு மொழியாகவும் மாறிவிட்டது. சுருக்கமாகச் சொன்னுல் அது பேச்சு வழக்கிறந்த மொழியாகிவிட்டது. ஆயினும் வழக்கிறந்த மொழியை உயிர்ப்பித்துப் பொதுத் தொடர்பு மொழியாகவும் ஆட்சிமொழியாகவும் மாற்ற முடியாது என்றில்லை. ஹீப்று மொழி இவ்வாறு மாற்றப்பட்டதற்குச் சிறந்த உதாரணமாகும். மத்திய கிழக்கிலே பேசப்பட்ட புராதன மொழிகளுள் ஒன்ருன ஹீப்று சமஸ்கிருதம் போல் வெகு காலத்துக்கு முன்பே வழக்கிறந்த மொழியாகிவிட்டது. எனினும் யூதர்களின் சமய மொழியான அது இன்று, புதிதாக உருவாக்கப்பட்ட இஸ்ரேல் நாட்டின் ஆட்சிமொழியாகவும் இஸ்ரவேலர்களின் அன்ருடப் பொதுப் பயன்பாட்டு மொழியாகவும் மீண்டும் மாறிவிட்டது. இது அவசிய நிர்ப்பந்தத்தின் விளைவாகும்.

1948-ல் இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. அந்நாட்டின் குடிசனம் காலாதி காலமாக அங்கு வாழ்ந்த மக்களைக் கொண்டதல்ல. வந்தேறு குடிகளான பல நாடுகளையும் சேர்ந்த, பல மொழிகளைப் பேசிய யூதர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். யெமனில் இருந்து வந்து குடியேறிய யூதர்களுக்கு அரபு மொழி மட்டுமே தெரிந்திருந்தது. ஐரோப்பிய மொழிகள் எதனையும் அவர்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஜேர்மனியில் இருந்து வந்தவர்களுக்கு அரபு தெரியாது. கிரேக்கத்தில் இருந்து வந்த யூதர்களுக்குக் கிரேக்க மொழி மட்டுமே தெரிந்திருந்தது. ஆகவே ஒரு நாட்டில் இருந்து வந்த யூதர்கள் வேறு ஒரு நாட்டில் இருந்து வந்த யூதர்களுடன் மொழித்தொடர்புகொள்ள முடியாத நிலையே இருந்தது. அவர்களுக்கு இருந்த ஒரேவழி ஹீப்றுவைப் பேசுவதாகும். ஹீப்று யூதர்களின் சமய மொழியாக இருந்ததினுல், யூதர்களில் சிலருக்கு ஹீப்று தெரிந்திருந்தது. தவிரவும்

புதிதாக வந்தேறிய இஸ்ரேல் பிரஜைகள் எல்லோருக்கும் ஹீப்று கற்பிக்கப் பட்டது. ஹீப்று மொழியைக் கற்றுக் கொள்ளாமல் வேலைத்தலத்தில் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவோ, பட்டணத்துக்குப் பாதை கேட்கவோ, பாண்வாங்கவோ, பாடசாலையில் கற்கவோ முடியாத நிலையே இருந்தது. ஆகவே இந்த நடைமுறை நிர்ப்பந்தம் காரணமாக அந்நாட்டு மக்கள் அனைவரும் தங்களுக்குப் புதிய மொழியாகிய ஹீப்றுவைக் கற்றுக் கொண்டார்கள். இப்போது ஹீப்று ஒரு நவீன மொழியாகிவிட்டது. தவிர்க்க முடியாத நிலையிலேதான் ஒரு மொழி புழக்கத்துக்கு வந்து நிலை பெறுகின்றது என்பதையே இது காட்டுகின்றது (42:196).

இந்தியாவிலே சமஸ்கிருதத்தின் நிலைவேறு. இந்திய மக்களைப் பொறுத்தவரை அன்றாடத் தேவைகளுக்காகச் சமஸ்கிருதத்தைக் கற்க வேண்டுமென்ற அவசிய நிர்ப்பந்தம் எதுவும் இல்லை. சமஸ்கிருதத்தைக் கற்காமல் தமக்குள் செய்தித் தொடர்பு கொள்ள முடியாத நிலை இல்லை. வரலாறு இப்பணியை பெரிதும் ஆங்கிலத்தின் மேல் சுமத்திவிட்டது. நவீன வாழ்க்கை முறையிலே கற்றோர் மத்தியில் ஆங்கிலம் தேசியத் தொடர்புகளுக்கு மட்டுமன்றி சர்வதேசியத் தொடர்புகளுக்கும் இன்றியமையாத மொழியாகி விட்டது. ஆகவே ஆங்கிலத்தின் இடத்தைச் சமஸ்கிருதம் மீண்டும் பெறமுடியும் என்று தோன்றவில்லை. எனினும் சமஸ்கிருதம் இந்திய பண்பாட்டு மொழி, வேத மொழி, ஆகவே அதனைப் பொது மொழியாக்க வேண்டுமென இந்திய மக்கள் எல்லாரும் ஏற்றுக் கொண்டால் அல்லது சமஸ்கிருதத்தை இந்தியாவின் பொதுத் தொடர்பு மொழியாகவும் ஆட்சிமொழியாகவும் பிரகடனப் படுத்தி அரசாங்கம் சட்டம் இயற்றினால் நிலைமை சாத்தியமாகாதா என ஒருவர் கேட்கக்கூடும். கொள்கையளவில் இது சாத்தியமானதே. ஆனால் நடைமுறை வேறாகவே இருக்கின்றது. அரவிந்தர், பாரதி போன்றோருக்குப் பின்னர் இந்திய அரசியலிலும், பொது வாழ்விலும் இது பற்றிக் காத்திரமாகச் சிந்திப்போரே இல்லை எனலாம். இந்தியப் பொது வாழ்வில் இருந்து சமஸ்கிருதம் எப்போதோ மறைந்துவிட்டது என்பதையே இது காட்டுகின்றது. ஆயினும் அதன் பண்பாட்டு முக்கியத்துவம் என்றும் மறைந்து விடாது.

பாரதி கருதுவது போல, ஒரு மொழி கற்கச் சிரமமானது என்பதால் பொதுத் தொடர்புமொழி யாகாது போவதோ, கற்க இலகுவான காரணத்தால் பொதுத் தொடர்புமொழி யாகுவதோ இல்லை. ஒரு மொழியின் சமூக நிலையும், அதற்கான சமூகத் தேவையுமே அதை நிர்ணயிக்கின்றன. ருஷ்ஷியாவில் ருஷ்யமொழி பொதுத்தொடர்பு மொழியாகியது அதன் சமூக நிலை காரணமாகத்தான். ருஷ்ஷியாவில் ருஷ்ய மொழி பெரும்பான்மையினரின் மொழியாக இருந்தது மட்டுமன்றி, சோவியத்

நாட்டின் ஏனைய மொழிகளை விட நவீன வளர்ச்சி பெற்றும் இருந்தது. அவ்வகையில் கல்வித் தேவைக்காகவும் பொருளாதாரத் தொடர்புகளுக்காகவும் அது இயல்பாகவே பொதுத் தொடர்பு மொழியாக மாறிற்று. தற்காலத்திலே இந்திய மொழிகளுள் எதுவும் இவ்வாறு பொதுத் தொடர்பு மொழியாக உருவாகக்கூடிய நிலையில் இல்லை. ஹிந்தி பெரும் பாலோரால் பேசப்படும் மொழி எனினும் தென் மாநிலங்களிலே அதற்குத் தீவிரமான சமூக எதிர்ப்பு உண்டு. வளர்ச்சி நிலைகளைப் பொறுத்த வரையில் தேசிய மொழிகளுக்கிடையே அதிக ஏற்றத்தாழ்வுகளும் இல்லை. ஆகவே, கற்றோர் மத்தியில் ஆங்கிலம் பொதுத்தொடர்பு மொழியாக இருப்பது தவிர்க்கமுடியாதது. ஆனால் ஆட்சி மொழி பற்றிய பிரச்சினை வேறு. இந்தியா போன்ற பல்லின, பலமொழி பேசும் ஒரு நாட்டிலே ஒரு குறிப்பிட்ட மொழியை ஆட்சி மொழியாக்க முனைவது எப்போதும் பிரச்சினைக்குரியதே. இதனால் சமூக எதிர்ப்புக்களும் பிரிவினை வாதமுமே மேலோங்கும் என்பதையே வரலாறு காட்டியுள்ளது.

குறிப்புகள்

1. இங்கு தமிழ்மொழி என்பது எழுத்துத் தமிழையே குறிக்கும்.

2. நவீனப் படுத்துதல் (modernization) என்பது, எழுத்து மொழியிலே நவீன தேவைகளுக்கு ஏற்ற மாற்றங்களைப் புகுத்துதலைக் குறிக்கும். இம் மாற்றங்கள் பின்வருவன போன்றவற்றை உள்ளடக்கியனவாக இருக்கும்: எழுத்துச் சீர்திருத்தம், எழுத்துக்கூட்டலில் திருத்தம் (spelling reform), நியமப் படுத்துதல் (standardization), புதுச்சொற்களை உருவாக்குதல், கலைச்சொல் லாக்கம், சந்தி பிரித்து எழுதுதல், வாக்கிய அமைப்பை எளிமைப் படுத்துதல் போன்றவை. இவை பற்றி ஓரளவு விரிவாக அறிவதற்குப் பின்வரும் கட்டுரைகள் துணை செய்யும்.
(1) shanmugam, S. V. Modernization in Tamil (*48 : 351–372*)
(2) அண்ணாமலை, இ. எளிமையாக்கம்: புதுமையாக்கத்தின் ஒரு முறை. (*1 : 363–376*)

3. ''இன்று வங்க இலக்கியத்தில் உரை நடை இவ்வளவு உன்னதமாகக் கையாளப் படுவதற்கு வகையும் வழியும் கோலியவர் ரவீந்திரரே. உரை நடைக்கென அவர், மக்கள் பேசும் மொழியைத் தேர்ந்தெடுத்த

தற்கு ஒரு காரணம் உண்டு. வடமொழிக் கலப்புடைய 'ஸாது பாஷையை' விட அது வளைந்து கொடுக்கும் தன்மையுடையது. எந்தப் பாணியையும் புகுத்தி அதில் வேலைப் பாடுகளைக் காட்டுவதில் ரவீந்திரருக்கு ஒரு ஆனந்தம். வங்க யாப்பையே விசித்திரமாகவும், புது மாதிரியாகவும் தம் இள வயதிலேயே திருத்திய அவருக்கு இந்த வசனத்தில் பல சந்தங்களைப் புகுத்திப் பரீட்சை செய்து பார்க்க முதிர்ந்த வயதில் பேரவா எழுந்தது'' புத்ததேவ வஸு. ''ரவீந்திரரின் கட்டுரையும் உரைநடைச் சிறப்பும்'' (27 : xxxiv.)

4. (1) "The two main streams, the folk, popular tradition and the acedemic, formal tradition were fortunately for Tamil synthesized in the writing of Subramanya Bharati (1882—1921) who work in the first two decades of this cuntury......"
Kamil Zvelabil (*41:286*)

(2) "Subramanya Bharathi is the poet of the common man. The language of the common man became in his works the language of poetry. Till then, the language of the common man was not the respectable language of the high class literature......... He is a beliver in democracy and freedom. There is no wonder, therefore, in his honestly believing in the divinity of the language spoken by the common man. But this does not mean that he wants to write in the vulgar idiom, which as pointed out above, he condemns. When we speak of the rhythm of the speech of the common man, it is the speech which is more or less common to the learned and the illiterate and which is more or less Common to all the regions of the Tamil land. This is the kind of common speech which can appeal to the minds of the people of the Tamil land. This is in one sense, standard colloquial speech."

Meenakshisundaran, T. P. "The Rhythm of the common speech: Its Glorification by Bharathi" (*44:79,83*)

5. இக் கொள்கை பற்றிய இடைக்காலப் புலவர்களின் மேற்கோள்கள் சிலவற்றைச் சூரிய நாராயண சாஸ்திரியார் தனது தமிழ் மொழி வரலாறு என்னும் நூலிலே தருகிறார். அவர் கூறுவது வருமாறு:

''தமிழ் நூலாசிரியர் பலரும், இக்காலத்திலும் ஆங்கில நூற் பயிற்சியில்லாத நண்பருட் சிலரும் தமிழ் மொழியும் வட மொழியும் தேவபாஷைக ளென்றும், இவ் விரண்டும் முறையே அகத்தியனூர்க்கும் பாணினியார்க்குப் சிவபெருமானுல் உபதேசிக்கப் பட்டன வென்றும் கூறு நிற்பர். ''ஆதியில் தமிழ் நூல் அகத்தியர்க் குணர்த்திய மாதொரு பாகனை வழுத்துதும்'' எனவும், ''தழற் புரை நிழற் கடவுள் தந்த தமிழ்'' எனவும், ''வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாய்த், தொடர்புடைய தென் மொழியைத் தொகு கடல் சூழ் வரைப் பதனிற் குடமுனிக்கு வற்புறுத்தார் கொல்லேற்றுப்பாகர்'' எனவும் ''இரு மொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர்'' எனவும் முந்தையோர் கூறி இருத்தலையும் காண்க.'' (19 : 57)

இம் மேற்கோளில் இருந்து மொழிப் பிறப்புப் பற்றிய கடவுட் கொள்கையை சாஸ்திரியார் ஏற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிகிறது. எனினும் 'ஆங்கில நூற் பயிற்சியில்லாத நண்பருட் சிலரே' இக்காலத்தும் இக் கொள்கையைக் கொண்டுள்ளனர் என அவர் கூறுவது பொருத்த மற்றதாகும். தாமோதரம் பிள்ளை, பாரதியார் போன்ற நன்கு ஆங்கிலப் புலமை யுடையோரிடத்தும் இக் கொள்கை நிலை பெற்றிருப்பதைக் காண்கின்றோம்.

6. (1) ''சமஸ்கிருதம் தமிழ் என்னும் இரண்டு பாஷைக்கும் முதலாசிரியர் சிவபெருமான். சமஸ்கிருதமும் தமிழும் சிவபெருமானுலும், இருடிகளாலும் அருளிச் செய்யப்பட்ட இலக்கண நூல்களை உடைமையாலும் ஆன்றோர்களால் தழுவப் பட்டமையாலும் தம்முள் சமத்துவம் உடையனவேயாம்''. —ஆறுமுகநாவலர் (3 : 185, 188)

(2) ''தமிழும் சம்ஸ்கிருதமும் ஈஸ்வரன்பால் உதித்த இரட்டைப் பிள்ளைகளாம். சம்ஸ்கிருதத்துக்குப் பாணினியும் தமிழிற்கு அகத்தியருஞ் செவிலித்தாயராயினர். —சி. வை. தாமோதரம்பிள்ளை (21 . 92)

7. பாரதியின் நவீன சிந்தனைப் போக்குப்பற்றி ''பாரதியும் நவீனத்துவமும்'' என்ற தலைப்பிலான எனது கட்டுரை ஒன்றிலே சற்று விரிவாக ஆராய்ந்துள்ளேன். இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவை நிகழ்த்திய பாரதி நூற்றாண்டு ஆய்வரங்குத் தொடரில் (1982) இக் கட்டுரை வாசிக்கப்பட்டது. அவர்கள் வெளியிட உள்ள பாரதி ஆய்வுகள் நூலிலும் இக்கட்டுரை இடம்பெற உள்ளது,

8. இத்தகைய கொள்கைகள் சிலவற்றை மு. வரதராசன் தனது மொழி வரலாறு நூலிலே விளக்குகிறார் (30 : 218–242).

9. ஐரோப்பிய அறிஞர்கள் தமிழ் மொழிபற்றிக் கூறியுள்ள புகழ் மொழிகளை அ. கி. பரந்தாமனுர் தனது நல்ல தமிழ் எழுத வேண்டுமா என்னும் நூலில் தொகுத்துத் தந்துள்ளார். (25 : 23–26).

''தென்றலுடன் பிறந்த பாஷை'' என்ற தனது கட்டுரையிலே தமிழின் இனிமை பற்றிப் போப்பையர் கூறிய கருத்துக்களைப் பாரதி விதந்து கூறுவதையும் காணலாம். (பின்னிணைப்பைப் பார்க்கவும்)

10. ஆங்கில மோகிகளின் இதே குரலை பாரதியின் பின்வரும் பாடல் வரிகளிலும் கேட்கின்றோம்.

புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

சொல்லவும் கூடுவதில்லை—அவை
சொல்லும் திறமை தமிழ் மொழிக் கில்லை
மெல்லத் தமிழ் இனிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்
என்றந்தப் பேதை உரைத்தான்......

11. இத்தகையோரின் கொள்கைகள் பற்றிய விரிவான விமர்சனத்தை செ. வை. சண்முகம் எழுதியுள்ள ''மொழி உணர்வு'' என்ற கட்டுரையில் காணலாம். (1? : 85–91)

12. தேவநேயன், ஞா. முதல் தாய் மொழி அல்லது தமிழாக்க விளக்கம். கழக வெளியீடு, சென்னை, 1953.

13. இதே கட்டுரையில் தமிழபிமானத்தின் வேருெரு அளவுகோல் பற்றியும் பாரதி கூறுகிருன். அது பின்வருமாறு. ''தமிழபிமானமுள்ளவன் ஹிந்து தர்மத்தைக் கைக்கொண்டு நிற்பவன். ஆதுவே தமிழபிமானியைச் சோதிக்கும் வழி. ஏனென்ருல் தேவாரத்திலும், திருவாசகத்திலும், திருவாய் மொழியிலும், திருக்குறளிலும், கம்ப ராமாயாணத்திலும் அன்பு கொள்ளாதவனுக்குத் தமிழபிமானம் உண்மையிலேயே பிறக்க நியாயமில்லை. மேற்படி நூல்களை நன்ருக உணர்ந்தவன் ஹிந்து தர்மத்தாலேயே இந்த உலகம் நிலை பெற்று நிற்கு மென்பதை அறிவான் (22 : 210). இங்கு பாரதியின் 'ஹிந்து' உணர்வே மேலோங்கித் தெரிகின்றது. சமய நிலைப்பட்ட பாரதியின் இக் கருத்து மொழி வளர்ச்சி நிலையிலே செயற்பாட்டு முக்கியத்துவம் உடையதல்ல.

14. இங்கு கூறப்படும் கருத்துக்கள் Frank Palmer தனது Grammar என்னும் நூலில் தெரிவித்துள்ள கருத்துக்களைப் பெரிதும் தழுவியுள் ளன. (37 : 11–13).

15. தொல்காப்பியம் ஒரே காலத்தில் ஒருவரால் எழுதப்பட்டதா என்ப தில் ஆய்வாளர் மத்தியில் ஒத்த கருத்து இல்லை. வையாபுரிப் பிள்ளை கி. பி. 5ம் நூற்றுண்டளவில் தொல்காப்பியரால் அது எழுதப்பட்ட தாகக் கூறுவர் (34 : 54). தெ. பொ. மீ. அது சங்ககாலத்துக்கு முற் பட்டது என்பர் (46 : 51, 52). முற்காலத் தொல்காப்பியர், பிற் காலத் தொல்காப்பியர் என இருவர் வாழ்ந்திருக்கலாம் என்றும் அவர் கருதுவர் (47:2). கமில் சுவலபில் தொல்காப்பியத்தில் பல் வேறு காலகட்டங்களில் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட பகு திகள் உள்ளன என்பர். தொல்காப்பியத்தின் ஆரம்ப மூலவடிவம் கி. மு. 1 அல்லது 2ஆம் நூற்றுண்டுக்கு உரியதாய் இருக்கலாம் என் றும் பின்வந்த இலக்கண ஆசிரியர்களால் காலத்துக்குக் காலம் இதன் கருத்துக்கள் வளர்க்கப்பட்டு கி. பி. 5ம் நூற்றுண்டுக்கு முன்னர் நமக்கு இன்று கிடைத்துள்ள இறுதி வடிவத்தைத் தொல்காப்பியம் பெற்றிருக்கலாம் என்றும் அவர் கருதுகிறுர் (41 : 147).

16. பெ. தூரனின் பாரதி தமிழ் நூலிலே தொகுத்துத் தரப்பட்டுள்ள வங் கமே வாழிய, வந்தேமாதரம், என்னே கொடுமை, எனது தாய் நாட்டின் முன்னுட் பெருமையும் இன்னுட் சிறுமையும், யான், சந் திரிகை முதலிய பாரதியின் கவிதைகளிலே இப் பண்பினைக் காணலாம். இவை யெல்லாம் 1905, 1906ம் ஆண்டுகளில் எழுதப்பட்டவை. இவற்றுட் சில பாடல்களுக்குப் பாரதியே சில அரும்பத விளக்கம் கொடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

17. ''இப்போது உலக முழுவதிலுமே ராஜாக்களையும் பிரபுக்களையும் நம்பி வித்தை பழகும் காலம் போய்விட்டது. பொது ஜனங்களை நம்ப வேண் டும். இனிமேல் கலைகளுக் கெல்லாம் போஷணையும் ஆதரவும் பொது ஜனங்களிட மிருந்து கிடைக்கும். அவர்களுக்கு உண்மையான அபிருஷி உண்டாக்கிக் கொடுப்பது வித்வான்களுடைய கடமை...... ஊரையே யஜமாஞகக் கொள்ள வேண்டும். ஊர்தான் ராஜா. இந்த ராஜா வுக்கு ஆரம்பத்திலே கொஞ்சம் ஞானம் அளித்துப் பழக்கங் கொடுத் தால் வித்தைகளுக்கு எந்த விதமான குறைவும் ஏற்படாது.'' என்பது பாரதியின் கூற்று (16 : 158-159).

18. ''19ம் நூற்ருண்டு நவீன உரை நடை இயக்கமும் ஆறுமுக நாவலரும்'' என்ற தலைப்பில் நான் எழுதிய கட்டுரை ஒன்றில் இது பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறை 1980ல் நாவலர் நூற்ருண்டு தொடர்பாக நடத்திய கருத்தரங் கொன்றில் இது வாசிக்கப்பட்டது. இன்னும் பிரசுரமாகவில்லை.

19. பாரதியின் மொழி நடை பற்றிய விரிவான ஆய்வுகள் எதுவும் இது வரை மேற்கொள்ளப் படவில்லை. ருஷ்ஷிய நாட்டுத் தமிழ் அறிஞர் ஆந்திரனேவ் ''பாரதியின் தமிழில் வாக்கிய அமைப்புக்கள்'' என்று ஒரு சிறு கட்டுரை எழுதியுள்ளார் (2 : 27-32). இத்துறையில் இதுவே முதன் முயற்சி எனலாம். இது மேலும் விரிவாக ஆராயப்பட வேண்டும். தற்காலத் தமிழ் உரைநடையில் ஆங்கில வாக்கிய அமைப்பின் செல்வாக்கை நாம் அவதானிக்கவே செய்கின்ருேம். இதுவும் விரிவாக ஆராயப்பட வேண்டியதே.

20. தமிழ்ச் சொற்களில் இடம் பெறும் /l/ வையும் ஜப்பானியர் /r/ வாகவே உச்சரிக்கின்றனர். சிலகாலம் ஜப்பானில் வாழ்ந்த பேராசிரியர், கா. இந்திரபாலா, தனது பெயரை ஜப்பானியர் இந்திரபாரு என்றே உச்சரித்ததாக ஒரு முறை கூறினர். எனது தமிழ் நண்பர் ஒருவரின் ஜப்பானிய மனைவி பால் என்னும் சொல்லை எப்போதும் பாறு என்றே உச்சரிக்கக் கேட்டுள்ளேன்.

21. பாரதி வகுத்த புதிய எழுத்துக் குறியீடுகள் எவ்வாறு இருந்தன என்று நமக்குத் தெரியாது. எனினும் பொன். கோதண்டராமன் பாரதியின் கோட்பாட்டுக்கு இணங்க சில ஆண்டுகளுக்கு முன்னர் சில புதிய குறியீடுகளை வகுத்துக் காட்டியுள்ளார். அவர் வகுத்துள்ள குறியீடுகள் பின்வருமாறு

க k	ச c	ட ṭ	த t	ப p
०க g	०ச J	०ட ḍ	०த d	०ப b
ஃக h	ஃச s			ஃப f

''o என்ற குறி எடுப்பொலியைக் குறிப்பதாகவும் ஃ என்ற குறி உரசொலியைக் குறிப்பதாகவும் கொள்ளலாம் Giri என்பதைக் ०கிறி

என்று எழுதலாம் Balu என்பதை ०பாலு என்றும் bus என்பதை ०பஃச் என்றும் எழுதலாம்'' என அவர் விளக்கமும் கொடுத்துள்ளார் (10:49).

கவிஞர் முருகையனும் இதையொத்த குறியீடுகளை கையாண்டு வருகிறார். அவரது நெடும்பகல் காவியத்தின் இரண்டாம் பதிப்பிலே பின்வரும் புதிய ஒலிக்குறிகள் தரப்பட்டுள்ளன. ०க்=g, ०ப்=b. இக்குறிகளைப் பயன்படுத்தி ०கெறெற், உயிர்ப்பெ०பிலிற்றி போன்ற சொற்கள் எழுதப்பட்டுள்ளன. (32:20,25) இத்தகைய முயற்சிகள் மூலம் பாரதியின் எண்ணம் தற்காலத்தில் நிறைவேறுகின்றது எனலாம்.

22. பல்வேறு மொழிப் பிரிவினர் வாழும் ஒரு நாட்டில் பொதுத் தகவல் தொடர்புக்குப் பயன்படும் ஒரு குறிப்பிட்ட மொழியே பொதுத் தொடர்பு மொழி (Common language) அல்லது இணைப்பு மொழி (link language) எனப்படுகின்றது. இதற்கு அரசியல் அங்கீகாரம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் பல மொழி பேசப்படும் ஒரு நாட்டில் ஆட்சித்துறை நிருவாகத் தொடர்புகளுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட மொழி அல்லது மொழிகள் ஆட்சி மொழி (official language) எனப்படுகின்றது. இது கட்டாயமானதும் அரசியல் சாசனத்திலும் சட்டத்திலும் சிறப்புரிமைகள் பெற்றதுமாகும். எனினும் ஒரு ஆட்சி மொழியே பொதுத் தொடர்பு மொழியாகவும் இருக்கலாம். உதாரணமாக இந்தியாவில் ஆங்கிலம் ஆட்சி மொழியாகவும் பொதுத் தொடர்பு மொழியாகவும் உள்ளது. இந்திய அரசியல் சாசனத்தில் ஹிந்தி ஆட்சி மொழியாகப் பிரகடனப் படுத்தப் பட்டிருந்தாலும் எல்லா மாநிலங்களிலும் அது இன்னும் ஏற்றுக் கொள்ளப் படவில்லை. அது ஏற்றுக்கொள்ளப் படினும் இப்போதைக்கு இந்தியாவின் பொதுத் தொடர்பு மொழியாக அது வளருமா என்று கூற முடியாது. அது போல் ஆட்சி மொழி பொதுத் தொடர்பு மொழி அல்லாமலும் இருக்கலாம். இலங்கையிலே சிங்களம் ஆட்சி மொழியாக இருப்பினும் அது ஒரு பொதுத் தொடர்பு மொழியல்ல. மறு வகையிலே ஒரு பொதுத் தொடர்பு மொழி ஆட்சி மொழியாக இல்லாமலும் இருக்கலாம். உதாரணமாக சோவியத் நாட்டிலே ருஷ்ய மொழி பொதுத் தொடர்பு மொழியாக உள்ளது. ஆனால் அது ஆட்சி மொழியல்ல. சோவியத் ருஷ்யாவில் ஆட்சி மொழி என்று ஒன்று இல்லை. ''கட்டாயமான ஆட்சி மொழி என ஒன்று இருக்கக் கூடாது'' என்பது லெனினின் கருத்தாகும் (40:22).

23. இக்கட்டுரையைப் பதிப்பித்த ரா. அ. பத்மநாபன் சுதேச மித்திரனில் அது வெளிவந்த திகதியைக் குறிப்பிடவில்லை. ஆயினும் பெ. தூரனின் பாரதி தமிழ் நூலிலே (பக். 282) இடம் பெற்றுள்ள ''எளிதாக சம்ஸ்கிருதம் படிக்கும் வழி'' என்ற பாரதியின் கட்டுரையிலே இந்தியாவுக்கு பொது பாஷை'' என்ற தலைப்பிலான கட்டுரை 1921 ஜனவரி 11ம் திகதி சுதேச மித்திரனில் ஒளிர் மணிக் கோவை என்ற மகுடத்தின் கீழ் வெளிவந்ததாகப் பாரதி குறிப்பிடுகின்றான். ஆனால் இக் குறிப்பு இடம் பெறும் ''எளிதாகச் சம்ஸ்கிருதம் படிக்கும் வழி'' என்ற கட்டுரை வெளிவந்த திகதி 1920 ஜனவரி 21 என்று தூரன் கொடுத்துள்ளார். இவ் விரு திகதிகளில் ஒன்று தவறாக இருக்கவேண்டும்.

உசாத்துணை நூல் விபரம்

1 அண்ணாமலை, இ. ''எளிமையாக்கம் : புதுமை யாக்கத்தின் ஒரு முறை'' மொழியியல் 4. அண்ணாமலை நகர், 1980.

2 ஆந்திரனோவ், எம். எஸ். ''பாரதியின் தமிழில் வாக்கிய அமைப்புக்கள்'' மஹாகவி பாரதி பற்றி சோவித் அறிஞர்கள். சென்னை. 1982.

3 ஆறுமுகநாவலர். பாலபாடம் நான்காம் புத்தகம். சென்னை. 1969.

4 — திருத்தொண்டர் பெரியபுராண வசனம். 17-ம் பதிப்பு, சென்னை. 1950.

5 இரத்தினம், இ. மன்னன் ஈடிபசு. கொழும்பு. 1969.

6 கணபதிப்பிள்ளை, தெ. மு. மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும். சென்னை. 1967.

7 கைலாசபதி, க. ஒப்பியல் இலக்கியம். சென்னை. 1969.

8 — அடியும் முடியும் சென்னை. 1970.

9 — பாரதி நூல்களும் பாடபேத ஆராய்ச்சியும். சென்னை- 1980.

10 கோதண்டராமன், பொன். செந்தமிழ். சென்னை. 1974.

11 சண்முகம், செ. வை. எழுத்துச் சீர்திருத்தம். அண்ணாமலைநகர். 1978.

12 — ''மொழி உணர்வு'' புலமை. தொகுதி 3, பகுதி 2 சென்னை. ஜுன் 1977.

13 சிவஞானம், ம. பொ. விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு. சென்னை, 1970.

14 சிவத்தம்பி, கா. தனித்தமிழ் இயக்கத்தின் அரசியல் அடிப்படைகள். சென்னை. 1979.

15 சீனிவாச வர்மா, கோ. இனமொழியியல். அண்ணாமலை நகர். 1977.

16 சுப்பிரமணிய பாரதி, சி. மகாகவி பாரதியார் கட்டுரைகள். அருணா பதிப்பகம் மதுரை. 1964.

17 — பாரதியார் கவிதைகள். மெர்குரி புத்தகக் கம்பனி. கோயம்புத்தூர். 1968.

18 — பாரதியார் கதைகள். பூம்புகார் பிரசுரம், சென்னை. 1977.

19 சூரிய நாராயண சாஸ்திரியார், வி. கோ. தமிழ்மொழி வரலாறு. மதுரை. 1932.

20 செல்வநாயகம், வி. தமிழ் உரைநடை வரலாறு. சென்னை. 1957.

21 தாமோதரம் பிள்ளை, சி. வை. தாமோதரம். யாழ்ப்பாணம். 1971.

22 தூரன், பெ. பாரதி தமிழ். சென்னை. 1953.

23 பத்மநாபன், ரா. அ. பாரதி புதையல் 1. சென்னை. 1958.

24 — பாரதி புதையல். 2 சென்னை. 1959.

25 பரந்தாமனர், அ. கி. நல்ல தமிழ் எழுத வேண்டுமா. சென்னை. 1972

26 பரமசிவானந்தம், அ. மு. பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ் உரை நடை வளர்ச்சி. சென்னை. 1966.

27 புத்ததேவ வஸு ''ரவீந்திரரின் கட்டுரையும் உரைநடையும்'' ரவீந்திரர் கட்டுரைத் திரட்டு. தொகுதி 2. புதுதில்லி. 1960.

28 மணி, பெ. சு. பாரதியாரும் தமிழ்ப் புலவர்களும். சென்னை. 1981.

29 மணியன், இளசை. பாரதி தரிசனம் 1. சென்னை. 1975.

30 — பாரதி தரிசனம் 2. சென்னை. 1977.

31 முத்துச் சண்முகன். இக்காலத் தமிழ். 3-ம் பதிப்பு. மதுரை. 1977.

32 முருகையன், நெடும்பகல். 2-ம் பதிப்பு. சாவகச்சேரி. 1981.

33 வரதராசன், மு. வ. மொழி வரலாறு. சென்னை. 1961.

34 வையாபுரிப் பிள்ளை, எஸ். தமிழ்ச் சுடர் மணிகள். சென்னை. 1959.

35 — சொற்கலை விருந்து. சென்னை. 1956.

36. Brass, Paul, R. **Language, Religion and Politics in North India.** Cambridge University Press. 1974.

37 Frank Palmer. **Grammar**. Pelican. 1972.

38 From Kin/Rodman. **An Introduction to Language.** New York. 1974.

39 Hockett, C. F. **A Course in Modern Linguistics.** Oxford & IBH New Delhi. 1970.

40 Isayev, M. I. **National Languages in the USSR: Problems and Solution.** Moscow. 1977.

41 Kamil Zvelabil, **The Smile of Murugan.** Netherlands. 1973.

42 Kondratov, A. **Sounds and Signs**. Moscow. 1969.

43 Lehman, W. P. **Historical Linguistics: An Introduction.** Oxford & IBH, New Delhi 1966.

44 Meenakshisundaran, T. P. **Papers on Linguistics and Literature** Annamalai Nagar. 1965.

45 — "Language Planning" in **Proceedings of the First All India Conference of Dravidian Linguistics.** Ed. Subramaniyam V. I. Trivandruam. 1972.

46 — **History of Tamil Language,** Poona. 1965.

47 — **Foreign Models in Tamil Grammar,** Trivandrum. 1974.

48 Shanmugam, S. V. "Modernization in Tamil" in **Annals of Oriental Research Silver Jubilee Volume.** University of Madras.

49. Vijaya Venugopal, G.A. **Modern Evaluation of Nannul.** Annamalinagar. 1968.

பின்னிணைப்பு

பாரதியின் மொழிச் சிந்தனைகள்

மொழிபற்றிய
பாரதியின் கவிதைகளும் கட்டுரைகளும் குறிப்புக்களும்
இயன்றவரை இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன

34 [illegible] 1966
35 [illegible] Dept. in Madras [illegible] 1956
36 Brass, Paul R. Language, Religion and Politics in North India. Cambridge University Press, 1974.

37 Frank Palmer, Grammar, [illegible] 1972.

38 From Kindergarten [illegible] New York, [illegible]

39 Hockett C. F. A Course in Modern Linguistics. Oxford & IBH New Delhi, 1970.

40 Isaev, M. I. National Languages in the USSR: Problems and Solutions. Moscow, 1977.

41 Kamil Zvelebil, The Smile of Murugan, Netherlands, [illegible]

42 Kondratov, A. Sounds and Signs. Moscow, [illegible]

43 Lehmann, W. P. Historical Linguistics: An Introduction. Oxford & IBH New Delhi 1969.

44 Meenakshisundaram, T. P. Papers on Linguistics and Literature. Annamalai Nagar, 1965.

45 — "Language Planning" in Proceedings of the First All India Conference of Dravidian Linguistics. Ed. [illegible] Trivandrum, 1972.

46 — History of Tamil Language. Poona, 1965.

47 — Foreign Models in Tamil Grammar. Trivandrum, 1974.

48 Shanmugam, S. V. "Modernization in Tamil" in Journal of Oriental Research Silver Jubilee Volume, University of Madras.

49 Vijaya Venugopal, G. A. Modern Evaluation of Tamil. Annamalainagar, [illegible]

1. தமிழ்த்தாய்

தன் மக்களைப் புதிய சாத்திரம் வேண்டுதல்

ஆதிசிவன் பெற்று விட்டான் - என்னை
ஆரிய மைந்தன் அகத்திய னென்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே — நிறை
மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்.

மூன்று குலத்தமிழ் மன்னர் — என்னை
மூண்டநல் லன்பொடு நித்தம் வளர்த்தார்
ஆன்ற மொழிகளி னுள்ளே — உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்.

கள்ளையுந் தீயையுஞ் சேர்த்து - நல்ல
காற்றையும் வான வெளியையுஞ் சேர்த்து
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள் — பல
தீஞ்சுவைக் காவியஞ் செய்து கொடுத்தார்.

சாத்திரங்கள் பல தந்தார் - இந்தத்
தாரணி யெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்
நேத்திரங் கெட்டவன் காலன் - தன்முன்
நேர்ந்த தனைத்தும் துடைத்து முடிப்பான்.

நன்றென்றும் தீதென்றும் பாரான் — முன்பு
நாடும் பொருள்கள் அனைத்தையும் வாரிச்
சென்றிடும் காட்டுவெள் ளம்போல் — வையச்
சேர்க்கை யனைத்தையுங் கொன்று நடப்பான்.

கன்னிப் பருவத்தில் அந்நாள் - என்றன்
காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்ன வோபெய ருண்டு - பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்.

தந்தை அருள் வலியாலும் - முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணமட்டும் காலன் - என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்.

இன்றொரு சொல்லினைக் கேட்டேன் — இனி
ஏது செய்வேன்? என தாருயிர் மக்காள்?
கொன்றிடல் போலொரு வார்த்தை - இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!

''புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்:
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

சொல்லவும் கூடுவ தில்லை - அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்குமொழிகள் புவிமிசை யோங்கும்''

என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!
இந்த வசை எனக் கெய்திட லாமோ?
சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.

தந்தை யருள்வலி யாலும் — இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்
இந்தப் பெரும்பழி தீரும் — புகழ்
ஏறிப் புவிமிசை யென்று மிருப்பேன்.

2. தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒரு சொற் கேளீர்,
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

3. தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
யிசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே.

சூழ்கலி நீங்கித் தமிழ்மொழி யோங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே.

4. தமிழ்நாட்டு மாதருக்கு என்னும் கட்டுரையில் இருந்து:

தமிழ் நாட்டின் நாகரீகம் மிகவும் புராதனமானது. ஒரு தேசத்தின் நாகரீகம் அல்லது அறிவு முதிர்ச்சி இன்ன தன்மை உடையதென்று கண்டு பிடிக்க வேண்டுமாயின், அதைக் கண்ணாடிபோல் விளக்கிக் காட்டுவது அந்த நாட்டில் வழங்கும் பாஷையி லுள்ள இலக்கியம். அதாவது காவியம் முத லிய நூல்களேயாம். இங்கிலாந்து தேசத்தின் (தற்கால இலக்கிய நூல்களை வாசித்துப் பார்த்தோமேயானால் அதன்) தற்கால நாகரீகத்தை ஓரளவு அள விடக் கூடும். (திருஷ்டாந்தமாக ஆங்கிலேய நாகரிகத்துக்கு சேக்சுபியர் முதலிய மகா கவிகளின் நூல்களே அளவுக் கருவியாகக் கருதப்படுகின்றன.) எனவே, தமிழ் நாட்டின் புராதன நாகரீகத்தை அளவிட் டறிவதற்கு தமிழ் நூல்களே தக்க அளவுகோலாகின்றன. இந்தியாவில் பெரும்பான்மையான பாஷைகள் ஸம்ஸ்கிருதத்தின் திரிபுகளே யன்றி வேறல்ல. அங்ஙனம் திரிபுக ளல்லாததும் ஸம்ஸ்கிருதக் கலப்புக்குப் பிந்தியே மேன்மை பெற்றனவாம்.

தமிழ் பாஷைக்கோ, இலக்கணம் முதன்முதலாக அகஸ்தியராலும் அவருடைய சிஷ்யராகிய திரணதுமாக்நி (தொல்காப்பியர்) என்ற ஆரிய முனிவராலுமே சமைத்துக் கொடுக்கப்பட்ட தென்பதும் மெய்யே. அதனின் றும் தமிழ் இலக்கணம் பெரும்பாலும் ஸம்ஸ்கிருத இலக்கணத்தை அனு சரித்தே சமைக்கப் பட்டிருக்கிற தென்பது மெய்யே. எனினும், வடமொழிக் கலப்புக்கு முந்தித் தமிழுக்கு வேறுவகையான இலக்கணமிருந்து ஒருவேளை பின்னிட்டு மறைந்திருக்கக் கூடுமென்று நினைப்பதற்குப் பல ஹேதுக்கள் இருக்கின்றன. இஃது எவ்வாறாயினும், ஸம்ஸ்கிருத பாஷையின் கலப்புக்கு முன்னாகவே தமிழ் நாட்டில் மிகவும் உயர்ந்த நாகரீகமொன்று நின்று நிலவி வந்த தென்பதற்கு அடையாளமாகத் தமிழில் மிக உயர்ந்த தரமுடைய பல பழைய இலக்கிய நூல்கள் காணப்படுகின்றன.

ஐரோப்பாவிலும், ஆசியாவிலும், பிற இடங்களிலும் காணப்படும் நாகரிகங்களுக் கெல்லாம் முந்தியதும் பெரும்பான்மை மூலாதாரமுமாக நிற்பது ஆர்ய நாகரிகம். அதாவது பழைய சமஸ்கிருத நூல்களிலே சித்தரிக்கப்பட்டு விளங்குவது. இந்த ஆரிய நாகரிகத்துக்குச் சமமான பழமை கொண்டது தமிழருடைய நாகரிகம் என்று கருதுவதற்குப் பலவிதமான ஸாக்ஷ்யங்க ளிருக்கின்றன. 'ஆதியில் பரமசிவனால் படைப்புற்ற மூலப் பாஷைகள் வடமொழி யென்று சொல்லப்படும் சம்ஸ்கிருதமும் தமிழுமேயாம்' என்று பண்டைத் தமிழர் சொல்லியிருக்கும் வார்த்தை வெறுமே புராணக் கற்பனையன்று. தக்க சரித்திர ஆதாரங்களுடையது. 'தமிழரும் ஆரியரு மல்லாத ஜனங்களைக் கடவுள் பேச்சில்லாமலா வைத்திருந்தார்?' என்று கேட்பீர்களாயின், மற்றச் சொற்களும் பல இருக்கத்தான் செய்தன. ஆனால், மனித நாகரீகத்தில் முதல்முதலாக இவ்விரண்டு பாஷைகளிலேதான் உயர்ந்த கவிதையும், இலக்கியங்களும், சாஸ்திரங்களும் ஏற்பட்டன. மற்றப் பாஷைகளின் இலக்கிய நெறிகள் இவற்றுக்குப் பின்னே சமைந்தன. பல இடங்களில் இவை இயற்றின நடையையே முன்மாதிரியாகக் கொண்டன. அதாவது ஆரியரும் தமிழருமே உலகத்தில் முதல்முதலாக உயர்ந்த நாகரீகப் பதவிபெற்ற ஜாதியார்... (16 : 194-195)

(அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ள பகுதிகள் மஹாகவி பாரதியார் கட்டுரைகள் என்னும் நூலில் விடுபட்டுப் போயுள்ளன. பாலா எழுதிய பாரதியும் கீட்சும் (அன்னம் சிவகங்கை 1982-பக். 7) என்னும் நூலில் தரப்பட்ட மேற்கோளில் இருந்து அவை இங்கு எடுத்தாளப் பட்டுள்ளன.)

5. தென்றலுடன் பிறந்த பாஷை:

"தமிழ்ப் பாஷையின் இனிமை" என்ற தலைப் பெயருடன் சென்னை 'சுதேச மித்திரன்' பத்திரிகையிலே இனியதோர் குறிப்பு எழுதப் பட்டிருக்கின்றது. அதனை மற்றோரிடத்திலே எடுத்துப் பிரசுரித் திருக்கின்றோம். தென்றலுடன் பிறந்த தமிழ் மொழியின் இனிமையைப் பற்றி டாக்டர் ஜி. யு. போப் என்னும் புகழ்பெற்ற விற்பன்னர் கொண்டிருக்கும் மதிப்பை அதில் எடுத்துக் காட்டியிருப்பது தமிழர்கள் அனைவரும் கண்டு மகிழத் தக்கதாக இருக்கின்றது. ஆங்கிலப் பெண்களின் இதழ் நயத்திற்கும், செவி நுட்பத்திற்கும் அபிருசிக்கும் தமிழைப் போன்ற பொருத்தமுடையது வேறெந்தப் பாஷையும் இல்லையென்று போப் கூறுகிறார். தற்காலத்திலே நம் நாட்டவர்கள் நமது அருமைத் திருமொழியின் சுவையை வளர்க்க முயலாமல் அதன் இன்பமெல்லாம் பாழாக விட்டிருப்பதைப் பற்றி மேற்படி குறிப்பெழுதியவர் மிகுந்த கோபமுணர்த்தி யிருக்கிறார். நாம் அந்த விஷயங்களில் நமக்கேற்பட்டிருக்கும் அன்புகளைப் பல வாரங்களின் முன்பு ஒருதடவை விஸ்தாரமாக எழுதியிருக்கிறோம்.

பொறுப்பென்பதே அற்ற சில மூட வாலிபர்கள் தாம் அரைகுறையாகக் கற்றிருக்கும் அன்னிய பாஷைத் தருக்கு மேலிட்டவர்களாகித் தமிழ் மொழியே இறந்துபோய்விட வேண்டுமென்றும் கூறுவதை நன்கு கண்டித்துப் பேசியிருக்கின்றேம். இவர்கள் கிடக்க, மற்றப்படி பொதுவாக இந்நாட்டில் ஆங்கிலம் கற்றேரெல்லாம் சுபாஷாபிமானம் என்பது மிகவும் குன்றியிருப்பதும் அன்றி, அதன் நயமறியாது திட்டுவதை நினைக்கும் பொழுது நமக்கு வருத்த முண்டாகிறது. இதன் சம்பந்தமாகச் சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய மஹா வித்வான் சுவாமிநாதையர் சொல்லிய வார்த்தை யொன்று நமது நெஞ்சை விட்டு ஒருபோதும் அகலமாட்டாது. மேற்படி காலேஜ் தமிழ்ச் சங்கத்தில் ஒரு 'மீட்டிங்' நடந்தது. தமிழ்ப் பாஷையின் அருமையைப் பற்றி ஏதோ பிரஸ்தாபம் வந்தது. அப்போது சுவாமிநாதைய ரவர்கள் எழுந்து பின்வருமாறு பேசினர்: "ஆங்கிலேய பாஷையின் இலக்கிய நூல்களில் எத்தனையோ அருமையான கருத்துக்கள் ததும்பிக் கிடப்பதாகச் சொல்கிறுர்கள். அந்தப் பாஷை எனக்குத் தெரியாது. அதனுல் அவ்விஷயத்தில் ஒரு விதமான அபிப்பிராயமும் என்னுல் கொடுக்க முடியாது. என்றபோதிலும் மேற்கண்டவாறு சொல்வோர் தமிழ்ப் பாஷையிலே அவ்விதமான அருமையான விஷயங்கள் கிடையாவென்று சொல்லும் பொழுது உடன் எனக்கு வருத்த முண்டாகிறது. இவ்வகுப்பினருடன் நான் எத்தனை முறையோ சம்பாஷணை செய்திருக்கிறேன். அந்தச் சமயங்களிலே நான் இவர்களது தமிழ் வன்மையைப் பரிசோதனை புரிந்திருக்கிறேன். இவர்கள் அத்தனை சிறந்த பண்டிதர்களென்று எனக்குப் புலப்படவில்லை. பழங் காலத்துத் தமிழ் நூல்களிற் பயிற்சியில்லாத இவர்கள் அவற்றைப் பற்றி இழிவான அபிப்பிராயம் கொடுப்பதுதான் வெறுக்கத் தக்கதாக இருக்கிறது" என்று அப்பண்டிதர் முறையிட்டார். வாஸ்தவந்தானே? ஆனையையே பார்த்திராத குருடன் அதன் நிறம் முதலியவற்றைப் பற்றி ஓர் அபிப்பிராயம் கொடுக்க வேண்டும்? "போப் முதலான விற்பன்னர்கள் இவர்கள் இருக்கும் திசைநோக்கிக் காறியுமிழும் வண்ணமாக" நம்மவர்களிற் சிலர் நடந்து கொள்கிறுர்களென்று மேற்கூறப்பட்ட 'சுதேச மித்திரன்' குறிப்பில் எழுதப் பட்டிருப்பதை நாம் முற்றும் அங்கீகாரம் செய்கிறேம்.

"சுதேச மித்திர"னில் வெளிவந்த குறிப்பு வருமாறு:

6. தமிழ் பாஷையின் இனிமை

(மித்திரன்' 1906 ஸெப்டம்பரில் வெளிவந்த குறிப்பு)

பாற்கடலிலே பிறந்த மீன்கள் பாலைப் பெரிதாகப் பாராட்டுவது வழக்கமே கிடையாதென்பது நெடுங்காலமாக வழங்கிவரும் உண்மையாகும். அவ்வசனக் கருத்து முற்றும் மெய்யென்பதற்குச் சிறிது காலத்தின் முன்பு டாக்டர் போப்பையர் லண்டனில் ராயல் ஏஷியாடிக் சபையார் முன்பு

செய்த உபந்நியாசத்திலே நல்லதோர் திருஷ்டாந்தம் அகப்பட்டது. திருக்குறள், திருவாசகம் என்னும் தெய்வீக நூல்களை இங்கிலீஷில் மொழி பெயர்த்தவரும், அநேக இலக்கண நூல்கள் பிரசுரித்திருப்பவரும் ஆகிய டாக்டர் போப்பைத் தமிழ் நாட்டாரில் பெரும் பான்மையோர் நன்கு அறிவார்கள். இவர் சொல்கிறார்: " அநேகர் (அதாவது, அநேக ஆங்கிலேயர்கள்) பிரெஞ்சு, ஜெர்மன், இடாலியன் முதலிய பாஷைகளைப் போய்ப் படித்துக்கொண்டு இடர்ப்படுகிறார்கள். இப்படிச் செலவிடப்படும் காலத்தைத் தமிழ் கற்பதில் செலவிட்டால் எவ்வளவோ விசேஷமாகும். நான் அநேக (ஆங்கில) மாதர்களுக்குத் தமிழ் கற்பித்திருக்கிறேன். அவர்களுடைய இதழ் நயத்திற்கும், செவி நுட்பத்திற்கும் அபிருசிக்கும் அந்தப் பாஷையைப் போல் எந்தப் பாஷையும் ஒத்து வருவதில்லை " என்றார். இவர் தமிழ்ப் பாஷையின் இனிமையையும் பெருமையையும் குறித்து எவ்வளவோ சிலாக்கியமாகப் பேசியிருக்கிறார். ஆனால், தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்த நம்மவர்களோ அந்தப் பாஷையின் இனிமையைப் பாதுகாக்க வேண்டுமென்றேனும், அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றேனும் சிறிதும் முயல்வதில்லை.

தமிழ் மட்டும் தெரிந்த சனங்களிற் சிறுபாலார் தமிழ் விஷயத்தில் ஒருவிதமான மூடப் பக்தியாவது வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஆங்கிலம் கற்றுணர்ந்தவர்கள் இவ்விஷயத்தில் தமது கடமையை முற்றும் மறந்து விடுகிறார்கள். இவர்கள் தமிழ்ப்பாஷை விஷயத்தில் கொண்டிருக்கும் எண்ணத்தையும் இவ்விஷயத்தில் இவர்கள் வகிக்கும் அசிரத்தையையும் டாக்டர் போப்பைப்போன்ற ஆங்கிலேயர்கள் அறியும் பட்சத்தில் இவர்கள் இருக்கும் திசையை நோக்கிக் காறியுமிழும் வண்ணமாக நம்மவர்கள் நடந்து கொள்கிறார்கள். (21 : 63-65)

7. தமிழ்

கல்கத்தாவி லிருந்து வெளிப்படும் 'மாடன் ரெவ்யூ' என்ற மாதப் பத்திரிகையின் தை-மாசி சஞ்சிகையை நேற்றுப் பொழுதுபோக்கின் பொருட்டாகத் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதிலே திருநெல்வேலி, இந்து காலேஜ் சரித்திர பண்டிதர் ஸ்ரீ நீலகண்டையர் ஒரு சிறிய கடிதம் எழுதியிருக்கிறார். ஏற்கனவே மேற்படி பத்திரிகையில் ஸ்ரீ யதுநாத ஸர்க்கார் என்ற வித்துவான் எழுதியிருந்த சில வார்த்தைகளைக் குறித்து ஸ்ரீ ஐயர் தமது கருத்துக்களை வெளியிடுகிறார்.

கலாசாலையிலே சரித்திரப் பாடங்களை இங்கிலீஷில் கற்றுக் கொடுப்பது பயனில்லாத வீண் தொல்லையாக முடிகிற தென்றும் தேச பாஷைகளிலே கற்றுக் கொடுத்தால் நல்ல பயன் விளையு மென்றும் ஸ்ரீ ஸர்க்கார் தமது அனு

பவத்திலே கண்ட செய்தியைச் சொன்னார். அதற்கு நமது திருநெல்வேலிப் பண்டிதர் சொல்கிறார் : ''பாஷைத் தொல்லை பெருந் தொல்லையாகவே இருக்கிறது. ஆனால் எனது ஜில்லா, எனது காலேஜ் சம்பந்தப்பட்ட வரையிலே பிள்ளைகளுக்குச் சரித்திர பாடம் இங்கிலீஷிலே கற்றுக் கொடுப்பதைக் காட்டிலும், தேச பாஷையில் கற்றுக் கொடுப்பது அதிக பயன்படுமென்று சொல்வதற் கில்லை. எனது மாணுக்கர்களிலே பெரும்பாலோர் இங்கிலீஷ் இலக்கணப் பிழைகளும் வழக்குப் பிழைகளும் நிறையச் செய்த போதிலும் மொத்தத்திலே தமிழைக் காட்டிலும் இங்கிலீஷை நன்றாக எழுதுகிறார்கள். சரித்திர விஷயங்களை வியவஹாரிக்கும் போது எனக்கும் இங்கிலீஷ்தான் தமிழைக் காட்டிலும் நன்றாகச் சொல்ல வருகிறது.''

இங்ஙனம் எழுதுகிற ஸ்ரீ நீலகண்டையரின் நிலைமையை நினைத்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். சொந்தப் பாஷையை நேரே பேசத்தெரியாதவர்கள் சாஸ்திர பாடங்கள் நடத்தும் விநோதத்தை இந்தத் தேசத்திலேதான் பார்த்தோம். புதுமை! புதுமை!! புதுமை!!!

மேலும் இவர் தமக்குத் தாய்மொழி தெரியாதென்ற செய்தியை வங்கப் பத்திரிகைக்கு ஏன் எழுதப்போனார் என்பது எனக்கு அர்த்தமாகவில்லை. ஜப்பானியர், சீனர், நார்வேக்காரர், ஷ்விஸ் ஜாதியார், இத்தாலி தேசத்தார், ஹாலந்துக்காரர் முதலிய உலகத்து ஜாதியாரெல்லாம் நம்மை அறிவிலும், சாஸ்திரங்களிலும், பாஷைத் திறமையிலும் தாழ்வென்று நினைத்து வந்தார்கள். இப்போதுதான் ஹிந்து ஜாதியாராகிய நாம் காட்டு மனிதரில்லை, வாலில்லாக் குரங்குகளில்லை. நமக்குப் பாஷைக ளிருக்கின்றன. நமக்குள்ளே சாஸ்திர விற்பன்னர்கள் இருக்கிறார்கள். கவிகள் இருக்கிறார்கள் என்று நம்மவரிலே சிலர் வெளியுலகத்தார் தெரிந்து கொள்ளும்படி செய்து வருகிறார்கள். இதற்குள்ளே தமிழ் வகுப்பு மற்ற ஹிந்துஸ்தானத்து வகுப்புக்களைக் காட்டிலும் குறைவுபட்டதென்று நம்மிலே சிலர் முரசடிக்கத் தொடங்குவது எனக்கு நகைப்புண்டாக்குகிறது.

என்னுடைய சொந்த அபிப்பிராயத்தைக் கொஞ்சம் சொல்லி விடுகிறேன்.

உலகத்திலுள்ள ஜாதியர்களிலே ஹிந்துஜாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிக்குத் தமிழராகிய நாம் சிகரம்போல் விளங்குகிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப்போல வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமே யில்லை.

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கி இருந்ததையும் நானறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் ஸத்யமில்லை. நாளை வரப்போவது ஸத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள். அதுவரையில் இங்கு பண்டிதர்களாக இருப்போர் தமக்குத் தமிழ்ச்சொல் நேரே வராவிட்டால் வாயை மூடிக்கொண்டு வெறுமே இருக்கவேண்டும். தமிழைப் பிறர் இழிவாகக் கருதும் படியான வார்த்தைகள் சொல்லா திருக்க வேண்டும். இவ்வளவு தான் என்னுடைய வேண்டுகோள். (22 : 101-104)

8. தைரியம் என்னும் கட்டுரையில் இருந்து :

நம் முன்னோர்களும் அவர்களைப் பின்பற்றி நாமுங் கூடப் புண்ணிய பாஷையாகக் கொண்டாடி வரும் ஸமஸ்கிருத பாஷை மிகவும் அற்புதமானது. அதைத் தெய்வ பாஷையென்று சொல்வது விளையாட்டன்று. மற்ற சாதாரண பாஷைகளை யெல்லாம் மனித பாஷையென்று சொல்லுவோமானால், இவையனைத்திலும் சிறப்புடைய பாஷைக்குத் தனிப்பெயர் ஒன்று வேண்டுமல்லவா ? ஆதன் பொருட்டே அதைத் தெய்வ பாஷை யென்கிறோம்.

அந்தப் பாஷையில் தைரியம் என்பதோர் சொல் உண்டு. தீரனுடைய இயற்கை தைரியம். தீரன் என்ற வார்த்தையின் தாதுப் பொருளைக் கவனிப்போமானால் அறிவுடையவன் என்ற அர்த்தமாகும். துணிவுடையவனுக்கும் அந்தப் பாஷையிலே அதுவே பெயராக வழங்கப்படுகிறது. எனவே, 'தைரியம்' என்ற சொல் அறிவுடைமை என்றும் துணிவுடைமை என்றும் இருவித அர்த்தங்கள் உடையது. இங்ஙனம் இவ்விரண்டு கருத்துக்களுக்கும் ஒரே சொல்லை வழங்குவது அந்தப் பாஷையின் பெருமைக்குள்ள சின்னங்களிலே ஒன்றாகும்.

உலகத்தில் வேறு எந்தப் பாஷையிலும் மேற்கூறிய இரண்டு கருத்துக்களையும் சேர்த்துக் குறிப்பிடக் கூடிய ஒரே பதம் கிடையாது. எந்த நாட்டினரைக் காட்டிலும் அதிகமாக யதார்த்தங்களைப் பரிசோதனை செய்து பார்த்த மகான்கள் வழங்கிய பாஷையாதலால், அந்தப் பாஷையிலே இவ்விரண்டு பொருள்களுக்கும் ஒரே பதம் அமைக்கப் பட்டிருக்கிறது.

(16 : 39-40)

9. ஆண்மை தவறேல் என்னும் கட்டுரையில் இருந்து :

நம் பாடசாலைகளிலே கல்வி பயிலும் மாணாக்கர்களைப் பற்றிப் பேசுவதற்கே அவமானமாக இருக்கின்றது. வாலிபர்களைக் கிழவர்களாக்கும் கல்வி முறைமை தற்காலத்துத் தர்ம ராஜாங்க மொன்றிலேதான் நடைபெறுகின்றது. இந்த வாலிபர்கள் எவ்விதமான ஆண்மையும் இல்லாமல் குமாஸ்தா வேலைக்குத் தகுதியும், அறிவிழந்த ராஜபக்தியும், வெள்ளைக்காரர்களிடம் பயமும் சுதேச சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் வெறுப்பும், தாய்ப் பாஷைகளிலே மகா சூனியமான பயிற்சியும் உடையவர்களாய், இத்தனை ஈன குணங்களுடன் இருக்கவேண்டு மென்ற நல்லெண்ணத்துடன் நமது தற்காலத்து இங்கிலீஷ் கல்வி முறையே நடைபெற்று வருகின்றது. முதுகெலும்பு வளைந்து கண்ணொளி மங்கிப்போய்க் கால் தள்ளாடிக் கையிலே வலியற்றுத் தமிழ் தெரியாதென்று சொல்வதும், கண்ணிலே வெள்ளெழுத்து விழுந்து விட்டதென்று சொல்வதுமே நாகரிகமெனப் பாராட்டும் இந்தப் பிள்ளைகளினாலா பாரதநாடு பிழைக்கப் போகின்றது? (24 : 98-99)

10. தமிழ் பாஷைக்குள்ள குறைகள் :

(ஒரு பி. ஏ. பரீட்சை தேறிய பிராமண வாலிபனுடைய எண்ணங்கள்)

வாலிபனுக்கும் புலவனுக்கும் சம்பாஷணை.

வாலிபன் : தமிழ் பாஷை ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை. இது சீக்கிரம் அழிந்தால்தான் நமது நாடு பிழைக்கும்.

புலவன் : ஏதப்பா, உனக்கு இந்த பாஷையிலே இவ்வளவு கோபம் உண்டாயிருக்கின்றது.

வாலிபன் : நவீன நாகரீகத்தினுடைய சங்கதி உமக்குத் தெரியாதய்யா. மனித ஜாதி குரங்கு நிலைமையினின்றும் மாறி, காட்டு மனிதன் ஸ்திதிக்கு வந்தபோது, உங்கள் தமிழ் பாஷை ஏற்பட்டது. இப்போது உலகம் எவ்வளவோ மாறிப்போய் விட்டது. மனிதருடைய அறிவு எவ்வளவோ விசாலமடைந்து போயிருக்கின்றது. வானத்திலுள்ள கிரகங்கள், நக்ஷத்திரங்கள் முதலியவற்றை யெல்லாம் மனித அறிவு ஊடுருவி சென்றிருக்கிறது. பதார்த்தங்களின் அணுக்களிலே யெல்லாம் மனுஷ புத்தி நுழைந்து சென்றிருக்கிறது. பிரகிருதி விநோதங்களை மனிதன் எவ்வளவோ அதிகமாக ஆராய்ச்சி செய்திருக்கிறான். சமுத்திரத்தின் ஜலமனைத்தையும் குடத்துக்

குள்ளே எப்படி அடைக்க முடியும்? அதுபோலவே, அளவின்றி விருத்தியடைந்திருக்கும் மனுஷ புத்தியின் நவீன சலனங்களையெல்லாம் உம்முடைய பண்டைக் காலத்து தமிழிலே கொண்டு நுழைப்பது மிகவும் பிராணபத்தாயிருக்கிறது. நாம் நாகரீகமடைய வேண்டுமானால் இந்த தமிழ் பாஷையை முற்றிலும் கைவிட்டு விடவேண்டும்.

புலவன் : 'நாம்' என்று யாரையப்பா சேர்த்து சொல்லுகிறாய்? உன்மட்டிலே நீ பேசுவதைப் பார்த்தால் ஞானக்கடலின் கரை கடந்தவனாகவே நினைத்துக் கொண்டிருக்கிறாய். உன்னைப்போல் இங்கிலீஷ் படியாத மற்ற ஜனங்கள் தமிழ் பாஷையை எப்படி கைவிட முடியும்? ஒரு பாஷையை நீ மரக்கிளையென்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா? அதை ஜனங்கள் பிடித்து தொத்திக் கொண்டு விடமாட்டோமென்று சொல்வதாக எண்ணுகிறாயா? மனுஷ பாஷைகள் மனுஷ வாழ்க்கையோடு ஒட்டி உடன் வளர்ந்த பொருள்கள் அல்லவோ? தலைமுறை தலைமுறையாய் எத்தனையோ நூற்றாண்டுகளாக ஒரு நாட்டார் பேசிவரும் பாஷை அவர்களின் உயிரோடு ஒன்றி விடுகின்றது மனித அறிவு வளர்ச்சிக்குப் பாஷை ஒரு கண்ணாடி. ஒரு நாட்டாரின் அறிவு வளர்ந்துகொண்டு வரவர, அந் நாட்டின் பாஷையும் விசாலமடைந்து வருகிறது. அன்னிய ராஜாங்கம், தரித்திரியம், சரீர பலக் குறைவு, நோய், உற்சாகமின்மை முதலிய காரணங்களால் இப்போது இழிவுகொண்டு போயிருக்கும் தமிழ்நாட்டு ஜனங்கள், ஆங்கிலேயர் முதலிய சுதந்திர நாட்டாரைப்போல் விருத்தியடைந்து வருதல் அசாத்தியமாக இருக்கிறது என்பது ஒருவாறு மெய்யாக இருக்கலாம். அதற்கு பாஷையை குற்றம் சொல்வதிலே என்ன பிரயோஜனமிருக்கிறது? ஆடத் தெரியாத தாசி கூடம் போதாதென்பதுபோல கதை சொல்லுகிறாயே?

வாலிபன் : போமையா! பொதுப்படையாக பேசிக்கொண்டு போவதிலே என்ன பயனிருக்கிறது? இப்போது ஐரோப்பியர்கள் பூமிநூல், வானநூல், கடல்நூல், பிராணிநூல், அணுநூல் முதலிய நூல்களிலே யெல்லாம் அளவு கடந்த முதிர்ச்சி பெற்றிருக்கிறார்கள். மின்சாரம், காந்தம் இவற்றின் குணதிசயங்களைப் பற்றி நவீன ஆராய்ச்சி வரம்பில்லாதிருக்கிறது. மின்சாரம், நீராவி என்பவற்றை துணையாக வைத்துக்கொண்டு மனித ஜாதியின் சவுகரியங்களுக்கும், அபிவிருத்திக்கும் பயன்படுமாறு ஆயிரக்கணக்கான எந்திரங்களும், கருவிகளும் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வளவிலே புதிய பதங்களும், புதிய கருத்துக்களும் லக்ஷக்கணக்காக உண்டாயிருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் தமிழ் பாஷையிலே பெயரும் கிடையாது, மண்ணும் கிடையாது. இப்படியிருக்க, நீர் ஏதோ பொதுப்படையாக உருட்டிக் கொண்டு போகிறீர்!

புலவன் : அடடா ! உனது விவகாரத்தின் நுட்பத்தை என்னவென்று சொல்லுவேன் ? நீ ஓயாமல் அடுக்கிக் கொண்டுபோன நவீன ஆராய்ச்சி கதைகளெல்லாம் தமிழ்நாட்டு ஜனங்களுக்குள்ளே வழக்கமான பிறகல்லவோ அவை தமிழ் பாஷையிலே வழக்கமாவதற்கு சுலபமாகும். தமிழ் நாட்டிலே பொது ஜனங்களுக்கு எழுதப் படிக்க தெரிவது கூட அருமையாய் இருக்கிறது. ராஜாங்கத்தார் பொதுஜன கல்விக்கு மிகவும் வெட்கக்கேடான சிறு தொகை செலவிடுகிறுர்கள். சிறுபான்மையோருக்கு தரப்படும் கல்விகூட அவர்களை குமாஸ்தாக்களாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் கொடுக்கப்படுவதேயன்றி வேறெவ்விதமான பெரும் தொழிலுக்கும் தகுதியாக்க தக்கதன்று. எனவே, இந்நாட்டார் பொதுவாக மிகவும் அறிவு சுருங்கிப் போயிருக்கிறுர்கள். இதற்கு பாஷை என்னசெய்யும் ? நீராவியால் ஓட்டப்படும் ரயில்வண்டி இந்நாட்டிலே வழக்கமாயிருக்கிறது. இப்போது பொதுஜனங்கள் அதற்கு வார்த்தை ஏற்படுத்திக் கொள்ளாமலாயிருக்கிறுர்கள். மின்சார சக்தியால் தந்தி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதற்கு தமிழர்கள் வார்த்தையுண்டாக்கிக் கொள்ள வில்லையா ? கோவணமில்லாத நிர்வாண தேசத்தாரின் பாஷையிலே, பட்டு அங்கவஸ்திரத்துக்குப் பெயர் கிடையாதென்றுல் அதற்கு அவர்களுடைய பாஷையின்மேல் என்ன குற்றமிருக்கிறது ? துணியைக்கொண்டு கொடுத்து வழக்கப்படுத்திஞல், முறையே வார்த்தைகளும் உண்டாக்கிக் கொள்வார்கள். தமிழ் நாட்டிலே தொழில் வகைப்பாடும் ஆலோசனை மிகுதியும் ஏற்பட்டால் தமிழ்ப் பாஷை அன்றைக்கே வளர்ந்து போய்விடும். இப்படிக்கின்றி இந்த பாஷையையே ஒழித்துவிட வேண்டுமென்று சொல்வது மஹா மூடத்தனமல்லவா ? கண்ணிலே வியாதி கொண்டிருக்கும் ஒருவன் அதன் மூல காரணங்களைத் தெரிந்து கொண்டு அவுஷதப் பிரயோகம் செய்யாமல் இந்த கண்களையே ஒழித்துவிட்டு நல்ல பிரகாசமுள்ள இரண்டு பிரான்ஸ் தேசத்து பிரகாசமுள்ளக் கண்களை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டுமென்பது நல்லறிவாகுமா ? உனது கண்களை நீக்கிவிட்டு பிரான்ஸ் தேசத்து கண்களை வாங்கி வைத்துக் கொள்வது சாத்தியமா ?

வாலிபன்: ஏனய்யா சும்மா வளக்கிறீர். நான் சொல்வதின் குறிப்பு உமக்கு தெரியவில்லையே ! தமிழ் பாஷை இயற்கையிலேயே நவீன கருத்துக்களுக்குப் பொருத்த முடையதில்லை. இப்போது கவிதை விஷயத்தை எடுத்துக் கொள்வோம். இதற்கும், மின்சாரம், காந்தம் முதலிய பூத சாஸ்திர அபிவிருத்திகளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாதல்லவா ? இதில் கூட தமிழ்பாஷை ஏன் இத்தனை சீர்கெட்டிருக்கிறது ? டெனிஸன் முதலிய நவீன ஆங்கிலக் கவிகளையும், சூரிய நாராயண சாஸ்திரி முதலிய தமிழ்நாட்டுப் புலவர்களையும் ஒப்பிட்டுப் பாரும். ஆங்கிலப் படிப்பற்ற தமிழ் புலவர்களின் நிலைமை சொல்ல வேண்டியதில்லை.

புலவன் : யோசனையின்றி ஏனடா பேசுகிருய் ? தமிழ்நாடு இப்போது சுதந்திரமும், செல்வமும், சரீரபலமும், மனுேபலமு மிழந்து தாழ்ந்த நிலைக்கு வந்துவிட்டது. எனவே இந்நாட்டில் உயர்ந்த கவிஞர் இல்லாமல் போய் விட்டார்கள். நோய் கண்ட மாமரத்திலே நல்ல பழம் எங்ஙனம் தோன்றும்? மரத்தின் நோயைத் தீர்த்தல்லவோ பிறகு கனியினுடைய ருசியைப் பார்க்கவேண்டும். தமிழர்களை புனிதப் படுத்திப் பிறகு பார்த்தால் தமிழ் பாஷையின் நறுமணம் விளங்கும். தமிழர்கள் நேர்மையாக இருந்த காலத்தில் திருத்தக்க தேவர், இளங்கோ, கம்பர் முதலிய எண்ணிறந்த தமிழ்ப் புலவர்கள் இருந்து அருமையான தெய்வீகப் பாடல்கள் பாடியிருக்கிருர்கள்.

வாலிபன் : சும்மா ஸ்தோத்திரம் பண்ணுதேயும். நானும் கம்பன், டம்பன் எல்லாம் கொஞ்சம் பார்த்திருக்கிறேன்.

புலவன் : அப்பா, தயவுசெய்து உளராதே. கலேஜுகளிலே கம்பராமாயணம் சொல்லித் தரப்படும் மாதிரியிலே உனக்கும் உன் போன்ருேர்களுக்கும் தமிழ்ப் புலவர்களிடம் வெறுப்பு ஏற்படுதல் சகஜமேயாம். எனினும், போப் முதலிய ஆங்கிலேய வித்வான்கள் கூட பண்டைத் தமிழ்ப் புலவர்களின் ஆழ்ந்த கருத்துக்களையும் பெருமைகளையும் கண்டு மிகுந்த வியப்படைகின்ருர்கள்.

கம்பராமாயணத்திலே ஸீதை தனியாக அசோக வனத்திலே இருக்கும்போது இராமபிரான் அவ்வப்போது செய்த செய்கைகளையும், விளையாடிய விளையாட்டுக்களையும் நினைத்து, நினைத்து வருந்திக் கொண்டிருப்பதாக சில பாடல்கள் சொல்லப் படுகின்றன. அதில் ஒரு பாட்டை உனக்கென்று சொல்லி பொருள் கூறுகின்றேன். அது ஸ்ரீ ராமன் பட்டாபிஷேகம் பெறும்படி கட்டளையிடப்பட்ட காலத்திலேயும், "ராஜ்யத்தை விட்டு வனந்திரம் செல்" என்று கட்டளை யிடப்பட்ட போதும் ஒரே மாதிரி மனமுடையவனுக முகமலர்ந் திருந்த வியப்பை ஸீதை நினைத்துப் பார்த்துக் கொள்ளத் தக்கதாகக் கூறப்படுகிறது. அப்பாட்டைக் கேள் :

"மெய்த்திருப்பது மேவென்ற காலையும்
இத்திருத் துறந்தே கென்ற போதிலும்
சித்தி ரத்தி னலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கு முகத்தினை யுன்னுவாள்"
(பாடலின் பொருள் சொல்லுகிருர்)

பார்த்தாயா ? இதிலே என்ன ஓசை நயமும், சொல் நயமும், பொருளின் பழும் மலிந்து கிடக்கின்றன. இதை உனக்கு ஒரு திருஷ்டாந்தமாகச் சொன்னேன். இவ்வாறு கம்ப ராமாயணத்திலே ஆயிரக்கணக்கான பாட்டுக்கள் செறிந்து கிடக்கின்றன. மாம்பழம் அழுகியிருக்கும்போது தின்று

பார்த்தவன் பொதுப்படையாக மாம்பழமே கெட்ட பொருளென்று நிந்திப்பது போல, தமிழ் பாஷையும் தமிழர்களும் பாழடைந்து போய் இருக்கும் இந்தக் காலத்தை கவனித்துவிட்டு, நீ பாஷையையே குற்றம் சொல்வது நியாயமன்று. மகரிஷி பால கங்காதர திலகர் முதலிய மகான்கள் சொல்லும் வழிகளைப் பின்பற்றி நமது நாடு செல்வமும், பெருமையும், சுதந்திரமும் பெற்ற பிறகு நமது பாஷையிருக்கும் மாதிரியைப் பார்த்தால் அப்போது ஆச்சரிய மடையத் தக்கவிதமாக இருக்கும். (30 : 203-207)

11. தமிழின் நிலை

கல்கத்தாவில் ''ஸாஹித்ய பரிஷத்'' (இலக்கியச் சங்கம்) என்றொரு சங்க மிருக்கின்றது. அதைத் தென்னாட்டிலிருந்து ஒருவர் சிறிது காலத்துக்கு முன்பு போய்ப் பார்த்து விட்டு வந்து அச் சங்கத்தார் செய்யுங் காரியங்களைப் பற்றி ''ஹிந்து'' பத்திரிகையில் ஒரு விஸ்தீர்ணமான லிகிதம் எழுதியிருக்கிறார். மேற்படி பரிஷத்தின் நிலைமையையும் காரியங்களையும் அவர் நமது மதுரைத் தமிழ் சங்கம் முதலிய தமிழ் நாட்டு முயற்சிகளுடன் ஒப்பிட்டுக் காட்டி, நம்மவரின் ஊக்கக் குறைவைப் பற்றி மிகவும் வருத்தப் படுகிறார். தெலுங்கர், மலையாளத்தார், கன்னடர் எல்லாரும் தத்தம் பாஷைகளின் வளர்ச்சியின் பொருட்டு வருஷாந்தப் பெருங் கூட்டங்கள் நடத்தி வருகிறார்கள். அவற்றால் விளையும் பயன் நமது சங்கத்தாரின் காரியங்களால் தமிழ் நாட்டிற்கு விளைய வில்லை. வங்காளத்திலுள்ள 'ஸாஹித்ய பரிஷத்'தின் நோக்க மென்ன வென்றால், 'எல்லா விதமான உயர்தர படிப்புக்களும் வங்காளப் பிள்ளைகளுக்கு வங்காளி பாஷையிலே கற்றுக் கொடுக்கும் காலத்தை விரைவில் கொண்டுவந்து விடவேண்டும்' என்பது. 'விரைவாகவே இந்த நோக்கத்தை அவர்கள் நிறைவேற்றி விடுவார்கள்' என்பது பல அடையாளங்களினால் நிச்சயமாகத் தோன்றுகிறது என்று அந்த லிகிதக்காரர் சொல்லுகிறார். வங்காளிகளின் விஷயம் இப்படியிருக்க, மயிலாப்பூரில் சிறிது காலத்துக்கு முன்னே நடந்த ஸ்ரீ வைஷ்ணவ சபைக் கூட்டத்தில் பெரும் பான்மையோர் இங்கிலீஷ் தெரியாத வைதீக பிராமணராக இருந்தும், அதிலே சில இங்கிலீஷ் உபந்நியாசங்கள் நடந்ததை எடுத்துக் காட்டி, மேற்படி லிகிதக்காரர் பரிதாபப் படுகிறார். 'நமது ஜனத் தலைவர்கள் இங்கிலீஷில் யோசிப்பதையும் பேசுவதையும் நிறுத்தினால் ஒழிய, நமது பாஷை மேன்மைப்பட இடமில்லை' என்று அவர் வற்புறுத்திச் சொல்லுகிறார்.

மேற்படி லிகிதக்காரர், தமது கருத்துக்களை இங்கிலீஷ் பாஷையில் எழுதி வெளியிட்டிருப்பது போலவே தமிழில் எழுதித் தமிழ்ப் பத்திரிகைகளில் பிரசுரப் படுத்தி இருந்தால் நன்றாக இருந்திருக்கும். சபைகள், சங்கங்கள், பொதுக் கூட்டங்கள், வருஷோத்சவங்கள், பழஞ் சுவடிகள்

சேர்த்து வைத்தல், அவற்றை அச்சிடல் இவையெல்லாம் பாஷை வளர்ச்சிக்கு நல்ல கருவிகள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தமிழ் மக்கள் தமது மொழியை மேன்மைப் படுத்த விரும்பினால் அதற்கு முதலாவது செய்ய வேண்டிய காரியம் ஒன்று உண்டு அதாவது கால விஷேசத்தால் நமது தேசத்திலே விசாலமான லௌகீக ஞானமும் அதனைப் பிறருக்கு உபயோகப் படும்படி செய்வதற்கு வேண்டிய அவகாசம், பதவி முதலிய சௌகர்யங்களும் படைத் திருப்பவராகிய இங்கிலீஷ் படித்த வக்கீல்களும், இங்கிலீஷ் பள்ளிக் கூடத்து வாத்தியார்களும் தமது நீதி ஸ்தலங்களையும் பள்ளிக்கூடங்களையும் விட்டு வெளியேறின வுடனே, இங்கிலீஷ் பேச்சை விட்டு தாம் தமிழரென்பதை அறிந்து நடக்க வேண்டும். பந்தாடும் போதும், சீட்டாடும் போதும், ஆசாரத் திருத்த சபைகளிலும், வருணாசிரம சபைகளிலும் எங்கும், எப்போதும் இந்தப் "பண்டிதர்கள்" இங்கிலீஷ் பேசும் வழக்கத்தை நிறுத்தினால், உடனே தேசம் மாறுதலடையும். கூடியவரை இவர்கள் தமிழெழுதக் கற்றுக் கொள்ள வேண்டும். இவர்கள் அத்தனை பேரும் தமிழ்ப் பத்திரிகை வாங்கிப் படிக்க வேண்டும். புத்தக ரூபமாகவும், பத்திரிகையில் லிகிதங்களாகவும் இவர்கள் எழுதுகிற கதை, காவிய, விளையாட்டு வார்த்தை, வினை வார்த்தை, சாஸ்திர விசாரணை, ராஜ்ய நீதி எல்லா வற்றையும் தமிழில் எழுத வேண்டும். தமிழ்ப் பத்திரிகைகள் நடத்துவோர் இப்போது படுங் கஷ்டம் சொல்லுந் தரம் அல்ல. வெளியூர் வர்த்தமானங்களைத் தவிர, மற்றப்படி எல்லா விஷயங்களும் பத்திராதிபர்கள் தாமே எழுதித் தரவேண்டி யிருக்கிறது. வெளியூர்களிலுள்ள "ஜனத் தலைவரும்," ஆங்கில பண்டித "சிகாமணிகளும்" தமிழ்ப் பத்திரிகைகளை சரியானபடி கவனிப்பதில்லை. அந்தந்த ஊரில் நடக்கும் பொதுக் காரியங்களையும், அவரவர் மனதில் படும் புது யோசனைகளையும் தெளிந்த தமிழிலே எழுதி தமிழ்ப் பத்திரிகைகளுக்கு அனுப்புதல் மிகவும் ஸுலபமான காரியம். ஜனத் தலைவர்களால் இக்காரியம் செய்ய முடியாத பக்ஷத்தில் பிறருக்குச் சம்பளம் கொடுத்தாவது செய்விக்க வேண்டும். *(16 : 149–150)*

12. நூலாசிரியர் பாடு :

பத்திராதிபரின் கஷ்டங்கள் அதிகமென்று சொன்னேன். இக்காலத்தில் தமிழ் நூலாசிரியர் படுங் கஷ்டங்களை ஈசனே தீர்த்து வைக்க வேண்டும். உண்மையான கவிதைக்குத் தமிழ் நாட்டில் தக்க மதிப்பில்லை. இங்கிலீஷ் பாஷையிலிருந்து கதைகள் மொழி பெயர்த்துப் போட்டால் பலர் வாங்கி வாசிக்கிறார்கள். அல்லது இங்கிலீஷ் முறையைத் தழுவி மிகவும் தாழ்ந்த தரத்தில் பலர் புது நாவல்கள் எழுதுகிறார்கள் ; அவர்களுக்குக் கொஞ்சம் லாப மேற்படுகிறது. தமிழில் உண்மையான இலக்கியத் திறமையும் தெய்வ அருளும் பொருந்திய நூல்கள் எழுதுவோர் ஒரு சிலர்

தேன்றியிருக்கிறார்கள்; இவர்களுடைய தொழிலை அச்சடிப்பாரில்லை; அச்சிட்டால் வாங்குவாரில்லை. அருமை தெரியாத ஜனங்கள் புது வழியில் ஒரு நூலைக் காணும்போது அதில் ரஸமனுபவிக்க வழியில்லை. இங்கிலீஷ் படித்த ''ஜனத் தலைவர்'' காட்டும் வழியையே மற்றவர்கள் பிரமாணமென்று நினைக்கும் படியான நிலைமையில் தேசம் இருக்கிறது. இந்தப் பிரமாணஸ்தர்கள் தமிழ் நூல்களில் புதுமையும் வியப்பும் காணுவது சாத்தியமில்லை என்ற நிச்சயத்துட னிருக்கிறார்கள். ஆகவே, நூலாசிரியர் தமக்குத் தெய்வம் காட்டிய தொழிலிலே மேன்மேலும் ஆவலுடன் பாடுபட வழியில்லாமல் வேறு தொழில் செய்யப் போய் விடுகிறார்கள்.

காலம் சென்ற ராஜமையர் புதிதாகத் தமிழ்க் கதை எழுதுவதில் உண்மையான திறமை காட்டியிருக்கிறார். அவருக்குத் தகுந்த ஸம்மானமில்லை. ஆதலால், அவர் அந்தத் திறமையை மேன்மேலும் வளர்த்துக் கொண்டு போக இடமில்லாமல், ஆரம்பத்திலேயே கைவிட்டு, இங்கிலீஷ் மாதப் பத்திரிகை நடத்தப் போய்விட்டார். ஜமீன்தார்கள் மீதும், பிரபுக்கள் மீதும் 'காமா சோமா' என்று புகழ்ச்சிப் பாட்டுக்கள் பாடினால், கொஞ்சம் ஸம்மானம் கிடைக்கிறது. உண்மையான தொழிலுக்குத் தகுந்த பயன் கிடைக்க வில்லை. மேற்படி 'பிரமாணஸ்தர்' தமிழ் மணத்தை விரும்பாமல் இருந்ததால், இந்த நிலைமை உண்டாய் விட்டது. ஆகையால், இங்கிலீஷ் படித்த தமிழ் மக்கள் — முக்கியமாக, வக்கீல்களும், பள்ளிக் கூடத்து வாத்தியார்களும் தமது வாக்கிலும் மனத்திலும் தமிழரசியைக் கொலுவிருக்கும்படி செய்து வணங்க வேண்டு மென்றும், அதுவே இப்போதுள்ள ஸ்திதியில் தமிழ் வளர்ப்புக்கு மூலஸாதன மாகுமென்றும் அறிக்கை யிட்டுக் கொள்ளுகிறேன். (16 : 150–151)

13. சுதேசியக் கல்வி முறை :

நமது இளைஞர்கள் இறந்துபோய் விடுவதற்கு முக்கிய காரணங்களி லொன்று அன்னிய பாஷையிலேயே எல்லா விஷயங்களையும் படித்து வெகு கடினமான பரீக்ஷைகளில் தேறும்படி ஏற்பட் டிருப்பதே யாகுமென்று காலம் சென்ற மஹரிஷி ரானடே சித்தாந்தம் செய்திருக்கிறார்.

அன்னிய ராஜாங்கமாக இருப்பதால் இங்கிலீஷ் பாஷையிலே நம்மவர் தேர்ச்சி பெற வேண்டு மென்பதை நாம் மறுத்துப் பேசவில்லை. ஆனால், பூலோக சாஸ்திரம், உலக சாஸ்திரம், ரஸாயனம், வான சாஸ்திரம், கணிதம் என்பன வற்றை சுதேச பாஷைகளிலேயே கற்றறிந்து கொள்ளுதற்குரிய ஏற்பாடுகள் செய்யப் படவேண்டும். இதனால், இளைஞர்களுக்குச் சிர

மக் குறைவும், தயத்தன்மையும் ஏற்படக் கூடும். மெட்ரிக் குலேஷன் பரீக்ஷைவரை ஒவ்வொரு வகுப்பிலும் இங்கிலீஷ் பாஷை பயிற்ற வேண்டுவது அவஸ்யமாயினும், மற்றப் பாடங்களைக் கூட தேச பாஷைகளில் நடத்த வேண்டும். இப்போது கல்கத்தாவிலே ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் சுதேசிய கல்விச் சங்கத்தாரும் இதே நோக்கம் கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி யடைகின்றோம். (29 : 218)

14. தமிழ் சங்கங்கள் என்னும் கட்டுரையில் இருந்து :

...... மதுரைத் தமிழ்ச் சங்கம் ஒரு யூனிவர்சிடியாக வளர்ச்சி பெற வேண்டியதே நமது நோக்கம். அதற்கு ஸயன்ஸ் பகுதி, சரித்திர ஆராய்ச்சி பகுதி, கணிதப் பகுதி முதலிய எத்தனையோ பகுதிகள் ஏற்பட வேண்டும்.

நவீன 'ஸயன்ஸ்' பரிசோதனைகளையும் மற்றுமுள்ள சாஸ்திர அற்பு தங்களையும் தமிழர்களுக்கு தமிழ் பாஷையிலேயே கற்பிக்கக் கூடிய பண்டி தர்களும் கருவிகளும் வேண்டும். தமிழ் பாஷை ஆராய்ச்சி மட்டிலும் செய் தால் போதாது. தமிழ் பாஷையை எல்லா வகையாலும் பெருமைப் படுத்தி தமிழர்களின் அறிவுக்கு ஷி சங்கம் ஒரு மூலஸ்தானமாக விளங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். (29 : 312)

15. தமிழருக்கு என்னும் கட்டுரையில் இருந்து :

தமிழா, பயப்படாதே. ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய். (16 : 101)

16. தமிழ்

தமிழ் நாட்டில் உண்மையான கல்வி பரவ வேண்டுமானால், சகல சாஸ்திரங்களும் தமிழ் பாஷை மூலமாகவே கற்றுக் கொடுக்க வேண்டு மென்ற கொள்கையை நமக்குள்ளே அறிவுடையோ ரெல்லோரும் கொண் டிருக்கிறார்கள். ஆனால் இதை அனுஸரணைக்குக் கொண்டு வருவதற்குத் தக்கபடி நமக்குள்ளே சக்தி பிறக்கவில்லை. ஐரோப்பிய ஸ்திரியாகிய மிஸ் ஸஸ் பெஸண்ட் கூடச் சில தினங்களின் முன்பு பெங்களூரில் செய்த பிர சங்க மொன்றிலே தமிழ் பாஷையை மிகவும் வியந்து கூறி, நாமெல்லோ ரும் தமிழ்ப் பயிற்சியில் தக்கபடி சிரத்தை செலுத்தாமல் இருப்பது பற்றி வருத்தப் பட்டதாகத் தெரிகிறது. இப்படி நம்மைப் பார்த்துப் பிறர் இரக் கப்படும் படியான அவமான நிலை விரையில் நீங்க வேண்டு மென்று தேவர் களை வணங்குகிறோம். (22 : 83)

17. கூடித் தொழில் செய் என்னும் கட்டுரையில் இருந்து :

......ஐரோப்பியர் அதிகப் பயிற்சி செய்திருக்கும் ரஸாயனம் முதலிய சாஸ்த்ரங்கள் நமக்கு மிகவும் அவஸரம். எவ்விதமான பயிற்சிக்கும் தேச பாஷைகள் எழுதவும் படிக்கவும் செய்விப்பதே ஆதாரமாகும். அதை முதலாவது வேரூன்றச் செய்ய வேண்டும். ஹிந்துப் பிள்ளைகளே, உங்களுக்குக் கோடி புண்ய முண்டு. கூட்டங் கூடி நாட்டைச் சுற்றுங்கள். தமிழ் வளர்ந்தால் தர்மம் வளரும்...... *(22 : 200).*

18. தேசியக் கல்வி என்னும் கட்டுரையில் இருந்து :

தமிழ் நாட்டில் தேசியக் கல்வியென்பதாக ஒன்று தொடங்கி அதில் தமிழ் பாஷையை ப்ரதானமாக நாட்டாமல், பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும் தமிழ் ஒருவித உப பாஷையாகவும் ஏற்படுத்தினால் அது "தேசியம்" என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியுமென்பதில் ஐயமில்லை. தேச பாஷையே ப்ரதானம் என்பது தேசியக் கல்வியின் ஆதாரக் கொள்கை; இதை மறந்துவிடக் கூடாது. தேச பாஷையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தொடங்கப்படுகிற இந்த முயற்சிக்கு நாம் தமிழ் நாட்டிலிருந்து பரிபூரண சகாயத்தை எதிர் பார்க்க வேண்டுமானால், இந்த முயற்சிக்குத் தமிழ் பாஷையே முதற் கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதைத் தம்பட்டம் அறைவிக்க வேண்டும். இங்ஙனம் தமிழ் ப்ரதானம் என்று நான் சொல்லுவதால் டாக்டர் நாயரைத் தலைமையாகக் கொண்ட திராவிடக் கக்ஷியார் என்ற போலிப் பெயர் புனைந்த தேச விரோதிகளுக்கு நான் சார்பாகி ஆர்ய பாஷா விரோதம் பூண்டு பேசுகிறேன் என்று நினைத்து விடலாகாது. தமிழ் நாட்டிலே தமிழ் சிறந்திடுக. பாரத தேசம் முழுவதிலும் எப்போதும் போலவே வடமொழி வாழ்க. இன்னும் நாம் பாரத தேசத்தின் ஐக்கியத்தைப் பரிபூரணமாகச் செய்யுமாறு நாடு முழுவதிலும் வடமொழிப் பயிற்சி மேன் மேலும் ஓங்குக. எனினும், தமிழ் நாட்டில் தமிழ்மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக. *(16 : 255-256)*

19. தேசியக் கல்வி என்னும் கட்டுரையில் இருந்து :

தேச பாஷையின் மூலமாகவே இந்தச் சரித்திரப் படிப்பு மட்டுமேயன்றி மற்றெல்லாப் பாடங்களும் கற்பிக்கப்பட வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். தேச பாஷையின் மூலமாகப் பயிற்றப்படாத கல்விக்கு தேசியக் கல்வி என்ற பெயர் சொல்லுதல் சிறிதளவும் பொருந்தாது போய்விடுமன்றோ.....

பௌதீக சாஸ்திரங்கள் கற்றுக் கொடுப்பதில், மிகவும் தெளிவான எளிய தமிழ் நடையில் பிள்ளைக்கு மிகவும் சுலபமாக விளங்கும்படி சொல்லிக் கொடுக்க வேண்டும். இயன்ற இடத்திலெல்லாம் பதார்த்தங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே உபயோகப் படுத்த வேண்டும். திருஷ்டாந்தமாக "ஆக்ஸிஜன்," "ஹைட்ரஜன்" முதலிய பதார்த்தங்களுக்கு ஏற்கனவே தமிழ் நாட்டில் வழங்கப் பட்டிருக்கும் பிராணவாயு, ஜலவாயு என்ற நாமங்களையே வழங்க வேண்டும். தமிழ்ச் சொற்கள் அகப்படாவிட்டால் சம்ஸ்கிருத பதங்களை வழங்கலாம். பதார்த்தங்களுக்கு மட்டுமேயன்றி கிரியைகளுக்கும் அவஸ்தைகளுக்கும் (நிலைமைகளுக்கும்) தமிழ் சம்ஸ்கிருத மொழிகளையே வழங்குதல் பொருந்தும். இந்த இரண்டு பாஷைகளிலும் பெயர்கள் அகப்படாத இடத்தில் இங்கிலீஷ் பதங்களையே உபயோகப் படுத்தலாம். ஆனால் குணங்கள், செயல்கள், நிலைமைகள் இவற்றுக்கு இங்கிலீஷ் பதங்களை ஒருபோதும் வழங்கக் கூடாது. பதார்த்தங்களின் பெயர்களை மாத்திரமே இங்கிலீஷில் சொல்லலாம், வேறு வகையில் உணர்த்த இயலாவிடின். (16 : 257, 262-263)

20. பருந்துப் பார்வை என்னும் கட்டுரையில் இருந்து:

தக்ஷிணத்துப் பாஷைகளிலே – அதாவது, தமிழிலும் தெலுங்கிலும் கன்னடத்திலும் மலையாளத்திலும் – சாஸ்திர (சயின்ஸ்) பாடம் கற்றுக் கொடுப்பதற்கு மேற்படி பாஷைகள் தகுதி யில்லையென்று பச்சையப்பன் காலேஜ் தலைமை வாத்தியார் மிஸ்டர் ரோலோ என்பவர் சொல்லுகிறார். அவருக்கு இவ்விடத்துப் பாஷைகள் தெரியாது. சங்கதி தெரியாமல் விரிக்கிறார். சாஸ்திர பரிபாஷை நமது பாஷைகளில் மிகவும் எளிதாகச் சேர்த்து விடலாம். மேலும் இயற்கை நடையிலே இங்கிலீஷைக் காட்டிலும் தமிழ் அதிக நேர்மையுடையது. ஆதலால், சாஸ்திர ப்ரவசனத்துக்கு மிகுந்த சீருடையது. இந்தச் சங்கதி நம்மவர்களிலே கூடச் சில இங்கிலீஷ் பண்டிதருக்குத் தெரியாது. ஆதலால் மிஸ்டர் ரோலோவை நாம் குற்றஞ் சொல்வது பயனில்லை. (16 : 309)

21. புனர் ஜன்மம்--1 என்னும் கட்டுரையில் இருந்து:

.....நமது கவிதையிலே ஆனந்தம் குறையத் தொடங்கிற்று. ருசி குறைந்தது. கரடு முரடான கல்லும் கள்ளி முள்ளும் போன்ற பாதை நம் கவிஞர்களுக்கு நல்ல பாதையாகத் தோன்றலாயிற்று. கவிராயர் 'கண்' என்பதைச் 'சக்கு' என்று சொல்லத் தொடங்கினார். ரசம் குறைந்தது. சக்கை அதிகப்பட்டது. உண்மை குறைந்தது; பின்னல் திறமைகள் அதிகப்பட்டன.

சவியுறத் தெளிந்து தண்ணெனன்
றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்

என்று கம்பன் பாடியிருக்கிறான்.

'சவி' என்பது ஒளி; இது வட சொல். கம்பன் காலத்தில் அதிக வழக்கத்திலிருந்தது போலும். ''ஒளி பொருந்தும்படி தெளிவு கொண்டதாகி, தண்ணென்ற (குளிர்ந்த) நடையுடையதாகி, மேலோர் கவிதையைப் போலக் கிடந்தது கோதாவரி நதி'' என்று கம்பன் வர்ணனை செய்கிறான். எனவே, கவிதைகளில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்க வேண்டுமென்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை.

மேலும், நெடுங் காலத்துக்கு முன்னே எழுதப்பட்ட நூல்கள் அக் காலத்துப் பாஷையைத் தழுவினவை. காலம் மாறமாற பாஷை மாறிக் கொண்டு போகிறது. பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்த அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய பதங்களையே வழங்க வேண்டும். அருமையான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை. ஆனால், சென்ற சில நூற்றாண்டுகளாக, புலவர்களும் சாமியார்களும் சேர்ந்து வெகு சாதாரண விஷயங்களை அசாதாரண, அலௌகிக, அந்தகார நடையில் எழுதுவதுதான் உயர்ந்த கல்வித் திறமை என்று தீர்மானஞ் செய்து கொண்டார்கள். (16 : 45-46)

22. பாஞ்சாலி சபதம் முன்னுரையில் இருந்து :

எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினை யுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமலும் நடத்துதல் வேண்டும்.

காரியம் மிகப் பெரிது; எனது திறமை சிறிது. 'ஆகையால்' இதனை எழுதி வெளியிடுகின்றேன். பிறருக்கு ஆதர்சமாக அன்று, வழிகாட்டியாக. (17 : 357)

23. வசன நடை:

தமிழில் வசனநடை இப்போதுதான் பிறந்து பல வருஷமாக வில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். ஆதலால், இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்ய வேண்டும். கூடியவரை பேசுவது போலவே எழுதுவது தான் உத்தம மென்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம் எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்து விட்டால் நல்லது.

பழக்க மில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து அதாவது ஜனங்களுக்குச் சற்றேனும் பழக்க மில்லாமல் தனக்கும் அதிக பழக்க மில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து எழுத ஆரம்பித்தால் வாக்கியம் தத்தளிக்கத்தான் செய்யும் சந்தேக மில்லை. ஆனாலும் ஒரு வழியாக முடிக்கும்போது வாய்க்கு வழங்குகிறதா என்று வாசித்துப் பார்த்துக் கொள்ளுதல் நல்லது. அல்லது ஒரு நண்பனிடம் படித்துக் காட்டும் வழக்கம் வைத்துக் கொள்ள வேண்டும். சொல்ல வந்த விஷயத்தை மனதிலே சரியாகக் கட்டி வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு கோணல், திருகல் ஒன்று மில்லாமல் நடை நேராகச் செல்ல வேண்டும். முன் யோசனை யில்லாமலே நேராக எழுதும் திறமையை வாணி கொடுத்து விட்டால், பின்பு சங்கட மில்லை. ஆரம்பத்திலே மனதில் கட்டி முடிந்த வசனங்களையே எழுதுவது நன்று. உள்ளத்திலே நேர்மையும் தைர்யமு மிருந்தால், கை பிறகு தானாகவே நேரான எழுத்து எழுதும். தைர்யம் இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும். சண்டி மாடு போல ஓரிடத்தில் வந்து படுத்துக் கொள்ளும். வாலைப் பிடித்து எவ்வளவு திருகினாலும் எழுந்திருக்காது. வசனநடை, கம்பர் கவிதைக்குச் சொல்லியது போலவே, தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்கு முடையதாக யிருக்க வேண்டும். இவற்றுள் ஒழுக்கமாவது தட்டுத் தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை. நமது தற்கால வசன நடையில் சரியான ஓட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலை நிறுத்திக் கொண்டால் கை நேரான தமிழ் நடையெழுதும். (16 : 142)

24. தமிழில் சாஸ்த்ர பரிபாஷை:

பஞ்ச பூதங்களின் இயற்கையைப் பற்றின ஆராய்ச்சிகளிலே நம்மைக் காட்டிலும் ஐரோப்பியர் முன்னேறி நிற்பது தெரிந்த விஷயம். ஆதலால், ஐரோப்பாவில் வழங்கும் லௌகிக சாஸ்த்திரங்களைத் தமிழில் எழுத வேண்டுமென்று பல பண்டிதர் மிகவும் ஆவலோ டிருக்கிறார்கள். ஏற்கனவே, சில பகுதிகளின் ஆரம்பம் தமிழில் மொழி பெயர்த்திருக்

கிறது. இந்த முயற்சி மென்மேலும் வளரும்; வளர்ந்து தீரவேண்டும். அந்த சாஸ்த்திரங்களை யெல்லாம் ஏக காலத்திலே தமிழில் எழுதி முடிப்ப தற்காக ஒரு பண்டித சங்கம் ஏற்படக் கூடும். நமது ராஜாக்களுக்கும், ஜமீன்தார்களுக்கும், செட்டிகளுக்கும் நல்ல புத்தியுண்டாகித் தமிழில் நவீன சாஸ்த்ரம் சேர்ப்பதாகிய காரியத்தை அவர்கள் தக்க பண்டிதர் களின் உதவிகொண்டு, விரைவில் நிறைவேற்றி மேன்மை பெறக் கூடும்.

அஸ்திவாரக் காரியம்

இதற்கெல்லாம் முன்னதாகவே பண்டிதர் செய்து வைக்க வேண் டிய அடிப்படைக் காரியம் ஒன்றுண்டு. கூடியவரை சாஸ்த்ர பரிபாஷையை நிச்சயப் படுத்தி வைத்தால், பிறகு மொழி பெயர்ப்புத் தொடங்கு வோர்க்கு அதிக சிரமமிராது. பரிபாஷை, சங்கேதம், குழுவுக்குறி என்ற மூன்று சொல்லும் ஒரே பொருளைப் பல வகையிலே குறிப்பன; அதாவது ஒரு கூட்டத்தார் அல்லது ஒரு சாஸ்திரக்காரர் விசேஷார்த்தம் தோன்றும் படி உடன்பட்டு வழங்கும் பொது வழக்க மில்லாத சொல். இங்ஙனம் பரிபாஷையை நிச்சயப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன், சேலத்தில் வக்கீல் ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சார்யரும் ஸ்ரீ வெங்கட சுப்பைய ரும் சேர்ந்து ஒரு மாதப் பத்திரிகையைத் தொடங்கி யிருக்கிறார்கள். இந் தப் பத்திரிகையின் பெயர் 'தமிழ் சாஸ்த்ர – பரிபாஷைச் சங்கத்தாரின் பத்திரிகை, மேற்கொண்ட பெயருடன் ஒரு சங்கம் சேலத்தில் ஏற்பட் டிருக்கிறது. அந்த சங்கத்தின் கார்யஸ்தர், அந்த காலேஜில் ப்ரகிருதி சாஸ்திர பண்டிதராகிய ஸ்ரீ ராமநாதய்யர்.

'தமிழில் சாஸ்த்ர பரிபாஷை மாசப் பத்திரிகை' என்ற சேலத்துப் பத்திரிகையின் முதலாவது சஞ்சிகை இங்கிலீஷில் வெளியிடப் பட்டிருக்கி றது. ஆரம்பத்திலே தமிழில் எழுதாமல் தமிழருக்கு வேண்டிய இக்காரி யத்தை இங்கிலீஷ் பாஷையிலே தொடங்கும்படி நேரிட்டதற்கு ஸ்ரீ ராஜ கோபாலாச்சார்யார் சொல்லும் முகாந்திரங்கள் எனக்கு முழு நியாயமா கத் தோன்றவில்லை. ஆனால், கூடிய சீக்கிரத்தில் தமிழ்ப் பகுதியொன்று அந்தப் பத்திரிகையில் சேருமென்று தெரிகிறது. அநேகமாக இரண்டாம் சஞ்சிகையிலேயே தமிழ்ப் பகுதி சேருமென்று கேள்விப் படுகிறேன். அங்ங னம் தமிழ் சேர்ந்து நடக்கும் சாஸ்த்ரப் பத்திரிகையினால், தமிழ் நாட்டா ருக்கு மிகப் பெரிய பயன் விளையு மென்பதில் சந்தேகமில்லை.

பரிபாஷை சேகரிக்க ஓருபாயம்

ஸ்ரீ காசியிலே, 'நாகரிப்ரசாரிணி சபையார்' ஐரோப்பிய சங்கேதங் களை யெல்லாம் எளிய சம்ஸ்கிருத பதங்களில் போட்டு, மிகப் பெரியதோர் அகராதி உண்டாக்கி வருகிறார்கள். அந்தச் சொற்களை வேண்டியவரை, இயன்றவரை தேச பாஷைகள் எல்லா வற்றிலும் ஏக காலத்தில் கைக்

கொண்டு வழங்கலாம். ஐரோப்பாவில் எல்லா பாஷைகளும் இவ்வித மாகவே லத்தீன், யவன பரிபாஷைகளைக் கைக்கொண் டிருக்கின்றன. இவ் வாறு செய்வதால் நமது தேச பாஷைகளில் சங்கேத ஒற்றுமை யேற்படும். அதனால் சாஸ்த்ரப் பயிர் தேச முழுவதிலும் வளர்ந் தோங்கி வருதல் எளி தாகும். (16 : 154–155)

25. தென் ஆப்ரிக்காவில் பெண்கள் விடுதலை என்னும் கட்டுரையில் இருந்து :

"மெம்பர்" என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் எனக்கு அகப் படவில்லை. இது ஆச்சரியத்திலும் ஆச்சர்யம். "அவயவி" சரியான வார்த்தை யில்லை. "அங்கத்தான்" கட்டி வராது. "சபிகன்" சரியான பதந்தான். ஆனால், பொது ஜனங்களுக்குத் தெரியாது. யாரேனும் பண் டிதர்கள் நல்ல பதங்கள் கண்டு பிடித்துக் கொடுத்தால் புண்ணிய முண்டு. அரைமணி நேரம் யோசித்துப் பார்த்தேன் ; உறுப்பாளி? ஏதெல்லாமோ நினைத்தேன். ஒன்றும் மனதிற்குப் பொருந்த வில்லை. என்ன செய்வேன்! கடைசியாக "மெம்பர்" என்று எழுதி விட்டேன். இன்னும் ஆர அமர யோசித்துச் சரியான பதங்கள் கண்டு பிடித்து மற்றொரு முறை சொல்லு கிறேன். (16 : 228)

26. தமிழ் நாட்டின் விழிப்பு. பத்திரிகைகளின் நிலைமை என்னும் கட்டுரையில் இருந்து:

.... இங்கிலாந்தில் வர்த்தமான பத்திரிகைகள் ப்ரான்ஸ் தேசத்து மந்திரிகளுடைய உபந்யாசங்களையும், பெரிய சாஸ்திரிமார், பெரிய கைத் தொழில் நிபுணர், த்ரவ்ய சாஸ்த்ர நிபுணர், ஜனத் திருத்தத் தலைவர் முதலியவர்களின் உபந்யாசங்களையும், பல ப்ரெஞ்சு ராஜாங்க சம்பந்தமான விவகாரங்களையும், ப்ரெஞ்சு பத்திரிகைகளிலிருந்து மொழி பெயர்த்துப் போடுகின்றன. அப்படியே ப்ரான்ஸ் தேசத்துப் பத்திரிகைகள் ஜேர்மன் பாஷையிலிருந்து பல விஷயங்களை மொழி பெயர்த்து எழுதுகின்றன. ஆனால் அந்த மொழி பெயர்ப்புகளில் ஸ்வபாஷையின் வழக்கங்களையும் பிர யோகங்களையும் கை விட்டு அன்னிய பாஷையின் வசன நடையைப் பின் பற்றும் வழக்கம் கிடையாது. ஆனால் தமிழ் நாட்டிலோ முழுதும் தமிழ் நடையை விட்டு இங்கிலீஷ் நடையில் தமிழை எழுதும் விநோதமான பழக் கம் நமது பத்திராதிபர்களிடம் காணப்படுகிறது. முதலாவது நீ எழுதப் படுகிற விஷயத்தை இங்கிலீஷ் தெரியாத ஒரு தமிழனிடம் வாயினால் சொல்லிக் காட்டு. அவனுக்கு நன்றாக அர்த்தம் விளங்குகிறதா என்று

பார்த்துக் கொண்டு பிறகு எழுது. அப்போதுதான் நீ எழுதுகிற எழுத்து தமிழ் நாட்டிற்குப் பயன் படும். உனக்கு இகபர க்ஷேமங்களுக்கு இடமுண்டாகும். இல்லாது போனால், நீயும் சிரமப்பட்டு மற்றவர்களுக்கும் பயனில்லாமல் போகிறது. சில சமயங்களில் சில பத்திரிகைகளை வாசித்து விட்டு, நான் "ஐயோ, இவ்வளவு காயிதத்தில் எத்தனையோ ஆச்சர்யங்களும் எத்தனையோ சந்தோஷங்களும் எழுதலாமே" என்று எண்ணி வருத்தப் படுவதுண்டு. (16 : 153–154)

27. தமிழில் எழுத்துக் குறை:

ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, பெங்காளி, மஹாராஷ்ட்ரம், குஜராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பாரத பாஷைகளிலெல்லாம் வர்க்க எழுத்துக்கள் உண்டு.

அதாவது, க — ச — ட — த — ப என்ற ஐந்து வல்லெழுத்துக்களில் ஒவ்வொன்றுக்கும் நான்கு வேறுபாடுகள் இருக்கின்றன. திருஷ்டாந்தமாக:

வட சொல்	பொருள்
1. பரம்	மேலானது
2. பலம் (ப=ph)	பயன்
3. பலம் (ப=b)	வலிமை
4. பாரம் (ப=bh)	சுமை.

வெவ்வேறு எழுத்துக்களை மூலமாகக் கொண்ட இந்த நான்கு சொற்களையும் தமிழில் வழங்கி வருகிறோம். ஆனால், "எல்லி செட்டி லெக்க ஏகலெக்க" என்பதுபோல எல்லாவற்றிற்கும் ஒரே "ப" தான் போடுகிறோம்.

ஆனால், ஸம்ஸ்க்ருதச் சொற்களை ஸம்ஸ்க்ருத வழக்கப்படி நாம் உச்சரிக்க வேண்டிய அவசியம் இல்லையாதலால் நமக்கு அந்த எழுத்துக்கள் வேண்டுவ தில்லையென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். சரி, நியாய மென்று வைத்துக் கொள்வோம்.

வெளிநாட்டு ஊர்களின் பெயர்களையும் மனிதர்களின் பெயர்களையும் நாம் சரியானபடி சொல்ல வேண்டுமா, அதுவும் வேண்டாமா? "சுதேச மித்திரன்" பத்திரிகையை சென்ற 15 வருஷங்களாகப் படித்து வரும் ஓர் ஐயங்கார் நமது நிதானக் கட்சித் தலைவராகிய ஸ்ரீ கோகலேயின் பெயரைத் தப்பாக உச்சரிப்பதை நான் பார்த்திருக்கிறேன். 'தங்கம்' என்ற சொல்லில் 'க' உச்சரிப்பது போல அப்பெயரின் "கோ" (Go) வை

மெலிதாகச் சொல்ல வேண்டும். பிராமணர் "கோபுரம்" என்று சொல்லும் போது "கோ" வை எப்படிச் சொல்லுகிறார்களோ, அதுபோலக் 'கோகுளே'யின் முதலெழுத்தைச் சொல்ல வேண்டும். இரண்டாவதெழுத்தாகிய "க" என்பதை "க்ஹ" என்ற ஒலி இலேசாகத் தோன்றும்படி அழுத்தி உச்சரிக்க வேண்டும். "மகம்" என்று வைதிகப் பிராமணர் சொல்வது போல ஷி ஐயங்கார் இதை "கோஹலே" என்று சொன்னார். அவர் மேல் குற்றமில்லை; "சுதேசமித்திரன்" மேலும் குற்றமில்லை; தமிழில் எழுத்துக் குறைகிறது.

பெள்ளாரி, குத்தி, பனாரஸ், பம்பாய் என்று நாட்டு ஊர்ப் பெயர்களைக்கூட நாம் விபரீதமாக எழுதும்படி நேரிட்டிருக்கிறது. இதற்கென்ன விமோசனம்?

கல்கத்தாவில் இருக்கும்போது ஸ்ரீமான் அரவிந்தகோஷ் (இவர் பெயரையும் தமிழில் சரியாக எழுத இடமில்லை. "Ghosh" என்பதை "Kosh" என்று எழுத நேரிடுகிறது.) ஸ்ரீமான் அரவிந்தர் தமிழ் கற்றுக்கொள்ள விரும்பினாராம். அங்குத் தென்னாட்டு மனிதர் ஒருவர் இவருக்கு நமது அரிச்சுவடி முழுதும் கற்றுக் கொடுத்தார். முதல் பாடப் புத்தகமும் நடந்தது. அப்படியிருக்கும் போது ஒருநாள் தமிழ் நாட்டுப் பத்திரிகை அகப்பட்டது. அதில், "பிரேந்திரநாத தத்த குப்தர் வழக்கு" என்று மகுடமிட்டு ஒரு வியாசம் எழுதியிருந்தது.

அதைப் பார்த்துவிட்டு அரவிந்தர் தமது தமிழ் வாத்தியாரிடம் "இதென்ன" என்று கேட்டார்.

வாத்தியார், "இது ஒரு பெங்காளிப் பெயர்" என்று சொன்னாராம்.

அரவிந்தர் மயங்கிப்போய், "எப்படி" என்று கேட்டார்.

வாத்தியார், "Birendrenath Datta Gupta" என்று அச் சொல்லைப் பெங்காளி ரூபத்திலே சொன்னார்.

"இங்கிலீஷ் தெரியாத கிராமத்துத் தமிழர் இச் சொல்லை எப்படி வாசிப்பார்கள்?" என்று அரவிந்தர் கேட்டார்.

"நீர் வாசித்தது போலவே Pirendiranata Tatta Kuptar (t...த) என்றுதான் வாசிப்பார்கள்" என்று வாத்தியார் சொன்னாராம்.

இன்றும் அரவிந்தர் இந்தக் கதையைச் சொல்லிச் சொல்லிச் சிரிக்கிறார்.

நமது பத்திரிகைகளில் ஐரோப்பாவிலுள்ள நகரங்கள், மலைகள் முத லியவற்றின் பெயர்களைப் பார்க்கும்போது கண் கூசுகிறது. அதைத் தமிழ் மாத்திரம் அறிந்த தமிழர் எப்படி வாசிப்பார்க ளென்பதை நினைக்கும் போதே காது கூசுகிறது.

இங்கிலீஷ் அக்ஷரத்தில் ப்ரெஞ்ச், அரபி, பார்ஸி, ஸம்ஸ்க்ருதம் முதலிய பாஷைகளின் பதங்கள் சிலவற்றை எழுதுவதற்கு இங்கிலீஷ் அரிச் சுவடி இடங் கொடாததைக் கருதிச் சில புதிய குறிகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எல்லா ஐரோப்பிய பாஷைகளுமே அந்நிய பாஷை களிலுள்ள விசேஷ உச்சரிப்புகளுக்கு இணங்கும்படி சில தனிக் குறிகள் ஏற்பாடு செய்து வைத்துக் கொண்டிருக்கின்றன.

நாமும் அப்படியே சில விசேஷக் குறிகள் ஏற்பாடு செய்து கொள் ளுதல் மிகவும் அவசியமாகும்.

ஏற்கனவே நான் இந்தக் குறையை நீக்கும் பொருட்டாக மிகவும் சுலபமாக ஐந்து நிமிஷங்களில் யாரும் கற்றுக்கொள்ளக் கூடிய சில குறிகள் தயார் செய்து வைத்திருக்கிறேன். ஆனால், இப் புதிய வழியைத் தமிழ் நாட்டுப் பத்திராதிபர்களும் பிறரும் அறியும்படி துண்டுப் பத்திரிகைகள் போட்டு வேலை செய்வதற்கு வேண்டிய சௌகர்யங்கள் எனக்கு இன்னும் சில மாதங்கள் கழிந்த பிறகுதான் ஏற்படும்.

இப்புதிய உபாயத்தை அனுஸரிப்பதால் இப்போது நாமெல்லோ ரும் எழுதிவரும் முறைமைக்கு யாதொரு ஸங்கடமும் உண்டாகாது. புதிய குறிகள் தெரியாதவர்கள் கூட வழக்கம் போலவே படித்துக் கொண்டு போவார்கள். யாருக்கும் எவ்விதமான சிரமமும் ஏற்படாது. எனது புதிய முறையை இப்போதே அறிந்து கொள்ள விரும்புவோர் கீழே கண்ட என் விலாசத்துக்கு இரண்டரை தபால் முத்திரை வைத்தனுப்பினால் அவர்க ளுக்கு இம் முறையை நல்ல கையெழுத்தில் தெளிவாக எழுதுவித்து அனுப்பு கிறேன். (23 : 66-68)

(இக் கட்டுரைக்கு வ. உ. சி. எழுதிய மறுப்பைத் தொடர்ந்து பாரதி எழுதிய குறிப்பு கீழே தரப்படுகிறது).

28. தமிழில் எழுத்துக் குறை — 2 :

ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற எழுத்துக்களைத் தமிழ் அரிச்சுவடி யில் நமது பூர்வீகர் சேர்த்திருக்கிறார்கள். இவற்றைச் சேர்க்கா விட்டால் தமிழ் நேரே பேச முடியாமலும் எழுத முடியாமலும் போய்விடு மென்று அவர்களுக்கு அச்ச முண்டாயிற்று.

தொல்காப்பியர் கட்டின அரிச்சுவடி போதாத வண்ணமாக நமது பாஷை வளர்ச்சி பெற்றவுடனே நமது முன்னோர்கள் மேற்காட்டிய எழுத்துக்களையும் சேர்த்தார்கள்.

நாமும் அப்படியே நமக்கு இக்காலத்தில் ஏற்படும் உச்சரிப்புக் கஷ்டங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்கு, கிரந்த எழுத்துக்களைச் சேர்க்கலா மென்று சில பெரியோர்கள் கருதுகிறார்கள். ஆனால், அதைக் காட்டிலும் அடையாளங்கள் போடுவது சுலபமான வழி.

இப்போதுள்ள அரிச்சுவடியிலே பழகிய தமிழருக்கு மேற்படி அடையாளங்களால் எவ்வித ஸங்கடமும் நேரிடாது. தப்பாகவோ சரியாகவோ வழக்கம்போல வாசித்துக் கொண்டு போவதை அடையாளங்கள் தடுக்க மாட்டா. கிரந்த எழுத்துக்களைக் கொண்டு சேர்த்தால் பாதி படிக்கும் போதே நிறுத்திவிட நேரிடும்.

ப்ரெஞ்ச், இங்கிலீஷ் முதலிய ஐரோப்பிய பாஷைகளிலும், ஹிந்தி முதலிய நமது நாட்டுப் பாஷைகளிலும் – உயிருள்ள பாஷைகளிலே வளர்வன வெல்லாவற்றிலும் – உச்சரிப்புத் திருத்தத்தைக் கருதிப் பழைய எழுத்துக்களில் சில அடையாளங்கள் சேர்த்து சௌகர்யப் படுத்திக் கொள்ளுகிறார்கள். இதனால் எழுத்தின் வடிவத்தில் யாருக்கும் சந்தேகம் நேரிடாது. இந்த எளிய வழியை அனுசரித்து நமது தமிழ் மொழி விசாலமடைய வேண்டு மென்பதே என்னுடைய விருப்பம். (23 : 68-69)

29. ஹிந்தி பாஷைப் பக்கம் :

இந்தப் பக்கத்திலே ஹிந்தி பாஷையிலிருந்து சில விஷயங்கள் எழுதி அதை மொழி பெயர்த்துக் கொண்டு வரவேண்டு மென்று எண்ணம் கொண்டிருக்கிறோம். தமிழர்களாகிய நாம் ஹிந்தி பாஷையிலே பயிற்சி பெறுதல் மிகவும் அவசியமாகும். தமிழ் பாஷையே நமக்குப் பிரதானமாய் இருக்க ஹிந்தி பாஷையை அப்பியஸிக்க என்ன அவசியம் இருக்கிறது என்று சொல்லுகின்றோம். இந்தியா பலவித பிரிவுகளுடையதாய் இருந்த போதிலும், உண்மையிலே ஒன்றாய் இருப்பதற் கிணங்க, அதிலுள்ள வெவ்வேறு நாடுகளிலே வெவ்வேறு பாஷைகளிருந்த போதிலும், முழுமைக்கும் ஒரு பொது பாஷை வேண்டும். தமிழர்கள் தமிழும் ஹிந்தியும், தெலுங்கர்கள் தெலுங்கும் ஹிந்தியும், பெங்காளத்தார் பெங்காளியும் ஹிந்தியும் என இவ்வாறே எல்லா வகுப்பினரும் அறிந்திருப்பார்களானால் நமக்குப் பொது பாஷை ஒன்றிருக்கும். ஹிந்தி இல்லாமல் இப்போது நமக்குள் அதிகமாகப் பழக்கமுற்று வருகின்ற இங்கிலீஷ் பாஷையே பொது மொழியாகி விடக் கூடாதோ யென்றால் அது அசாத்தியமும் மூடத் தனமுமான நினைப்பாகும்.

இங்கிலீஷ் பாஷை அன்னியருடையது. நமது நாட்டிற்குச் சொந்தமான தன்று. நமது நாட்டில் எல்லா வகுப்பினர்களுக்கும் ஸ்திரமாக பதிந்து விடும் இயற்கை உடையதன்று. ஹிந்தியோ அங்ஙன மன்று. ஏற்கனவே முப்பது கோடி இந்தியர்களில் சுமார் 8 கோடிப் பேர் ஹிந்தி பாஷையை பேசுகிறார்கள். மற்றும் மஹா ராஷ்டிரர், பெங்காளிகள் முதலியோர் ஹிந்தி பாஷையை எளிதில் அர்த்தம் செய்து கொள்ளக் கூடியவர்களாய் இருக்கிறார்கள். தமிழர், தெலுங்கர் முதலானவர்கள் கூட சிறிது பிரயாசையின் பேரில் ஹிந்தியைக் கற்றுக் கொள்ளலாம். ஹிந்தி பாஷையைச் சிறிது சிறிதாக நமது ஜனங்களுக்குள் பழக்கப் படுத்த வேண்டு மென்று சென்னையில் ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி ஐயர் முதலியோர் மீட்டிங் கூடித் தீர்மானம் செய்தார்கள். அவ்விஷயத்தில் இதுவரை அவர்கள் எவ்வித பிரயத்தனமும் செய்ய வில்லை. அதே நோக்கத்துடன் இப்படி ஒரு பக்கம் ஏற்பாடு செய்ய நிச்சயித்திருக்கிறோம். முதலில் நாகலிபியிலே ஹிந்தி பாஷை எழுதப் பட்டிருக்கிறது. அதற்கப்பால் தமிழ் லிபியிலே (கிரந்தம் கலந்து) மேற்படி பாஷை எழுதப் படுகிறது. அதற்கப்பால் தமிழ் மொழி பெயர்ப்புக் கொடுத்திருக்கிறோம். ராஜபுத்திர மஹா வீரனாகிய பிரதாபஸிங் மஹாராணாவின் சரித்திரம் எழுதப் பட்டிருப்பதால் ஹிந்தி பாஷையில் விருப்பமில்லாதவர்கள் கூட இதைக் கருத்துடன் படிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த இதழிலிருந்து ஒவ்வொரு பக்கத்திலும் ஹிந்தி பக்கமென்று மூன்று பத்திகள் ஒதுக்கப்பட்டு பிரதாபஸிங் மஹாராணாவின் சரித்திரம் எழுதப் பட்டு வருகின்றது. *(29 : 348-349)*

30. இந்தியாவுக்குப் பொது பாஷை :

இந்தியாவுக்குப் பொது பாஷையாக ஹிந்தியை வழங்கலா மென்று ஸ்ரீமான் காந்தி முதலிய பல பெரியோர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். ஆனால், பாரத தேச பக்த சிரோரத்ன மென்று கூறத்தக்க ஸ்ரீமான் அரவிந்த கோஷ் முதலிய வேறுபலர் ஸம்ஸ்கிருத பாஷையே இந்தியாவுக்குப் பொதுப் பாஷை யென்றும், நாம் அதைப் புதிதாக அங்ஙனம் சமைக்க வேண்டிய தில்லை யென்றும், ஏற்கனவே ஆதி காலந் தொட்டு அதுவே பொதுப் பாஷையாக இயல் பெற்று வருகிறது என்றும் சொல்லுகிறார்கள். திருஷ்டாந்தமாக ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் இந் நாட்டில் ஏற்படு முன்னர் தமிழ் நாட்டில் இருந்த ஒரு தமிழரசன் குஜராத்திலிருந்த ஒரு கூர்ஜர மன்னனுக்குக் கடிதம் எழுத நேர்ந்தால், எந்த பாஷையில் எழுதி யிருப்பான்? தமிழில் எழு துவதென்றால் குஜராத்து மன்னனுக்குப் பொருள் விளங்காது. கூர்ஜரத்தில் எழுதுதல் தமிழ் மன்னனுக்கு ஸாத்யமல்ல.

எனவே இரண்டு நாட்டுப் பண்டிதர்களும், ராஜ குருக்களும், முக்கிய மந் திரிகளும் ஒருங்கே பயிற்சி பெற்றிருந்ததாகிய ஸம்ஸ்கிருத பாஷையிலேயே அவர்களுக்குள் கடிதப் போக்குவரத்து நடந்த தென்பது உள்ளங்கை நெல் லிக்கனிபோல விளங்குகின்ற தன்றோ ?

ஸம்ஸ்கிருத பாஷையில் படித்துத் தேர்ச்சி பெறுதல் கடினமான தாதலால் அதைத் தேச முழுமைக்கும் பொதுப் பாஷையாகச் செய்தல் சௌகரியப் படாதென்று சிலர் சொல்கிறார்கள். பழைய வழிப்படி படிப்ப தானால் இவர்கள் சொல்வது ஒருவாறு மெய்யெனலாம். ஆனால் இக்காலத் தில் அந்நிலைமை கடந்து சென்று விட்டது. இப்போது பண்டாரகர் என் னும் பம்பாய்ப் பண்டிதர் உபாத்தியாயர் இல்லாமலே ஸம்ஸ்கிருத பாஷை யை ஏழெட்டு மாதங்களில் கற்றுக் கொள்ளும் படியான ஆரம்ப நூல்கள் எழுதியிருக்கிறார். இவற்றுள் முதல் புஸ்தகம் ஏற்கனவே தமிழில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. இவ்வழியை இன்னும் சுலபமாகச் செய்ய லாம். பஞ்ச தந்திரத்தை அர்த்தத்துடன் மூன்று முறை உருப் போட்டால் எவனும் தடதட வென்று தட்டில்லாமல் ஸம்ஸ்கிருதம் பேசக்கூடிய திறமை பெற்று விடுவான். பாணன், பட்டி முதலிய புலவர்கள் வருந்திச் சமைத்த நடை பழகவே நாளாகும். நாடோடியாக வழங்குதற் குரிய பாஷை பழ குவதற்கு, இயற்கை நடையைத் தழுவி எழுதப்பட்ட பஞ்ச தந்திரம் முத லிய நூல்களே போதும். *(23 : 74-75)*

31. எளிதாக ஸம்ஸ்க்ருதம் படிக்கும் வழி :

1921 ஜனவரி 11ஆந் தேதி சுதேச மித்திரனில் 'ஒளிர் மணிக் கோவை' என்ற மகுடத்தின் கீழ் எழுதப் பட்டிருந்த குறிப்புக்களில் "இந்தி யாவுக்கொரு பொதுப் பாஷை" என்ற தலைப்பின் கீழுள்ள குறிப்பைப் பார்த்துவிட்டு, நம் சந்தாதார் ஒருவர் : (1) பண்டாரகரால் வெளியிடப் பட்டுத் தமிழில் மொழி பெயர்க்கப் பட்ட புஸ்தகம், (2) பஞ்ச தந்திரம் —தமிழ் மொழி பெயர்ப்புடன் – ஆகிய இவ்விரண்டும் எங்கே கிடைக் கும் ?" என்று நம்மைக் கேட்கிறார். வடமொழியும் இங்கிலீஷும் கலந்து பண்டாரகர் வெளிப்படுத்தி யிருக்கும் மூல நூல் சென்னையில் பெரிய பாட சாலைப் புஸ்தக வியாபாரி எவரிடத்திலும் பெற்றுக் கொள்ளலாம். அதன் தமிழ் மொழி பெயர்ப்பு, திருவண்ணாமலை டேனிஷ் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதருக் கெழுதினால் கிடைக்குமென்று தெரிகிறது. பஞ்சதந்தி ரம், வடமொழியிலுள்ள மூல நூலுக்கு நேரான தமிழ் மொழிபெயர்ப்பு இதுவரை யாராலும் செய்யப்பட வில்லை யென்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தாண்டவராய முதலியார் எழுதியிருக்கும் தமிழ்ப் பஞ்ச தந்த்ரம் ஸம்ஸ்க்ருதத்தி லிருந்து நேராக மொழி பெயர்க்

கப் பட்ட தன்று. மஹாராஷ்ட்ர பாஷையில் பஞ்ச தந்திரக் கதைகளை மட்டும் ஒருவாறு தொகுத்திருந்த தொரு நூலினின்றும் கதைகளைத் திரட்டித் தமிழில் அந்த முதலியார் வெளிப்படுத்தி விட்டாரென்று தெரிய வருகிறது. எனவே, பூமண்டல முழுமையிலும் தனக்கொரு நிகரில்லாத ராஜ்ய நீதி சாஸ்த்ரமும் ஹிந்துக்களின் அறிவு நுட்பத்துக்குப் பெரும் புகழுமாகி விளங்கும் ஸம்ஸ்க்ருத பஞ்ச தந்திரம் தமிழில் இயற்கையாக மொழி பெயர்க்கப் படவில்லை. அதன் அழகான நீதி வசனங்களில் பெரும்பான்மை தமிழ் மொழி பெயர்ப்பிலே யில்லை. மேலும், தமிழ்ப் பஞ்ச தந்தரத்தைப் படித்தால் இஃதொரு ஸாமான்யமான கதைப் புஸ்தகமென்று தோன்றுகிறதேயன்றி, உலகத்து ராஜ்ய தந்த்ர சாஸ்த்ரங்களுள்ளே இது சிரோமணி யென்பது துலங்கவில்லை. இப்போது தமிழ் நாட்டில் புதியதோர் அறிவுக் கிளர்ச்சி எழுச்சி கொண்டிருப்பதி னின்றும், இனி விரைவிலே அந்நூல் தமிழில் நேராக மொழி பெயர்க்கப் படுமென்பது நிச்சயந்தான். ஆயினும், தற்காலத்தில் அவ்வித மொழி பெயர்ப்பில்லை. எனினும், இது பற்றி மனஞ்சலிக்க வேண்டாம். அன்றைக் குறிப்பில் எழுதியிருந்தபடி, முதல் நூல் (பஞ்ச தந்த்ரம்) வட மொழியில் மிக மிக எளிய, மிக ஸரளமான, மிகத் தெளிந்த, ஸாமான்ய நடையில் அமைந்திருக்கிறது. அதன் பொருள் எத்தனை அபூர்வமாகவும், ஆழமாகவும், நுட்பமாகவும், ஆச்சரியமாகவும் அமைந்திருக்கிறதோ அத்தனை எளிமையாகவும் ஸரளமாகவும் அதன் வாக்ய நடை அமைந்துள்ளது. எனவே, அன்று தெரிவித்தபடி பண்டாரகர் முதற் பாட புஸ்தகத்தையும், இரண்டாம் பாட புஸ்தகத்தில் ஒரு பகுதியையும் ஏழெட்டு மாதங்களுக்குள் படித்துணர்ந்து கொண்டால், பிறகு பஞ்ச தந்த்ரத்தை மூலத்திலேயே, பிறருதவி வேண்டாமல் வாசித்து யாரும் பொருளறிந்து கொள்ளலாம். (22 : 282-284)

32. சென்னை கவர்ன்மெண்டாரும் டாக்டர் போப்பும்:

டாக்டர் போப் இப்போது இங்கிலாந்தில் இருக்கிறார். இவர் தமிழ் மொழியிலே தக்க பயிற்சி உள்ளவ ரென்பதும், திருவாசகம், திருக்குறள் முதலிய நூல்களுக்கு இங்கிலீஷ் மொழி பெயர்த்து எழுதியிருக்கிறார் என்பதும் எல்லோரும் அறிவார்கள். இவர் தமிழ் அகராதி ஒன்று தொகுக்கப் போவதாகவும், அதன் பொருட்டு வருஷம் ஒன்றுக்கு 6,000 ரூபாய் வீதம் ஐந்து வருஷங்களில் 30,000 ரூ. உதவி செய்ய வேண்டுமென்று சென்னை கவர்ன்மெண்டார் நிச்சயித் திருப்பதாகவும் அறிவிக்கப் படுகிறது.

டாக்டர் போப் நல்ல தமிழ் வித்வான் என்பதை ஒப்புக் கொள்கிறோம். ஆனால், தமிழ் அகராதி தொகுக்கும் விஷயத்தில் அவர் தமிழர்களைப்போல அத்தனை சிறந்த அதிகாரியாக மாட்டார். மேலும் இந்தியாவி

விருந்தார் என்ற போதிலும் நம்மவர்களின் உதவியைக் கொண்டு அவர் ஏதேனும் செய்யலாம். இங்கிலாந்திலே அவருக்குப் போதுமான உதவிகளும், சவுகரியங்களும் கிடைக்க மாட்டா. இதுவரை இருக்கும் அகராதிகளை வைத்துக் கொண்டு அதனைச் சிறிது புதுமைப் படுத்தி அச்சிட்டுத் தரத்தான் அவரால் முடியும். மகா மஹோபத்தியாய சாமிநாதய்யர் போன்ற வித்வான்கள் புதிதாகத் தமிழ் அகராதி தொகுக்க ஆரம்பிப் பார்களாயின், அது எத்தனையோ சிறப்பாக இருக்கும். ஆனால், அதற்குக் கவர்ன்மெண்டார் இத்தனை ஆத்கிரத்துடன் உதவிக்கு வந்திருக்க மாட்டார்கள். பழங்காலத்து நூல் பிரசுரிக்கும் விஷயத்திலே சாமிநாதய்யர் அவர்கள் பட்டிருக்கும் சிரமத்தில் எட்டில் ஒரு பங்கு போப் பாதிரியார் பட்டிருப்பாரானால் இதற்கு முன் கவர்ன்மெண்டார் அவரைக் குபேரனாக்கி இருப்பார்களல்லவா?

ஆனால் வெள்ளை நிறம் கொண்ட தேவியின் அனுக்கிரகம் சாமிநாதய்யர் அவர்களிடம் பரிபூரணமாக இருந்த போதிலும் வெள்ளை நிறம் கொண்ட தேவர் (ஐரோப்பியர்) களின் கிருபை போப் பாதிரியாரிடம் நிரம்ப இருக்கின்றன. (29 : 277-278)

33. "விளம்பர சபை"யின் தமிழ்:

ராஜாங்கத்தாரால் நியமிக்கப் பட்டிருக்கும் விளம்பர ஸபையார் பத்திரிகை படிப்போருக்காகவும், பொது ஜனங்களுக்காகவும் அடிக்கடி துண்டுப் பத்திரிகைகள் முதலியன ப்ரசுரம் செய்து வருதல் நேசர்களுக்குத் தெரிந்த செய்தியேயாம். ஆனால் அந்த ஸபையாரின் ப்ரசுரங்களில் உள்ள இலக்கணத் தவறுகளுக்கும், பிரயோகத் தவறுகளுக்கும் கணக்கேயில்லை. தமிழ் பாஷையில் வெளிவரும் ப்ரசுரங்களைப் பற்றி மாத்திரம் நான் இங்கு பேசுகிறேன். பெரும்பாலும், மற்ற தேச பாஷைகளிலும் இதே மாதிரியாகத்தான் இருக்கக் கூடுமென்று ஸம்சயிக்கிறேன்.

பொதுவாக ராஜாங்கத்தாரின் கெஜட்டுகள், நியாயஸ்தல மொழி பெயர்ப்புகள் முதலிய முக்கியமான தமிழ் ப்ரசுரங்களில் வழுக்கள் நிறைந்ததாய், ஸாதாரணத் தமிழருக் கர்த்தமாக வழியில்லாத தமிழ் பாஷையே வழங்கி வருதல் ப்ரஸித்தம். எனினும், ஜனங்களுக் கர்த்தந் தெரியாமல் "கெஜட்" வர்த்தமானங்கள் ப்ரசுரிப்பதைக் காட்டிலும், கக்ஷிப் ப்ரதி கக்ஷிகளும், தர்க்கங்களும் நடத்தி ஜனங்களுக்கு அபிப்பிராய மாறுதலுண்டாகும்படி சர்க்கார் வக்கீல் வேலை செய்ய வந்த இடத்தில் ஜனங்களுக்கு விளங்காத, இலக்கணத் தவறுகள் நிறைந்த பாஷையை வழங்குதல் நூறு மடங்கு அதிகப் பரிஹாஸத்துக் கிடமாகு மென்பதை ராஜாங்கத் தாருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (22 : 336-337)

34. காலக் கண்ணுடி என்னும் கட்டுரையில் இருந்து:

..... இந்தியாவிலுள்ள தேச பாஷைப் பத்திரிகைகளின் நிலைமை சில அம்சங்களில் மிகவும் பரிதாபத்துக் கிடமாக இருக்கிறது. கடிதங்க ளெழுதுவோரில் பலர் இலக்கணப் பயிற்சிகூட இல்லாமல் பத்திரிகைக் கெழு தத் துணிகிறுர்கள். அவற்றைப் பத்திராதிபர்கள் சில ஸமயங்களில் பிழை களையாமலே ப்ரசுரம் செய்து விடுகிறுர்கள். இதுவுமன்றி இலக்கணப் பயிற்சியற்ற சிலர் பத்திராதிபராக இருக்கும் விநோதத்தையும் இந் நாட் டிலே காண்கிறோம். நவீன நாகரீகத்தின் முக்யச் சின்னங்களி லொன்று கிய பத்திரிகைத் தொழிலில் நாம் மேன்மை பெறவேண்டுமாஞல் மேற்கூறப் பட்ட பிழைகளைத் தீர்த்துக் கொள்ளக் கடவோம். (22 : 458-459)

35. பத்திரிகைகளில் "பால்" வேற்றுமை:

உயிரில்லாத வஸ்துக்களுக்குக் கூட ஆண்பால், பெண்பால் கற்பித் தல் கவிகளின் வழக்கம். ஸம்ஸ்கிருதம் முதலிய புராதன பாஷைகள் சில வற்றிலும், ப்ரெஞ்ச், ஹிந்தி முதலிய நவீன பாஷைகள் சில வற்றிலும் பெரும்பான்மையான பொருட் பெயர்களுக்கு மட்டுமேயன்றி, குணப் பெயர் களுக்குங் கூடப் பால் வேற்றுமைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அந்த பாஷைகளைக் கற்போர் சொற்களின் இறுதி எழுத்துக்களைக் கொண்டும், நெடுங்கால அனுபவத்தைக் கொண்டும் இன்ன சொல் இன்ன பாலைச் சேர்ந்த தென்று நிர்ணயித்துக் கொள்ளுகிறுர்கள். ஆனுல், தமிழ், இங்கிலீஷ் முத லிய பெரும்பான்மையான பாஷைகளில் இந்தக் கஷ்டம் கிடையாது. "மக் கள், தேவர், நரகர் உயர்திணை. மற்றுயி ருள்ளவும் இல்லவும் அஃறிணை" என்ற தமிழிலக்கண விதியே பொதுவாக எல்லா பாஷைகளுக்கும் பொருந்தி நிற்கிறது. எனினும், இப்போது சிறிது காலமாகத் தமிழிலேயே பத்திரிகை களின் பெயர்களுக்குச் சிலர் ஆண்பால், பெண்பால் வகுக்கத் தொடங்கி யிருப்பது மிகவும் விநோதமாகத் தோன்றுவதால் இங்கு அதைக் குறித்து எழுத நேர்ந்தது.

முதலாவதாக இவ் வழக்கம் "தேச பக்தன்" பத்திரிகையில் தொடக்க மெய்திற் றென்று நினைக்கிறோம். அப் பத்திரிகையின் பழைய பத்திராதிபராகிய ஸ்ரீமான் கலியாண ஸுந்தர முதலியாருடைய காலந் தொட்டே அதில், "சுதேச மித்திரன் சொல்லுகிறுன்," "தேச பக்தன் சொல்லுகிறுன்" என்பன போன்ற பிரயோகங்கள் வழங்கி வருகின்றன. இப்போது ஸ்ரீமான் முதலியார் நடத்தி வரும் "நவ சக்தி"ப் பத்திரிகை யிலும் அவ்வழக்க மிருந்து வருகிறது. எனவே, சில தினங்களுக்கு முன் ஏதோ தொழிலாளர் விஷயமாக மேற் கூறிய இரண்டு பத்திரிகைகளுக்

குள்ளே எழுந்திருக்கும் விவாதம் மிகவும் ரஸமாக இருக்கிறது. ''தேச பக்தனை'' ஆண்பாலாக்கி ஸ்ரீ முதலியார் எழுதி வருகிறார். ''தேச பக்தன்'' புதிய பத்திராதிபரோ ''நவசக்தி''யைப் பெண்பாலாக்கி விட்டார்! திருஷ்டாந்தமாக மேற்படி ஆண்பால் பத்திரிகையிலுள்ள பின் வரும் வசனங்களைக் கவனியுங்கள்: ''தேச பக்தன் தன் பிரதிநிதியை ஏன் அனுப்ப வில்லையென்று நவசக்தி கேட்கிறாள்.'' ''அவர் சொல்லி யனுப்பியதையும் நவசக்தி மறந்து விட்டாள் போலும்.'' இந்தப் புதிய வழி ரஸமாகத்தான் இருக்கிறது. ஆனால், இதைப் பொது வழக்கமாக்க முயன்றால், பலவித ஸங்கடங்கள் ஏற்படுமென்று தோன்றுகிறது. முக்ய மாக, அன்ய பாஷைப் பத்திரிகைகளைக் குறித்துப் பேசு மிடத்தே தான் அதிகக் கஷ்டம். ''லண்டன் டைம்ஸ்,'' ''ஈவினிங் ந்யூஸ்'' என்பன பல வின் பாற் பெயர்களாதலால், 'டைம்ஸ் சொல்லுகின்றன,' 'ஈவினிங் ந்யூஸ் பரிஹாஸம் பண்ணுகின்றன' என் றெழுத நேரும்! மேலும் 'பெர் லினர் தகப்ளாத், ப்ராங்க் புர்த்தெர் ஜெய்துங்' என்பவை போன்ற ஜெர் மானியப் பத்திரிகை நாமங்கள் ஆண்பாலோ, பெண்பாலோ, ஒன்றன் பாலோ, பலர்பாலோ, பலவின் பாலோ அறிகிலோம். இவை போன்ற சிரமங்களைக் கருதி ஸாதாரணமாக, வழக்கம்போலவே எல்லாப் பத்திரி கைகளின் பெயர்களையும் ஒன்றன் பாலாகவே வழங்கி விடுதல் நன்றென்று நினைக்கிறேன். *(22 : 400-402)*

36. தமிழ் நாட்டு மாதருக்கு என்னும் கட்டுரையில் இருந்து:

......வெவ்வேறு வகைப்பட்ட இரண்டு நாகரிகங்கள் வந்து கூடும் போது அவற்றுள் ஒன்று மிகவும் வலியதாகவும் மற்றொன்று மிகவும் பலவீன மாகவும் இருக்குமாயின், வலியது வலிமையற்றதை இருந்த இடம் தெரி யாமல் விழுங்கி விடும். வலிமையற்ற நாகரிகத்துக்குரிய பாஷையும் மத மும் முக்கியத் தன்மையற்ற புற ஆசாரங்கள் மாத்திரமே யன்றி விவாக முறை முதலிய முக்கிய ஆசாரங்களும் அழிந்து மறைகின்றன. அந்த நாகரி கத்தைக் காத்து வந்த ஜனங்கள் பலமுடைய நாகரிகஸ்தரின் பாஷை மதம் முதலியவற்றைக் கைக்கொள்ளுகிறார்கள். *(16 : 198)*

37. தமிழ் நாட்டு நாகரிகம் என்னும் கட்டுரையில் இருந்து:

மிகப் பழைய தமிழ் பாஷையும் மிகவும் புராதனமான மலையாள பாஷையும் ஒரே வஸ்துதான். பிற் காலத்திலும் சேரநாடு தமிழகத்தில் ஒரு பகுதியாகவே கணக்கிடப் பட்டு வந்தது. சேரரெனவரும் தமிழர சரே. தமிழ் நாட்டு வேந்தருள்ளே சேர்த் தெண்ணப்பட்டு வந்தனர். பாஷையை யொப்பவே நாகரிக விஷயத்திலும் மிகப் பழைய தமிழ் நாக ரிகமும் மலையாள நாகரிகமும் ஒரே வஸ்துதான். *(16-20)*

38. ரெயில்வே ஸ்தானம் என்னும் கதையில் இருந்து:

...... ஹிந்தி, உருது, ஹிந்துஸ்தானி எல்லாம் ஒரே பாஷைதான். முகலாய ராஜாக்கள் பாரசீக பாஷையிலேதான் பெரும்பாலும் ஆரம்பத்தில் விவகாரம் நடத்தி வந்தார்கள். பின்னிட்டு அவர்கள் தமக்கும் தம்முடைய பரிவாரங்களுக்கும் இந்த தேசத்துப் பாஷையாகிய ஹிந்தியையே பொது பாஷையாகக் கைக் கொண்டார்கள் ஹிந்தி பாஷை ஸம்ஸ்கிருதத்திலிருந்து பிறந்தது. அது ஸம்ஸ்கிருத பாஷையின் சிதைவு. அதை ஹிந்துக்கள் தேவநாகரியில் எழுதி ஸ்வயம்புவாகப் பேசுகிருர்கள். அதையே பார்ஸி லிபியில் எழுதிக் கொண்டு பல பார்ஸி, அரபு மொழிகளைக் கலந்து முஸல்மான்கள் பேசியபோது அதற்கு ஹிந்துஸ்தானி அல்லது உருது என்று பெயர் வழங்கினுர்கள். உருது என்ருல் கூடார பாஷை என்று அர்த்தம். அதாவது முகலாய ராஜ்யத்தின் சேனைகள் கூடாரம் அடித்துக் கொண்டு பல தேசத்துப் போர் வீரர்கள் கலந்திருக்கையில் அங்கு தோன்றிய கலப்புப் பாஷை என்று பொருள். எனக்கு ஹிந்திதான் மிகவும் நன்ருகத் தெரியும். எனினும் ஹிந்துஸ்தானி அல்லது உருது மேற்படி ஹிந்தி பாஷையில் பார்ஸி, அரபிச் சொற்கள் சேர்ந்ததே யாகுமாதலால் தான் இதிலும் நல்ல பழக்க முடையவனுனேன். *(16-217)*

39. ஒரே நாடு என்னும் கட்டுரையில் இருந்து :

...... தெலுங்கர் தமிழரை ஆண்ட அடையாளங்கள் நமது பாஷையிலும் ஆகாரங்களிலும் அழிக்க முடியாதபடி பதிந்து கிடக்கின்றன. நமது சங்கீதமும் நாட்டியமும் தெலுங்கிலேயே இன்றுவரை முழுகிக் கிடக்கின்றன. பாடகர்கள் பாடும் கீர்த்தனங்களில் உயர்தர மெல்லாம் தெலுங்குக் கீர்த்தனங்கள். தாசிகள் ஆட்டத்தில் பாடும் வர்ணங்கள், ஜவாளிகள் முதலியவற்றில் நல்ல உருப்படி எல்லாம் தெலுங்கு. நம் கிராமங்களிலுள்ள தெலுங்க ரெட்டிகளும், நாயுடுமாரும், ஆந்திரப் பிராமணப் புரோகிதர்களும், தெலுங்கு தாசிகளும் ராயர் சமஸ்தான காலத்தில் இங்கே நிலைபெற்றவர்கள். நமது விவாக காலங்களில் பாடும் பத்தியம், லாலி முதலானவை எல்லாம் தெலுங்கு முறை. நமது பாஷையில் கவனம் (ஆழ்ந்து நோக்குதல்) ஸொகஸு, எச்சரிக்கை, துரை, வாடிக்கை, கொஞ்சம் முதலிய பதிற்றுக் கணக்கான தெலுங்குச் சொற்கள் சேர்ந்திருக்கின்றன ...... *(24 : 87-88)*